


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 பிப்ரவரி 05, 2009 புரட்சி 8 முழக்கம் 04 விலை : ரூ.2.50


## விமான முற்றுகைக்குச் சென்ற கொளத்தூர் மணி – மணியரசன் உள்ளிட்ட

# 255 தோழர்கள் கைது; பிணையில் விடுதலை





ஈழத் தமிழரைக் கொன்று குவிக்கும் சிங்கள அரசுக்கு இந்தியா ஆயுதங்கள் வழங்குவதை எதிர்த்து, தஞ்சையில் - விமான நிலையத்தை முற்றுகையிடச் சென்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.தே.பொ.க. பொதுச்செயலாளர் மணியரசன் உள்ளிட்ட 255 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். வழக்குப் பதிவு செய்த நிலையில் நீதிபதி அனைவரையும் பிணையில் விடுதலை செய்தார்.

ஜன. 31 ஆம் தேதி காலை 10 மணியளவில் முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்க தோழர்கள் தஞ்சை விமான நிலையம் அருகே திரண்டனர். பெரியார் திராவிடர் கழகம், த.தே.பொ.க., ஆதித் தமிழர் பேரவை, தமிழ்த் தேச விடுதலை இயக்கம், தமிழர் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் காலை 9 மணியிலிருந்தே குவியத் தொடங்கினர். இந்தியாவின் கபட நாடகத்தை விளக்கி, கொளத்தூர் மணி, மணியரசன் பேசியதைத் தொடர்ந்து முற்றுகையிட ஊர்வலமாகப் புறப்பட்டனர். புறப்பட்ட சில நிமிடங்களில் காவல் துறையினர் தடுத்து கைது செய்தனர். அனைவரும் திருமண மண்டபம் ஒன்றில் வைக்கப்பட்டனர். வழக்கறிஞர் கு.க. மணி (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), வழக்கறிஞர் நல்லதுரை (வழக்கறிஞர் சங்க செயலர்) ஆகியோர் திருமண மண்டபம் வந்து வாழ்த்திப் பேசினர்.

இரவு 10 மணியளவில் அனைவரும் சிறைக் காவலுக்கு அனுப்பப்படுவதாக காவல்துறையினர் தெரிவித்தனர். குழந்தைகளுடன் கைதான 10 பெண்கள் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர். நள்ளிரவு இரண்டு மணியளவில் தஞ்சை குற்றவியல் நீதிமன்ற நடுவர் ஆர்.கோவிந்தராஜ் முன்பாக அனைவரும் நேர் நிறுத்தப்பட்டனர். செய்தி அறிந்த நாற்பதுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் நீதிமன்றம் விரைந்தனர். திராவிடர் கழகத்தைச் சார்ந்த வழக்கறிஞர் மா. கருணாநிதி அரசின் முதல் தகவல் அறிக்கையில் தடையை மீற முயற்சி செய்தார்கள் என்று

(8 ஆம் பக்கம்)

# ‘குடிஅரசு’ வழக்கு: தஞ்சை இரத்தினகிரி மனு தள்ளுபடி

குடிஅரசு தொகுப்புகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடக் கூடாது என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மீது சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் தலைவர் கி. வீரமணி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அந்த “குற்றத்துக்காக” ரூ.15 லட்சம் கழகத்திடம் இழப்பீடும் கேட்டு இருந்தார். இந்த வழக்கில் தஞ்சை பகுத்தறிவாளர் கழகத்தைச் சார்ந்த இரத்தினகிரி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணனுக்கு எதிராக தன்னையும் இணைத்துக் கொள்ளுமாறு உயர்நீதிமன்றத்தில் வழக்கு மனு தாக்கல் செய்திருந்தார். இரத்தினகிரி தாக்கல் செய்திருந்த மனு மீது முதலில் விசாரணை நடத்திய பிறகே முக்கிய வழக்கை நடத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்த கி.வீரமணி சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இரத்தினகிரி தனது மனுவில் -

கி.வீரமணி கேட்டுக் கொண்டதற்காக - அவருக்காகவே ‘குடிஅரசு’ பத்திரிகைகளில் வெளிவந்த பெரியார் கருத்துகளை தாம் சேகரித்து - கி.வீரமணியிடம் தந்ததாகவும், அதைத் தான் கொளத்தூர் மணி வெளியிட்டுள்ளதாகவும் - எனவே இந்த வழக்கில் தன்னையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இதை எதிர்த்து வாதிட்ட வழக்கறிஞர் துரைசாமி குறிப்பிட்டதாவது:

“பெரியார் எழுத்துக்களைத் தொகுக்கும் பணி தம்மிடம் ஒப்படைக்கப் பட்டது என்கிறார் இரத்தினகிரி. அப்படி ஒப்படைக்கப்பட்டதற்கான சான்று ஆவணங்கள் ஏதுமில்லை. கொளத்தூர் மணி - பெரியார் கருத்துகளைத் தொகுத்து நூலாக்கும் பணியை மேற்கொண்ட நிலையில், இரத்தினகிரி தாமாகவே முன் வந்து தம்மிடம் உள்ள பெரியாரின் ‘குடிஅரசு’களைத் தருவதாக கூறி, அதற்கு ரூ.5 லட்சம் பணம் கேட்டுள்ளார். இந்த வழக்கைத் தொடர்ந்துள்ள கி. வீரமணி, பெரியார் நூல்களைப் பதிப்பிக்கும் உரிமை தமது நிறுவனத்திடமே உள்ளது என்றும் - எனவே பெரியார் திராவிடர் கழகம் பதிப்பிப்பது, தமது பதிப்புரிமையில் குறுக்கிடுவதாகும் என்று கூறியுள்ளார். மனுதாரர் இரத்தினகிரி, கி.வீரமணியின் கீழ் அவரது உத்தரவுப்படி செயல்பட்டிருப்பவர் என்று கூறுவதால், அவரது வாதப்படியே பதிப்புரிமை தொடர்பான வழக்கில் அவர் தன்னை இணைத்துக் கொள்ள முடியாது. வழக்கில் அவசியமானவராகவும், தலையீடு இன்றி தீர்ப்பை வழங்க இயலாத நிலையிலும் உள்ள ஒருவர் தான் வழக்கில் தலையிட முடியும் என்று சிவில் சட்ட நடைமுறைகள் தெளிவாகக் கூறுகின்றன. இந்த வழக்கில் இரத்தினகிரி நேரடியாக தொடர்புடையவர் அல்ல. கொளத்தூர் மணி தொகுத்திருந்த பெரியாரின் ‘குடிஅரசு’ எழுத்துக்களை பாராட்டி, கொளத்தூர் மணிக்கு கடிதம் எழுதியதோடு, அத்தொகுப்பை தமக்கு அனுப்பி வைக்குமாறு காசோலையும் இரத்தினகிரி அனுப்பியுள்ளார். உண்மையில் இரத்தினகிரியிடமிருந்த தொகுப்புகளைத்தான் கொளத்தூர் மணி வெளியிட்டிருந்தார் என்றால், இரத்தினகிரி, கொளத்தூர் மணியின் தொகுப்பு முயற்சிகளைப் பாராட்டி, அதைப் பெறுவதற்கு காசோலையும் ஏன் அனுப்ப வேண்டும்?” என்று துரைசாமி வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி எம்.ஜெயபால், 29.1.2009 அன்று வழங்கிய தீர்ப்பில், இரத்தினகிரியிடமிருந்த தொகுப்புதான் கொளத்தூர் மணி வெளியிட்டது என்ற கருத்தில் நீதிமன்றம் சந்தேகம் கொள்கிறது என்று கூறி இரத்தினகிரியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். வழக்கறிஞர் துரைசாமியுடன் வழக்கறிஞர் இளங்கோ ஆஜரானார்.

# சோனியாவின் கபட முகத்திரை கிழிகிறது!

ஈழத் தமிழர்கள் மீது இந்திய ராணுவம் - சிங்கள ராணுவத்தோடு நடத்தி வரும் இனப் படுகொலைக்கு உத்தரவிட்டு வழி நடத்தி வருபவர், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா தான் என்பது நாட்டுக்கு வெளிச்சமாகிவிட்டது. ராஜீவ் கொலையில் குற்றம் சுமத்தப்பட்டவர் மீது நளினிக்கு கருணைப் பார்வை இருந்ததுபோல் நடந்தவையெல்லாம் திட்டமிட்ட நாடகம் என்பதும் அம்பலமாகிவிட்டது.

சோனியாவின் கடந்த கால அரசியலை உன்னிப்பாகக் கவனித்தால், எப்போதுமே அவர் குரூரமான பழிவாங்கும் உணர்வுடன் செயல்படக் கூடியவர் என்பதைப் புரிந்துக் கொள்ள முடியும். உதாரணத்துக்கு ஜெயின் ஆணைய விசாரணை அறிக்கையைக் கூறலாம். ராஜீவ் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி ஆராய அவர் மரணத்துக்குப் பிறகு நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையம் தான் ஜெயின் ஆணையம். அந்த ஆணையம் இடைக்கால அறிக்கைஒன்றை தாக்கல் செய்தபோது அதை அரசியலாக்குவதில் தீவிரம் காட்டி, மத்தியில் நடந்து கொண்டிருந்த அய்க்கிய முன்னணி ஆட்சியையே கவிழ்த்தவர்தான் சோனியா. அந்த முன்னணியில் இடம் பெற்றிருந்த தி.மு.க.வை - அமைச்சர் பதவியிலிருந்து நீக்காவிட்டால் வெளியிலிருந்து காங்கிரஸ் தரும் ஆதரவை திரும்பப் பெறும் என்று மிரட்டினார்; என்ன நடந்தது?

ஜெயின் கமிஷன் அறிக்கையை முன் கூட்டியே ‘இந்தியா டுடே’ என்ற பா.ஜ.க. ஆதரவு ஏடு வெளியிட்டவுடன் நவம்பர் 11 ஆம் தேதி - கல்கத்தா நேதாஜி இன்டோர் ஸ்டேடியத்தில் நடந்த ஒரு பேரணியில், காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி இது பற்றிப் பேசினார். “இந்த அறிக்கைக்கு அவ்வளவு முக்கியத்துவம் தர வேண்டிய அவசியமில்லை. இதனால் அய்க்கிய முன்னணிக்கு காங்கிரஸ் தந்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ளும் நிலையும் வராது”.

அதே நாளில் காங்கிரஸ் தலைவர்களான ஜிதேந்திர பிரசாத், கருணாகரன் ஆகியோர் டெல்லியில் பேசுகையில் இதற்கு நேர்மாறாக இந்த அறிக்கையை அலட்சியப்படுத்த முடியாது என்று பேசினார். இவர்கள் சோனியாவின் தீவிர ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கேசரியின் - எதிர்ப்பாளரான அர்ஜுன் சிங் முதலில் இதில் அடக்கி வாசித்தவர், சோனியாவை சந்தித்தப் பிறகு, தீவிரம் காட்ட ஆரம்பித்தார். இதை வைத்து கேசரியின் முக்கியத்துவத்தை குறைக்கலாம் என்பது இவரின் திட்டம்.

நவம்பர் 13-ம் நாள் பிரதமர் குஜ்ரால், கேசரியை அழைத்து விருந்தளித்து, பத்திரிகையில் வந்துள்ள ஜெயின் கமிஷன் அறிக்கையைப் பற்றி விவாதித்தார். குஜ்ரால் எடுத்து வைத்த வாதங்களில் கேசரி முழு திருப்தி அடைந்தார்.

அடுத்த நாள் அர்ஜுன் சிங்கிடமும் மூத்த தலைவர்களுடனும், முதல் நாள் பிரதமர் அளித்த விருந்தில் நடந்த விவாதத்தை கேசரி விளக்கும் போது, அவர்கள் கேசரிக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். ஜெயின் அறிக்கையை பெரிதுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

நிலையை கேசரி ஊகித்துக் கொண்டார். அதற்குப் பிறகு தான் வேறு வழியின்றி சோனியாவை சந்தித்திருக்கிறார். சோனியா கேசரியை எச்சரிக்கிறார். அய்க்கிய முன்னணி ஆட்சியைக் கலைக்க இதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் என்று உத்தரவிடுகிறார்.

அடுத்த நாள் கேசரி கூட்டிய காங்கிரஸ் காரிய கமிட்டியை, முக்கிய உறுப்பினர்கள் புறக்கணித்து விட்டார்கள். கட்சிக்குள் தான் தனிமைப் படுத்தப்படுவதை உணர்ந்த கேசரி, தனது பதவியைத்தக்க வைத்துக் கொள்ள ஜெயின் அறிக்கையை கையில் எடுக்க முடிவு செய்கிறார்.

நாடாளுமன்றத்தில் ஜெயின் அறிக்கையை விவாதிக்கவே அனுமதிக்கக் கூடாது என்று காங்கிரசார் முடிவுசெய்து, அவையில் அமளியில் ஈடுபட்டு, நாடாளுமன்றத்தையே முடக்கினார்கள்.

ஜெயின் ஆணையம் - ராஜீவ் கொலையில் தி.மு.க.வை மட்டுமல்ல, ஒட்டு மொத்த தமிழர்களையுமே குற்றம் சாட்டியிருந்தது. தி.மு.க.வைப் பழிவாங்கத் துடித்த சோனியா, அய்க்கிய முன்னணி ஆட்சியிலிருந்து தி.மு.க.வை விலக்க வேண்டும் என்று காங்கிரசார் மூலம் நாடாளுமன்றத்தில் ரகளை செய்ய வைத்தார். இல்லையேல் ஆட்சிக்கு வெளியிலிருந்து தரும் ஆதரவைத் திரும்பப் பெறுவோம் என்று மிரட்டினார்.

தி.மு.க.வை வெளியேற்ற - பிரதமர் குஜ்ரால் தலைமையிலான அய்க்கிய முன்னணி ஆட்சி மறுத்தது. ஜெயின் ஆணைய அறிக்கையை ஊதிப் பெரிதாக்கிய சோனியா காங்கிரஸ் ஆதரவைத் திரும்பப் பெற்று, மத்திய ஆட்சியை பதவி விலக வைத்தார்.

இவர் தான் சோனியா!

## “ஒரே தலைவர் கி.வீரமணி”

உச்சநீதிமன்றம் - முழு அடைப்பு (பந்த்) சட்ட விரோதம் என்று சொல்லியுள்ளதே தவிர, வேலை நிறுத்தத்தை சட்ட விரோதம் என்று சொல்லவில்லை. இரண்டுக்கும் வேறுபாடு இருப்பதையும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆனாலும், தமிழ் நாட்டில் ஈழத் தமிழர் படுகொலைகளைத் தடுக்கக் கோரும் போராட்டங்களையெல்லாம் ஆட்சியைக் கவிழ்க்கும் போராட்டமாகவே கலைஞர் ‘மிரட்சியில்’ அறிவித்து வருவதால், இலங்கைத் தமிழர் பாதுகாப்புஇயக்கம் அறிவித்துள்ள வேலை நிறுத்தத்தையும் சட்ட விரோதம் என்கிறார்.

தமிழர் தலைவர் கி.வீரமணி மிகுந்த விழிப் புணர்வோடு தமிழக அரசு முழு அடைப்புக்கு அனுமதி மறுத்துள்ளதாக தஞ்சையில் பேட்டி அளித்துள்ளார்.

ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கில் ராக்கெட்டுகளை வீசி கொத்து கொத்தாக இந்திய - சிங்கள ராணுவம் தமிழர்களை பிணமாக்கி வரும் நிலையில் கி.வீரமணி, மாணவர்கள் போராட்டம் நடத்தி, தமிழக ஆட்சிக்கு தொல்லை தரக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ளதோடு சட்டத்துக்குட்பட்டு செயல்படவேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார்.

வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தடை செய்து, போராட்டத்தில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பை கலைஞர்கூட தனது அறிக்கையாக விடுக்காமல், அதிகாரிகள் வழியாக அறிவித்துக் கொண்டிருக்கும் போது, அதை ஆதரித்து பகிரங்கமாக பேட்டி அளித்துள்ள ஒரே தலைவர் கி.வீரமணி மட்டும் தான் என்பது குறிப்பிடத்தக்கது. கி.வீரமணியின் இந்த ‘அசாத்தியமான’ ‘விசுவாசத்தை’க் கண்டு உலகத் தமிழர்கள் வியந்து போய் நிற்கிறார்கள்!

## கழகத் தோழர் லட்சுமணனை தாக்கிய காவல்துறை ஆய்வாளர்: மனித உரிமை ஆணையத்தில் புகார்

பெரம்பலூர் மாவட்டக் கழக அமைப்பாளர் இலட்சுமணனை, பெரம்பலூர் காவல்துறை ஆய்வாளர் ராஜசேகர் என்பவர் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மனித உரிமை ஆணையத்துக்கு புகார் தரப்பட்டுள்ளது. ராஜசேகர் மீது கிரிமினல் வழக்குத் தொடரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் 27 ஆம் தேதி பெரம்பலூர் பாரதிதாசன் கல்லூரி மாணவர்கள் ஈழத்தில் செத்து மடியும் தமிழினத்தைக் காக்க வற்புறுத்தி, வகுப்புகளைப் புறக்கணிக்கும் போராட்டம் நடத்த முடிவு செய்தனர். மாணவர்களை சந்திக்க கழக அமைப்பாளர் இலக்குமணனும் சென்றிருந்தார். கல்லூரி வாளகத்துக்குள் வந்த காவல்துறை ஆய்வாளர் ராஜசேகர் மாணவர்களிடம், “வகுப்புகளைப் புறக்கணிக்காமல் ஒழுங்காக கல்லூரிக்கு செல்லுங்கள். நான் நினைத்தால் உங்களின் எதிர்கால வாழ்க்கையே பாழாக்கும் வகையில் கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்குப் போட்டு உள்ளே தள்ளி விடுவேன். நீங்கள் எந்த வேலைக்கும் போக முடியாது” என்று அச்சுறுத்தினார்.

தமிழினத்துக்கு குரல் கொடுக்கப் போராடும் மாணவர்களை இப்படி மிரட்டாதீர்கள் என்று தோழர் லட்சுமணன் கூறியதைத் தொடர்ந்து, ஆத்திரமடைந்த அந்தக் காவல்துறை அதிகாரி, லட்சுமணனைப் பிடித்து காவல்துறை ஜீப்புக்குள் தள்ளி, காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று கடுமையாக தாக்கினார்.

கடுமையான சட்டப் பிரிவின் கீழ் பொய் வழக்குகளைப் பதிவு செய்தார். செய்தியறிந்த தோழர்கள் காவல் நிலையம் முன் திரண்டனர். நிலைமை மிகவும் பதட்டமாகியது.

தோழர் லட்சுமணன், பெரம்பலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். காவல்துறை ஆய்வாளரின் அடாவடிக்கு கடும் எதிர்ப்புகள் வந்ததைத் தொடர்ந்து, கடுமையான வழக்குப் பிரிவுகளை அந்த ஆய்வாளர் மாற்றினார்.

தொடர்ந்து பெரம்பலூர் மக்களிடம் அடாவடியாகவே நடந்து வரும் காவல்துறை ஆய்வாளர் ராஜசேகர் மீது மனித உரிமைக் கழகத்துக்கு புகார் தரப்பட்டுள்ளதை அறிந்த பலரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## போராடிய ஈழத்தமிழ் ஏதிலி மீது பொய் வழக்கு

ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் ராணுவத்துக்கு இந்தியா வழங்கிய ஆயுதங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்று பெரம்பலூர் அகதிகள் முகாமிலிருந்த சற்குணராசா என்ற ஈழத் தமிழர் அறிவித்தார். அரசு வழங்கிய குடியிருப்புகளை உதறி - அகதிகள் அனைவரும் வீதிக்கு வந்து குடியேறுவதாக அறிவித்தார். இதைத் தொடர்ந்து காவல்துறை சாராயம் காய்ச்சியதாக பொய் வழக்கு தொடர்ந்து கைது செய்து சிறையிலடைத்துள்ளது. சிறையில் தொடர்ந்து தண்ணீர் அருந்தாமல் பட்டினிப் போராட்டம் நடத்தி வருகிறார்.

## மணி சங்கர் அய்யருக்கு கருப்புக் கொடி

கடந்த 3 ஆம் தேதி பிற்பகல் சீர்காழி வந்த மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யருக்கு பெரியார் தி.க., விடுதலை சிறுத்தைகள், பா.ம.க.வினர் கறுப்புக் கொடி காட்டினர். 16 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

## இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் கழகம்

இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் - கடந்த 31 ஆம் தேதி சென்னை சர். பிட்டி தியாகராயர் அரங்கில் அதன் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தபசி. குமரன் (மாவட்ட கழகத் தலைவர்) கலந்து கொண்டனர். இயக்கம் அறிவித்துள்ள போரட்டங்களுக்கு கழகம் ஆதரவு தரும் என்று விடுதலை ராஜேந்திரன் அறிவித்தார்.

## போராளி முத்துக்குமாரின் இறுதி வேண்டுகோள்

# மாணவர்களே, போராட்டத்தைத் தொடருங்கள்!

***இனப்படுகொலையை நிறுத்தக் கோரி – தன்னைத் தானே தீக்கு இரையாக்கிய தமிழ்ஈழப் போராளி கு. முத்துக்குமார், தமது மரணசாசனமாக எழுதிய அறிக்கையின் முழு வடிவம் இது :***

*விதியே விதியே என் செய் நினைத்திட்டாய் என் தமிழ் சாதியை...*

*அன்பார்ந்த உழைக்கும் தமிழ் மக்களே...*

*வணக்கம். வேலைக்குப் போகும் அவசரத்திலிருக்கும் உங்களை இப்படி சந்திக்க நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன். ஆனால் வேறு வழியில்லை. என் பெயர் முத்துக்குமார். பத்திரிகையாளர் மற்றும் உதவி இயக்குநர். தற்சமயம் சென்னையில் உள்ள பத்திரிகை ஒன்றில் வேலை செய்து வருகிறேன்.*

*உங்களைப்போல் தான் நானும் தினமும் செய்தித்தாளையும், இணையத்தையும் பார்த்து பார்த்து, தினம் தினம் கொல்லப்பட்டு வரும் எம் சக தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், யோசிக்க முடியாமல் தவிக்கும் எத்தனையோ பேரில் ஒரு சாமானியன்.*

*வந்தாரை வாழ வைக்கும் செந்தமிழ்நாட்டில் சேட்டு என்றும், சேட்டனென்றும் வந்தவனெல்லாம் வாழ, சொந்த இரத்தம் ஈழத்தில் சாகிறது. அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று குரல் கொடுத்தால், ஆம் என்றோ இல்லை என்றோ எந்த பதிலும் சொல்லாமல் கள்ள மௌனம் சாதிக்கிறது இந்திய ஏகாதி பத்தியம். இந்தியாவின் போர் ஞாயமானதென்றால் அதை வெளிப்படையாகச் செய்ய வேண்டியது தானே.... ஏன் திருட்டுத்தனமாக செய்ய வேண்டும்?*


*ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்ற சொத்தை வாதத்தை வைத்துக் கொண்டு, சில தனி நபர்களின் பழி வாங்கல் சுயநல நோக்கங்களுக்காக ஒரு பெரும் மக்கள் சமூகத்தையே கொன்று குவிக்கத் துடிக்கிறது இந்திய அதிகார வர்க்கம்.*

*ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகள் மட்டும் குற்றம் சாட்டப்படவில்லை. தமிழக மக்களையும் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டியது ஜெயின் கமிஷன் அறிக்கை. அப்படியானால் நீங்களும் ராஜீவ் காந்தியைக் கொலை செய்த கொலைக்காரர்கள்தானா?*

*ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன் றான் என்றார்களே, இவர்கள்முல்லைத் தீவிலும் வன்னியிலும் செய்வதென்ன? அங்கு கொல்லப்படும் குழந்தையைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள். உங்களுக்கு அதுபோன்ற வயதில் ஒரு தங்கையோ, அக்காவோ இல்லையா? ராஜீவ் கொல்லப்பட்டபோது காங்கிரசின் முக்கிய தலைவர்கள் ஏன் அவருடன் இல்லை. கூட்டணிக் கட்சித் தலைவியான ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ராஜீவ் கலந்து கொள்ளும் அந்தப் பெரிய பொதுக் கூட்டத்தில் ஏன் பங்கெடுக்கப் போகவில்லை என்பது போன்ற கேள்விகள் கேட்கப்படாமலும், இவர்களால் பதில் சொல்லப்படாமலும் கிடக்கின்றன.*

*மக்களே யோசியுங்கள். இவர்கள்தான் உங்கள் தலைவர்களா? பணம், அடியாள் பலம் ஆகியவற்றைக் கொண்டு மிரட்டல் அரசியல் நடத்தி வரும் இவர்கள் நாளை நம் மீதே பாய மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? அப்படி பாய்ந்தால் யார் நம் பக்கம் இருக்கிறார்கள்?*

*கலைஞரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று அப்பொழுதும் அவர் அறிவிப்பார். பிறகு, மத்திய அரசைப் புரிந்து கொள்வார்(?!) பிறகு மறுபடி சரியான முடிவை எடுக்க வேண்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவார். இந்த மாசம், இந்த வாரம், இதுவரைக்கும் என்ன எவனும் தொட்டதில்ல என்கிற வின்னர் பட வடிவேல் காமெடியைப் போல.*



*காகிதம் எதையும் சாதிக்காது மக்களே! இப்பொழுது, உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டப் பெயரைச் சூடிக் கொள்ளவும், தமிழ்நாட்டில் இருக்கும் பணத்தையெல்லாம் தன் குடும்பத்திற்கே உரித்தாக்கவும் விரும்புகிற தேர்தல் காலத் தமிழர் கலைஞர் மக்களின் கோபத்தை எதிர்கொள்ள பயந்து மருத்துவமனையில் போய் ஒளிந்து கொண்டுள்ளார். தனது மந்திரிகளுக்கு அவசியப்பட்ட துறைகளுக்காக சண்டப்பிரசண்டம் செய்து சதிராடிய இந்த சூரப்புலி உண்மையில் தமிழுக்காகவோ, தமிழருக்காகவோ செய்ததென்ன? ஒருமுறை அவரே சொன்னார், "தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பானென்று". இவருடைய பம்மலாட்டத்தையெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக்கிறதே...*

*பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியிருக்கும் சட்டக் கல்லூரி மாணவர்களே... உங்கள் போராட்டம் வெற்றி பெற சக தமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உங்களோடு களம் இறங்க முடியாமைக்கும் வருந்துகிறேன். ஈழத் தமிழர் பிரச்சினை என்றில்லை, காவிரியில் தண்ணீர் விடச் சொல்லும் போராட்டமென்றாலும் சரி, தமிழ் நாட்டிற்காதரவான போராட்டம் எதுவாக இருந்தாலும் சரி, முதலில் களம் காண்பவர்கள் நீங்கள். வழக்கறிஞர்களும்தான். இந்த முறையும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே களத்தில் இறங்கியவர்கள் இந்த இரண்டு தரப்பும்தான்.*

*உங்களுடைய இந்த உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு இந்திய உளவுத்துறை சாதிய உணர்வைத் தூண்டி விட்டு, அம்பேத்கர் சட்டக்கல்லூரி அனர்த்தத்திற்கு வழி வகுத்திருக்கலாம் என்பது என் சந்தேகம். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன் கையெடுப்பவர்களாக இருந்தது மாணவர்கள் என்கிற சாதி தான். அதேபோல், தமிழ்நாட்டிலும் உங்களுக்கு முந்திய தலைமுறையொன்று இது போன்ற ஒரு சூழலில், இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கண்டு தான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சிகளைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.*

*ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்ததுபோல், உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக் கொள்ள விட்டு விடாதீர்கள். போராட்டத்தின் பலன்களை அபகரித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விசயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக் கூடாது என சட்டம் போட்டதுதான். ஆட்சிக்கு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டு மொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல்பவன் எவனாக இருந்தாலும், அவனை நம்பாதீர்கள். நமக்குள்ளிருக்கும் சாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக் கொள்ள இதுதான் தருணம்.*

*உண்ணாவிரதத்தையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு களம் காணுங்கள். உண்மையில், இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டு மொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. சிங்களச் சிப்பாய்களிடம் கற்றுக்கொள்கிற பாலியல் நுணுக்கங்களைத்தானே அவர்கள் அசாமில் அப்பாவிப் பெண்களிடம் பரிசோதித்துப் பார்த்தார்கள்! விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான சிங்கள வன்முறை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்ட வடகிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன்படுத்திக் கூர் பார்த்தார்கள்! போதாதற்கு, ஹைட்டியில் சமாதானப் பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நா.வின் இராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கை இராணுவம் அவரவர்களுடைய பாலியல் நடவடிக்கைகளுக்காக அடித்துத் துரத்தப்பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது - இந்தக் கூட்டணி கொள்கைக் கூட்டணியல்ல. பாலியல் கூட்டணி என்றல்லவா! ஆக, இந்திய-இலங்கை இராணுவக் கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும்கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாணவர்கள், ஜனநாயக அமைப்புகளையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.*

*இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தியிலிருந்து தலைவர்களை உருவாக்குங்கள். உங்கள் போராட்டத்தை சட்டக் கல்லூரி மாணவர்கள் என்ற இடத்திலிருந்து அனைத்து மாணவர்கள் என்று மாற்றுங்கள். உங்களிடமிருக்கும் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும். ஆட் பலம், பண பலம், அதிகார வெற்றியை உடைத்து எறியுங்கள். உங்களால் மட்டுமே இது முடியும். "நாங்கள் தமிழ் மாணவர்கள். தமிழ்நாட்டின் உயிரானவர்கள். இங்கு தமிழினம் அமைதி கொண்டிருந்தால் ஏடுகள் தூக்கி படிப்போம். எங்கள் தமிழர்க்கு இன்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்' என்ற காசி ஆனந்தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள்... என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதை புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள். எனக்கு சிகிச்சையோ, போஸ்ட்மார்டமோ செய்யப்போகும் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி மாணவர்களே... உங்கள் கையால் அறுபட நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காரணம், அகில இந்திய அளவில், மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக உயர்சாதி மாணவர்கள் போராடிக் கொண்டிருக்க, தன்னந்தனியாக நின்று, மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் போராடியவர்களல்லவா நீங்கள்? எனக்கு செய்வதெல்லாம் இருக்கட்டும். நம் சகோதரர்களான ஈழத் தமிழர்களுக்கு உங்கள் பங்குக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?*

*தமிழீழம் என்பது தமிழீழத்தின் தேவை மட்டுமே அல்ல. அது தமிழகத்தின் தேவையும் கூட காரணம், இராமேஸ்வரம் மீனவர்கள், உலகில் ஆடு, மாடுகளைப் பாதுகாப்பதற்குக் கூட சட்டமும், அமைப்புகளும் இருக்கின்றன. இராமேசுவரம் தமிழனும், ஈழத் தமிழனும் மாட்டைவிட, ஆட்டை விடக் கேவலமானவர்கள்? எல்லைத் தாண்டி போகும் மீனவர்கள், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டு வருவதாக இந்திய மீடியா*

*(4 ஆம் பக்கம்)*

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வருகிறது. இவர்களெல்லாம் செய்தித்தாளே படிப்பதில்லையா? சென்னையின் கடற்கரையில் அடிக்கடி தைவான் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் வழி தெரியாமல் வந்தவர்கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். பல ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர்கள் தூரத்திலிருக்கும் தைவான் மீனவன் வழி தவற முடியுமென்றால், வெறும் பன்னிரெண்டு மைல் தூரத்திற்குள் இராமேசுவரம் தமிழன் வழி தவறுவது நம்புவது மாதிரியில்லையாமா?

### தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் வெளி மாநிலங் களைச் சேர்ந்த சகோதரர்களே....

உங்கள் சொந்த மாநிலத்தில்கூட இல்லாத நிம்மதியோடும், பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடு தான் என்பது உங்களுக்கு அனுபவத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலிருக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும் நம் பெயரைப் பயன்படுத்தி தான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நாங்கள் தனித்துவிடப் படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆக்கக்கூடாதென நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, போராடிக் கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப் படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை எம் கரத்தை பலப்படுத்துவதோடு, எதிர்காலத்தில் ஒரு நவநிர்மாண் சேனாவோ, ஸ்ரீராம் சேனாவோ தமிழ்நாட்டில் உருவாகவிருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும் என்பது என் கருத்து.

### தமிழ்நாடு காவல்துறையிலிருக்கும் இளைஞர்களே....

உங்கள் மீது எனக்கு இருக்கும் மதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல. காரணம், தமிழுக்காக மற்றவர்கள் என்ன செய்தார்களோ, அலுவலர்களை ஐயா என அழைப்பது போன்ற நடைமுறை ரீதியில் தமிழை வாழ வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். மக்களுக்காகப் பாடுபட வேண்டும். சமூக விரோதிகளை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பது போன்ற உன்னத நோக்கங்களுக்காகத் தான் நீங்கள் காவல்துறையில் இணைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், அதை செய்ய விடுகிறதா ஆளும் வர்க்கம்? உங்களை சிறு சிறு தவறுகள் செய்ய விடுவதன் மூலம் தன்னுடைய பெருந்தவறு களை மறைத்துக் கொள்ளும் அதிகார வர்க்கம், உங்களை, எந்த மக்களுக்காகப் பாடுபட நீங்கள் விரும்பினீர்களோ, எந்த மக்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தீர்மானித்தீர்களோ, அந்த மக்களுக்கெதிகராகவே பயிற்றுவிக்கப்பட்ட அடியாள்களாக மாற்றுகிறது. டெல்லி திகார் ஜெயிலைப் பாதுகாப்பது தமிழக போலீஸ்தான். இந்தியாவில் பழமையான காவல்துறையான தமிழக காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வரும் காவல் துறைகளில் ஒன்று. ஆனால், அந்த மதிப்பை உங்களுக்குக் கொடுக்கிறதா இந்திய அரசாங்கம்! மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தமிழகம் வந்து திரும்பிப் போகையில், சென்னை விமான நிலையத்தில், அவருக்கான பாதுகாப்பை வழங்க அனுமதிக்க மறுத்திருக்கிறார்கள் மத்திய காவல் அதிகாரிகள்.

ஏனென்று கேட்டதற்கு, ராஜீவ் காந்தியை நீங்கள் பாதுகாத்த லட்சணம் தான் தெரியுமே என்று கிண்டல் செய்திருக்கிறார்கள். ராஜீவ் காந்தியைத் தமிழக காவல்துறையால் காப்பாற்ற முடியவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு உண்மை, ராஜீவோடு இறந்தவர்களில் பலர் அப்பாவி போலீஸ்காரர்கள் என்பது. உங்கள் அர்ப்பணிப் புணர்வு கேள்விக் கப்பாற்பட்டது. ஆனால் மேற்படி வெண்ணெய் வெட்டி வீரர்கள் - அதுதான். இந்திய உளவுத் துறை - ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருக் கிறது என்ற தகவலை அறிந்த போதும் மெத்தனமாக இருந்தது என்பது பின்னர் அம்பலமானதல்லவா… இதுவரை காலமும் நீங்கள் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும் தமிழகத்தின் பெருமைகளில் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கம் இருந்தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒரு முறை சக தமிழர்களுக்காக அர்ப்பணித்துப் பாருங்கள். மக்கள் உங்களை தங்கத் தட்டில் வைத்து தாங்குவார்கள். தமிழனின் நன்றி உணர்ச்சி அளவிடற் கரியது. தன்னுடைய சொந்தக் காசை வைத்து அணை கட்டிக் கொடுத்தான் என்பதற்காகவே அவனுக்கு கோயில் கட்டி, தன் பிள்ளைகளுக்கு அவன் பெயரை வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறான், முல்லையாற்றின் மதுரை மாவட்டத் தமிழன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கொந்தளிக்கப் போகும் தமிழகத்தில், மத்திய அரசு அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மறுப்பது, ரா, சி.பி.ஐ. போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களை உள்ளூர் மக்களுக்கு அடையாளம் காட்டுவதும்தான். இதை மட்டுமாவது செய்யுங்கள். மற்றதை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

### களத்தில் நிற்கும் தமிழீழ மக்களே, விடுதலைப்புலிகளே...

அனைத்துக் கண்களும் இப்போது முல்லைத் தீவை நோக்கி. தாய்த் தமிழகம் உணர்வு பூர்வமாக உங்கள் பக்கம் தான் நிற்கிறது. வேறு ஏதாவது செய்ய வேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால், என்ன செய்வது உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னத தலைவன் எங்களுக்கில்லையே… ஆனால், நம்பிக்கையை மட்டும் கைவிடாதீர்கள். இதுபோன்ற கையறு காலங்கள்தான். தமிழகத்திலிருந்து அப்படி ஒருவர் இந்த காலத்தில் உருவாகலாம். அதுவரை, புலிகளின் கரங்களை பலப்படுத்துங்கள். 1965 இல் இந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுயநலமிகளின் கையில் ஒப்படைத்ததால்தான் தமிழக வரலாறு கற்காலத்திற்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவற்றை நீங்கள் செய்து விடாதீர்கள்.

### அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைக்குரிய ஒபாமாவே,

உஙகள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இறையாண்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடிமகனை இன ஒதுக்கல் மூலமாக கொடுமைப்படுத்தாது என்பதற்கு எந்த உத்தர வாதமும் கிடையாது. வசதிக்காக அமெரிக்காவின் கடந்த காலத்தையே எடுத்துக் காட்டாக சொல்லலாம். உலகப் புகழ் பெற்ற குத்துச் சண்டை மாவீரன் முகமதலி சொன்னானே, என் சருமத்திலிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற்பழிப்பின் மூலமாகவே வந்திருக்குமென்று… நீங்கள் அமைதியாக இருக்கும் வரை இந்தியா வாயே திறக்காது. ஒட்டுமொத்த தமிழர்களும் அழிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக்கும். அதுவரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா?

வன்னியில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்கிறார்கள். அப்படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அரசைச் சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொல்லப்படு கிறார்கள் என்பதற்கு. இது இனப்படுகொலை இல்லையா? இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொல்கின்றனரென்றால், நீங்கள் உங்கள் மௌனத்தின் மூலமாகவும், பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கி போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிட மாட்டார்கள். அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார். மறத்திற்கும் அஃதே துணை என்று பாடியுள்ளான் எங்கள் திருவள்ளுவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா - என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் எடுத்ததால்தான் வந்தது என்பதை போல… உண்மையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரண கர்த்தாக்கள் அல்லர்.

இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருப்பது வெளிப்படையாகாத வரை, இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் தலையிட முடியாது என்றது. சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காக செய்வதாகச் சொன்னது.

நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய, மும்பை தொடர் வெடிகுண்டுகள், பிறகு அண்மையில் நடந்த தாக்குதல் எனப் பலவாறாக இந்திய மக்களைக் கொன்று குவித்த பாகிஸ்தானோடு இணைந்து கொண்டு தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. அப்படியானால், பாகிஸ்தானின் இந்தியா மீதான பயங்கரவாதமென்பது இந்தியா-பாகிஸ்தான் இருதரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்ட பரஸ்பர புரிதலுடன் உருவாக்கிக் கொண்ட ஒன்று என்ற சந்தேகம் ஒரு பக்கம் இருக்க இப்போது விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள் அதனால்தான் சண்டை என்கிறது.

ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்கிறது. ராஜீவ் காந்தி ஒரு கவுன்சிலரோ, மாவட்டச் செயலாளரோ அல்ல. அவரை ஏற்கனவே ஒரு முறை கொலை செய்யும் முயற்சி இலங்கையில் நடை பெற்றிருந்த போதும் அந்தக் கொலைக் காரன் விசாரிக்கப்படவில்லை. ராஜீவ் காந்தியைக் கொல்ல முயன்ற அந்த சிங்கள வீரன் ஆகியோரையும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இணைத்துக் கொண்டு மறுபடியும் விசாரிக்கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கைகளில் ஒன்று.

ராஜீவ் மீது புலிகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாமே தவிர, கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், ராஜீவ் இந்திராவின் புதல்வர். இந்திரா, தமிழீழத்தின் சிறு தெய்வங்களில் எம்.ஜி.ஆருக்குப் பக்கத்திலிருப்பவர்.

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம்பாகத்தான் இந்தப் போரில் ஈடுபட்டிருப்பது அம்பலமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக் கூடாது? புலிகள் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங் களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக்கூட நடந்து கொண்டதில்லை. இவர்கள் ஒரு நிர்ப்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக் கூடாது என்று எதிர்பார்ப்பது என்ன வகை நியாயம்? தாங்கள் நேர்மையாக நடந்து கொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவது மூலமாக மட்டுமே போராளிகளை - ஆயுதத்தைக் கீழே வைக்கச் செய்ய முடியும். கடந்த கால அரசுகள் எவையும் அப்படி செயல்படவில்லை.

உதாரணம் ரணில்-கருணா. ஆனால், புலிகள் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு செய்தது ஆயுதம் வாங்கியது மட்டுமல்ல, அது காலா காலமாக நடப்பதுதானே - ஓர் அரசு நிர்வாகத்தையே உருவாக்கியிருக்கிறார்கள். சர்வதேசத்தின் கண்களில் இது தீவிரவாதமா?

அப்பாவித் தமிழர்களைக் காப்பதற்காகத் தான் போரிடுவதாக பசப்புகிறது இந்தியா. ஆயுத தளவாடங்களும், உளவு விமானங்களும்தான்

(5 ஆம் பக்கம்)

# டக்ளசை கைதுசெய்து தமிழகம் கொண்டு வரவேண்டும்

4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை போகின்றனவே தவிர, இந்தியாவால் அனுப்பப்பட்ட ஒரு பாராசெட்டமால் மாத்திரையைக் காட்டச் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த லட்சணத்தில், தமிழீழ மக்களுக்கான வசதிகளை இலங்கை அரசு செய்யுமாம். இதற்கு இந்தியா உதவுமாம்... வேலிக்கு ஓணான் சாட்சி! இப்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆம்புலன்ஸ்களைத் தாக்கினார்களே, அவர்களும் விடுதலைப் புலிகளா? பிரான்சின் மனித உரிமையாளர்களைக் கொலை செய்தார்களே. அவர்களும் விடுதலைப் புலிகளா? சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள், பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல... இப்போது எம்மக்களைக் கொலைச் செய்து வருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும் தான் என்பதை எப்போது உணர்வீர்கள். நியாயத்தின்பால் பெருவிருப்பு கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப் பட்டபிறகா? அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகள் ஒன்றின் படி ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கின்றோம்... எங்கள் சகோதரிகளையும், குழந்தைகளையும் விட்டுவிட்டுச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை. அவர்களெல்லாம் மனமார சிரிப்பதை ஒருநாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில் தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே. ஒரு பேச்சுக்கு ஒத்துக் கொள்வதென்றாலும்கூட, விடுதலைப் புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கியதை இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ கிடையாது.

காலம் கடந்து வழங்கப்படும் நீதி அநீதியை விடக் கொடுமையானது.

1. இந்தியா உடனடியாக தமிழீழத்தின் பகுதிகளிலிருந்து தன் துருப்புகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதோடு, மேற்கொண்டு செயற்கைக் கோள் உதவிகள், ராடார் போன்ற உதவிகளைச் செய்யக் கூடாதென்று சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டும். இலங்கையோடு இந்திய அரசு நடந்தும் முக்கியத்துவ மற்ற பேச்சுப் பரிமாற்றங்கள்கூட சர்வதேச சமூகம் மூலமாகவே நடக்க வேண்டும். தமிழக மக்களிடமும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழீழத்தாரிடமும் இந்தியா பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும.
2. ஐ.நா. பொதுச் செயலாளரான பான் கி மூன், தொடர்ந்து தன் தாயகமான சீனாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்து ஒரு தலைப்பட்சமாக செயல்பட்டு வருவதால், ஈழம் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்படக் கூடாது.
3. இலங்கை அரசு எந்தெந்த நாடுகளிடமெல்லாம் கோரப்பட்டு புலிகள் மீது தடை விதிக்கப்பட்டதோ அந்தந்த நாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் என்ற குற்றத்திற்காக சிறையிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் எந்தவித நிபந்தனையுமற்று உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.
4. புலிகளின் உறுப்பினர்கள் மீதான பாஸ் போர்ட் தொடர்பான குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் விடுதுலை செய்யப்பட வேண்டும்.
5. புலிகளோடு தொடர்புடையது என்னும் குற்றச் சாட்டின் பேரில் தடை செய்யப்பட தொழில் நிறுவனங்களின் உரிமம் மீண்டும் அளிக்கப்படுவதோடு, தக்க நட்ட ஈடும் வழங்கப்பட வேண்டும்.
6. ராஜீவ் காந்தி கொலை வழக்கு இண்டர் போலால் விசாரிக்கப்பட்டு, உண்மையான குற்றவாளிகள் இனம் காணப்பட வேண்டும்.
7. பிரணாப் முகர்ஜி, கோத்தபாய ராஜ பக்ஷே, சந்திரிகா, உதயணகார, கேகலிய ரம்புக்வெல, பசில் ராஜ பக்ஷ மகிந்த, பொன்சேகா போன்றோர் நார்கோ அனாலிசிஸ் சோதனைக்குட்பட வேண்டும்.
8. அமைக்கப்பட போகிற தமிழீழத்தை அங்கீகரிக்கிற உரிமையை மட்டுமே சர்வதேசம் மேற்கொள்ளலாமே தவிர, அது யாரின் தலைமை யில் அமைய வேண்டும் என்பதை தமிழின மக்கள் தான் முடிவு செய்கிறார்கள்.
9. புலிகள் கை பலவீனமான நேரத்தில், மலையக மக்கள் மீது நடந்து வந்த தாக்குதல், எதிர்காலத்தில் அப் பகுதியில் மீண்டும் ஒரு பாரிய இன அழிவு ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதால், மலையக மக்கள் தமிழீழத்தோடு இணைய விரும்புகிறார்களா என்பதை வாக்கெடுப்பு மூலம் அறிந்து அதன்படி செயல்பட வேண்டும். இந்த விசயத்தில் மலையக மக்களின் முடிவே இறுதியானது.
10. சென்னையில், குடிபோதையில் அப்பாவித் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் தண்டனைக் காலம் பூர்த்தியாகும் காலத்திற்குள் இலங்கைக்குத் தப்பிச் சென்று விட்டதால், அவர் கைது செய்யப்பட்டு, தமிழக போலீசார் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
11. பத்திரிகையாளரான லசந்தவின் கொலைக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.
12. தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள பத்திரிகையாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
13. தமிழ்நாட்டிற்கு அகதிகளோடு அகதியாக வந்த சிங்களத் தம்பதியர் மீதான பாஸ் போர்ட் குற்றச்சாட்டு நீக்கப்பட்டு, அவர்களும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.
14. சுட்டுக்கொலை செய்யப்பட்ட தமிழக மீனவர் களின் குடும்பங் களுக்கான வாழ்வதாரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

என்றும் அன்புடன்,
அநீதிகளுக்கெதிரான உங்கள் சகோதரன்,
**கு. முத்துக்குமார்,**
கொளத்தூர், சென்னை-99.

அருமைத் தமிழ் மக்களே, அநீதிகளுக்கெதிரான போராட்டத்தில் நம் சகோதரர்களும், பிள்ளைகளும் அறிவாயுதம் ஏந்தியிருக்கிறார்கள். நான் உயிராயுதம் ஏந்தியிருக்கிறேன். நீங்கள் நகலாயுதம் ஏந்துங்கள். ஆம். உங்கள் கையில் கிடைத்திருக்கும் இந்த துண்டறிக்கையை நகலெடுத்து, உங்கள் நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் வசம் கொடுத்து, போராட்டத்திற்கான ஆதரவைப் பெருகப் பண்ணுங்கள். நன்றி.

இவ்வாறு அந்த துண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 8 மணி நேரம் நடந்த இறுதி ஊர்வலம்

ஈழத தமிழர்களுக்காக - தீக்குளித்து வீரமரணமடைந்த போராளி முத்துக்குமாருக்கு பெரியார் திராவிடர் கழக சார்பில் ஆனூர் செகதீசன், விடுதலை இராசேந்திரன் மற்றும் ஏராளமான தோழர்கள் இறுதி வணக்கம் செலுத்தினர். 'எரியும் ஈழத்துக்காக - எரிந்த மாவீரன் முத்துக்குமாருக்கு வீர வணக்கம்' என்ற சுவரொட்டி கழக சார்பில் ஒட்டப்பட்டது. 3 நாளும் தோழர்கள் முத்துக்குமார் உடல் வைக்கப்பட்டிருந்த கொளத்தூரில் இருந்து இறுதி ஊர்வலத்திலும் கழகத்தினர் பங்கேற்றனர்.

இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அலை கடலாக திரண்டு, உணர்ச்சி முழக்கமிட்டு வந்த காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. ஈழத் தமிழர்களுக்கு துரோகமிழைக்கும் காங்கிரஸ் - அதற்கு துணை போகும் தி.மு.க. - விடுதலைப் புலிகளை கொச்சைப்படுத்தும் ஜெயலலிதா - நஞ்சைகக்கும் பார்ப்பனர்கள் - பார்ப்பன ஊடகங்களை எதிர்த்து முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கக் கோரியும் - விடுலைப் புலிகளை ஆதரித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. வீரமரணமடைந்த முத்துக்குமார் உருவப் படத்தோடு தமிழ் ஈழத் தலைவர் பிரபாகரன் படத்தையும் உயர்த்திப் பிடித்து வந்தனர்.

இறுதி ஊர்வலம் 12 கிலோ மீட்டர் தூரம் பயணித்தது. மூலகொத்தளம் இடுகாட்டை அடைவதற்கு 8 மணி நேரம் ஆனது. வழி நெடுக ஆண்களும், பெண்களும் ஏராளமாகத் திரண்டு, உணர்ச்சிப் பொங்க கண்களில் நீர் மல்க, ஊர்வலத்தைப் பார்வையிட்டனர். ஊர்வலத்தில் வந்தோருக்கு குடிநீர் , மோர் - குளிர் பானங்களை வழங்கி, தங்களது உணர்வை வெளிப்படுத்தினர்.

சோனியா - மன்மோகன் சிங் - கலைஞர் - ஜெயலலிதா - 'இந்து' ராம் - 'துக்ளக்' சோ ஆகியோர் ஈழத் தமிழருக்கு துரோகம் செய்வதை விளக்கிடும் கார்ட்டூன் படங்களை 'பாசிசத்துக்கு எதிரான பத்திரிகையாளர்' என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் கரங்களில் உயர்த்திப் பிடித்து முழக்கமிட்டு வந்தனர். ஏராளமான பெண்களும் இறுதி ஊர்வலத்தில் வந்தது குறிப்பிடத்தக்கது.

3 நாட்களும் கொளத்தூர் பகுதி முழுதும் வர்த்தகர்கள் கடைகளை மூடி, தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். வணிகர் சங்கப் பேரவையின் தலைவர் த. வெள்ளையன் - இறுதி நிகழ்ச்சிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். பழ. நெடுமாறன், தொல். திருமாவளவன், வைகோ, ஆர். நல்லக்கண்ணு மற்றும் திரைப்படத் துறையைச் சார்ந்த நடிகர்கள், கலைஞர்கள், ஏராளமாகத் திரண்டு வந்து வீரவணக்கம் செலுத்தி எழுச்சி உரையாற்றினர்.

விடுதலைப்புலிகள் - போராளி முத்துக்குமாருக்கு அனுப்பிய இரங்கல் செய்தியை பலத்த கரவொலிக்கிடையே வைகோ ஒலிபெருக்கியில் படித்தார். அலைபேசியில் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசன் இரங்கல் அறிக்கையின் வாசகங்களைக் கூற, அதை அப்படியே வைகோ திரண்டிருந்த கூட்டத்தில் கூறிய போது, கூட்டத்தினர் உணர்ச்சி எரிமலைகளாய் ஆர்ப்பரித்தனர்.

உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் கூட்டத்தினர் உணர்வுகள் கட்டுக்கடங்காத நிலையில் இயக்குநர் சேரன், மேடையில் பல மணி நேரம் நின்று ஒலி பெருக்கி வழியாக கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தி வந்தார்.

மூன்றாவது நாள் - தமிழகம் முழுதுமிருந்தும் மாணவர்களும், இளைஞர்களும் திரண்டு வந்து போராளி முத்துக்குமாருக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். அண்மைக்கால சென்னை வரலாற்றில் இப்படி ஒரு உணர்ச்சி மிக்க இறுதி ஊர்வலத்தை மாநகர் சந்திக்கவில்லை என்பதே பலரின் கருத்தாக இருந்தது.

**– நமது செய்தியாளர்**

# போரை நடத்துவது இந்தியாவே; சிங்களம் அல்ல!

***ஈழத்தில் இனப் படுகொலைப் போரை நடத்துவது இந்தியாவே; இலங்கை பொம்மை தான். இனி சர்வதேச சமூகம் – அந்தந்த நாடுகளில் உள்ள இந்திய தூதரகத்தின் முன் தொடர்ந்து போராட வேண்டும் என்று வலியுறுத்துகிறார் ஆய்வாளர் வழுதி. 'புதினம்' இணையதளத்தில் வெளியிட்டுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகள்:***

"புதினம்" செய்திப் பிரிவு மிகக் கவனமாக - ஆதாரப்பூர்வமான தகவல்களின் அடிப்படையில் - சேகரித்த விவரங்களின்படி கடந்த ஒரு மாத காலத்திற்குள், அதாவது 2009 ஆம் ஆண்டு பிறந்த பின்னர் மட்டும் இலங்கையில் 439 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுவிட்டனர்.

பச்சிளம் குழந்தைகளும், பாலகர்களும், சிறுவர்களும், முதியோர்களும் என படுகாயப்படுத்தப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 1,772.

அதாவது - சராசரியாக - ஒவ்வொரு நாளும் 14 தமிழர்கள் கொல்லப்பட்டு, 57 தமிழர்கள் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதே வேளை - இந்த ஒவ்வொரு நாளும் - போர்க்களத்தில் வீழ்ந்து போன, விழுப்புண்பட்ட புலிப் போராளிகளின் எண்ணிக்கை இங்கே சேர்க்கப்படவில்லை. இறந்துபோன, போர்க் காயமடைந்த அவர்களும் தமிழர்களே.

இது தவிர, வன்னியில் இருந்து வெளியேறிய 160 வரையான தமிழ் இளம் பெண்களும், இளைஞர்களும், இரகசியமான சித்திரவதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு - வதை செய்யப்பட்டு கொன்று புதைக்கப்பட்டதாக வெளியில் சொல்ல முடியாத ஆதாரங்களில் இருந்து நம்பகமான தகவல்கள் உண்டு.

தெளிவாக - இது ஓர் இனப் படுகொலைப் போரே அன்றி வேறொன்றும் அல்ல.

ஆனால், இந்த இனப் படுகொலைப் போரை நடத்துவது யார் என்பதிலும், அதற்கு எதிராக நாம் செய்ய வேண்டியது என்ன என்பதிலும் தான் எமக்கு தெளிவு தேவை.

"அன்னை சோனியாவின் ஆன்மா கரையப் போவதில்லை".

இது இந்தியாவின் போர்; சிறிலங்கா ஒரு பொம்மை மட்டுமே. இந்தப் போர் ஒரு முடிவுக்கு வருவதற்கு இந்தியா விடப்போவதே இல்லை; அதாவது, சிறிலங்கா விரும்பினாலும்கூட இந்தப் போர் நிற்கப் போவதில்லை.

இந்தியப் படை அதிகாரிகள் - வன்னிப் போர் முனையில் - வெறுமனே பிரதான கட்டளை மையங்களில் மட்டுமின்றி - நேரடியான போர்ச் செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றனர்.

இந்திய உளவு வானூர்திகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை 24 மணி நேரமும் கண்காணித்தபடியே உள்ளன.

இந்திய கடற் கண்காணிப்பு கதுவீ (ரேடார்) கருவிகள் வங்காள விரிகுடாவை 24 மணி நேரமும் கண்காணித்த வண்ணம் உள்ளன.

இந்தியாவின் கண்களுக்கு தப்பி ஒரு மீன்பிடிப் படகுகூட அங்கு நீந்த முடியாது.

இந்தத் தகவல்கள் எல்லாமே விடுதலைப் புலிகளுக்குத் தெளிவாகத் தெரிந்திருப்பினும்கூட - அரசியல் இராஜ தந்திர நோக்கங்கள் கருதி, சில விடயங்களை வெளிப்படையாகச் சொல்ல முடியாதவர்களாக அவர்கள் உள்ளனர்.

ஒரு புறத்தில் போரை நடத்திக் கொண்டு, மறுபுறத்தில் அனைத்துலக நாடுகளிடம் இருந்து வரக்கூடிய அழுத்தங்கள் எல்லாவற்றையும் முறியடிப்பதற்கான இராஜதந்திர ஆலோசனைகளையும் சிறிலங்காவுக்கு வழங்குகின்றது இந்தியா.

பொருளாதாரம் சீரழிந்து சிறிலங்கா வீழ்ந்தாலும், அதனை முட்டுக் கொடுத்து தூக்கிவிட்டு - இந்தியா இந்தப் போரை நடத்தும்.

ஆட்பலம் குறைந்து சிங்களப் படை தவித்தாலும், தன் படைகளை இந்தியா போருக்கு அனுப்பும்.

பிணமலையாகத் தமிழர்கள் வன்னியில் குவிந்தாலும் சரி,முத்துக்குமாரர்களாக 'சாஸ்திரி பவன்' முற்றத்தில் தமிழர்கள் எரிந்தாலும் சரி - அன்னை சோனியாவின் 'ஆன்மா' கரையப் போவதில்லை.

தமிழ்த் தேசிய எழுச்சித் தீயை அணைத்து அடக்கும் வரை - காங்கிரசின் இந்திய வல்லாதிக்கம் ஓயப் போவதில்லை.

பிரபாகரனின் சவப்பெட்டியில் கடைசி ஆணியை அடிக்கும் வரை - சோனியா காந்தி நிம்மதியாக தூங்கப் போவதில்லை.

என்றோ இறந்து போன ராஜீவ் காந்திக்காக - நேற்றும் இன்றும் நாளைக்கும், இனி என்றும் தமிழர்களைப் பழி தீர்த்துக் கொண்டே இருக்கப் போகின்றது காங்கிரசின் இந்தியா.

சிவசங்கர் மேனனையும், பிரணாப் முகர்ஜியையும், தமிழ்நாட்டு மக்கள் கொடுத்த உணவு மூட்டைகளையும் சிறிலங்காவுக்கு பகிரங்கமாக அனுப்பி, மற்ற நாட்டுக்காரர்களைத் தள்ளி நிற்க வைத்து விட்டது இந்தியா.

நோர்வேயின் எரிக் சொல்கெய்ம் - மிக அண்மையில் புலிகளிடம் நேரிடையாகவே சொல்லி விட்டார், "இப்போது எம் கையில் எதுவுமே இல்லை" என்று.

உலகத் தமிழர்களே! இது எமக்குரிய நேரம். இதுவே தான் எமக்கான நேரம்!

எமக்காக எழுந்துவிட்ட ஏழு கோடி தமிழகத் தமிழர்களுடன் சேர்ந்து - உலகத் தமிழர்கள் நாம் - எம்மைப் பழி தீர்க்க முனையும் இந்தியாவின் இந்த குரூர வெறிக்கு ஒரேயடியாக முடிவு கட்ட வேண்டும்.

ஊரில் நடைபெறும் நிகழ்வுகளின் செய்திகளைப் பார்த்து, கொதிப்படைந்து - ஏதாவது செய்தாக வேண்டும் என்ற உணர்வுப் பெருக்கோடு எதையாவது செய்து கொண்டிருக்கின்றோம்.

உலகு எங்கும் - கவனயீர்ப்பு நிகழ்வுகள் செய்து, ஆர்ப்பாட்டப் பேரணிகள் வைத்து, மனுக் கடிதங்கள் எழுதி, மனிதச் சங்கிலிகள் பிடித்து, எங்கள் கோபத்தையும், ஆதங்கத்தையும் பிழையான இடங்களின் மீது நாம் காட்டிக் கொண்டிருக்கிறோம்.

சிறிலங்கா அரசின் மீது அழுத்தம் போட்டு தமிழர் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்துமாறு உலக நாடுகளையும், ஐக்கிய நாடுகள் சபையையும் நாம் வேண்டுகின்றோம்.

ஆனால் - தமிழர் இனப் படுகொலையை நிகழ்த்துவது சிறிலங்கா அல்ல; அது இந்தியாவே என்பதை நாம் உணர வேண்டும்.

சிறிலங்கா இப்போது வெறும் பொம்மை மட்டுமே; இது இந்தியா இயக்கும் போர் என்பது எல்லோருக்குமே தெரியும்.

இப்போதுள்ள சூழலில் - தென்னாசியாவில், இந்தியாவை மீறி எதுவுமே நடக்கப் போவதில்லை.

மேற்குலக நாடுகள் என்றாலும் சரி, ஐக்கிய நாடுகள் சபை என்றாலும் சரி - ஆகவும் மிஞ்சிப் போனால் ஒரு அறிக்கையை விடுவார்கள்; கவலை தெரிவிப்பார்கள்.

அன்னிய நாடுகளில் நாம் நடத்தும் பேரணிகள் உண்மையில் அந்தந்த நாடுகளின் அரசுகளுக்குச் சங்கடங்களையே ஏற்படுத்தும்.

எம் மீது ஒரு வகையான சினத்தைக்கூட - அந்தந்த நாட்டு அரசுகளினதும், அந்தந்த நாட்டு மக்களினதும் மனங்களில் உருவாக்கப் பார்க்கும். ஒரு வகையில் - தேவையற்ற பகை உணர்வைக்கூட, அது தமிழர்களுக்கும், மேற்குலகிற்கும் இடையில் ஏற்படுத்தும். மேற்குலக அரசுகளின் ஆதரவு பின்னால் எமக்குத் தேவை. இப்போது, எதுவும் செய்ய முடியாத சூழலில் அவர்கள் இருக்கும்போது, அவர்களைச் சங்கடப்படுத்துவது நமக்கு நன்மையைச் செய்யாது; அது அழகும் அல்ல. எனவே - அளவுக்கு அதிகமான தொந்தரவைக் கொடுக்காமல், ஒரு தூர நோக்கப் பார்வையோடு மேற்குலகை நாம் விட்டு வைக்க வேண்டும்.

இப்போது - எமது துடிப்பு, சக்தி, கவனம் எதனையும் வேறு இடங்கள் நோக்கிச் சிதறவிடாமல் - எல்லாவற்றையும் இந்தியாவை நோக்கியே நாம் செலுத்த வேண்டும். உலகத் தமிழர்களின் பொங்கும் உணர்வு எழுச்சியைப் பல திசைகளிலும் பரவ விட்டு, எல்லா இடங்களிலும், எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்காமல், அதை ஒருங்கே குவித்து, சரியான இலக்கை நோக்கி நகர வைக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த நாடுகளிலுள்ள தமிழ் செயற்பாட்டாளர்களின் கைகளிலேயே இப்போது உள்ளது.

அந்த சரியான இலக்கு - இந்தியா.

என்றுமில்லாத அளவுக்கு பேரெழுச்சி கொண்டுள்ள தமிழக மக்களுக்குப் பின்னால் உலகத் தமிழர்கள் உடனேயே அணி திரள வேண்டும். எமக்காகப் போராடும் அவர்களோடு நாம் ஒன்றிணைய வேண்டும்.

விடுதலைப் புலிகளின் கோலாகலமான ஒரு போர் வெற்றிக்காக இரண்டு வருடங்கள் நாம் காத்திருந்தோம். எதுவுமே நடக்கவில்லை; நடக்க இந்தியா விடவில்லை.

இப்போது - காங்கிரஸ் ஆட்சியின் கேவலமான ஒரு வீழ்ச்சிக்காக நான்கு மாதங்கள் காத்திருக்க எமக்கு அவகாசம் எதுவும் இல்லை; அதன் பிறகு கூட ஏதாவது நடக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

உலகு எங்கும் உள்ள இந்தியத் தூதரகங்களை நாம் இப்போதே முற்றுகைக்கு உள்ளாக்க வேண்டும். தொடர்ச்சியாக - இடைவிடாமல் ஒருங்கு திரட்டப்பட்ட செயல் வீச்சோடு - அதை நாம் பல்லாயிரக்கணக்கில் திரண்டு செய்ய வேண்டும்.

லண்டன் நகர வீதிகளில், ஒரு லட்சம் பேர், ஒரே நாளில் திரண்டு பிரித்தானிய மக்களின் அன்றாட வாழ்வுக்குச் சிரமங்கள் தருவதைத் தவிர்த்துவிட்டு, லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தை 5 ஆயிரம் பேராக ஒரு சுழற்சி முறையில் 20 நாட்களுக்கு முற்றுகையிட வேண்டும்.

அதேபோல - கனடாவின் டொராண்டோ வீதிகளில் 80 ஆயிரம் பேர், ஒரே நாளில் திரண்டு கூடிய மக்களின் அன்றாட வாழ்வுக்கு அலுப்புத் தருவதைத் தவிர்த்துவிட்டு, கனடாவுக்கான இந்தியத் தூதரகத்தை 4 ஆயிரமாக ஒரு சுழற்சி முறையில 20 நாட்களுக்கு முற்றுகையிட வேண்டும். இதேபோல ஒவ்வொரு நாடுகளிலும் செய்ய வேண்டும்.

தமிழர் பிரச்சினை தவிர வேறு எதைப் பற்றியுமே சிந்திக்க முடியாத - நாளாந்த அலுவல்களில் சிரத்தை காட்ட முடியாத செயலிழப்பு நிலைமைக்கு வெளிநாட்டு இந்தியத் தூதரகங்களை நாம் உள்ளாக்க வேண்டும்.

எமது இடைவிடாத முற்றுகைகள் மூலம் - தூதரக அதிகாரிகளையும், தூதுவர்களையும் செயற்பட முடியாத அளவு எரிச்சலுக்கும், சினத்திற்கும் உள்ளாக்க வேண்டும்.

தமது தூதரகங்களுக்கே சென்றுவர முடியாதுள்ள - தமது பணிகளை ஆற்ற முடியாதுள்ள தமது கையாலாகத்தனத்தை அவர்கள் டெல்லித் தலைமைக்கு முறையிட வைக்க வேண்டும்.

தமிழ் இனத்தைப் படுகொலை செய்து அழிக்கும் போரின் சூத்திரதாரி சிறிலங்கா அல்ல; இந்தியா தான் என்பதை இந்த உலகின் முற்றத்தில் நாம் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

இந்தியா நடத்தும் இந்தப் படுகொலைப் போரின் பழியை இந்தியாவின் தலையிலேயே நாம் சுமத்த வேண்டும்.

ஒரு பழம் பெரும் இனத்தை அழிக்கும் நாடு என்ற அவமானமான வெட்கத்தை இந்தியாவின் முகத்தில் நாம் பூச வேண்டும்.

அதனை நோக்கியே எமது செயற்பாடுகள் யாவும் அமைய வேண்டும்.

இந்தியாவை நோக்கிய எமது செய்தி - உலகம் முழுவதிலும் ஒன்றாகவே இருக்கவேண்டும்.

*தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு!*

*தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரி!*

*சிறீலங்காவுக்கான போர் உதவிகள் அனைத்தையும் நிறுத்து!*

ஒவ்வொரு நாளும் 15 தமிழர்கள் சாகின்றனர். ஓய்ந்திருந்து யோசிக்க எமக்கு நேரமில்லை. அவர்களையும், எம் தேசத்தையும் காக்கும் வழியும் எமக்குத் தெரிகின்றது.

செயற்படுவோம், இப்போதே!

# வி.பி. சிங்கை இழிவுபடுத்தும் 'புதிய ஜனநாயகம்'

'மக்கள் கலை இலக்கியக் கழக'த்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தோழமை சக்தியாகவே கருதுகிறோம். களப் பணிகளில் பல்வேறு சூழல்களில் கரம் கோர்த்து நிற்கும் இயல்பான சூழ்நிலைகள் வரும் போதெல்லாம் இரு சக்திகளும் கரம் கோர்த்தே களமிறங்கி வருகின்றன. குறிப்பாக 'இந்து' எதிர்ப்பு; பார்ப்பன எதிர்ப்பு என்ற கோட்பாடுகள் - இரு அணியின் தோழர்களையும் நெருக்கமாக்கியுள்ளன. ஆனாலும்கூட அண்மையில் அவர்களின் 'புதிய ஜனநாயகம்' ஏட்டில் வி.பி.சிங் பற்றி வெளிவந்த ஒருகட்டுரை - 'புதிய ஜனநாயகத்தின்' பார்ப்பன எதிர்ப்புப் பற்றிய பல்வேறு அய்யங்களை எழுப்பியிருப்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.

'காக்கை குயிலாகாது; பதவியைக் காப்பாற்றிக் கொள்ள இந்து மதவெறியர்களுக்கு அனுசரணையாக நடந்து கொண்டவர்தான் வி.பி.சிங்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள அக்கட்டுரை, வி.பி.சிங்கைக் குற்றவாளி கூண்டில் நிறுத்தியுள்ளது. குஜராத் மோடி அளவில் வி.பி.சிங்கைக் கொண்டு வந்து நிறுத்தி, "குற்ற"ப் பட்டியல்களை அடுக்கியிருக்கிறது. பச்சைப் பார்ப்பனியப் பார்வையில் வெளிவந்திருக்கும் அக்கட்டுரை 'துக்ளக் சோ', 'சு.சாமி' கும்பலை நிச்சயமாக மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கும். 'பொதுவுடைமை கட்சிகளில் மீண்டும் தமது குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது' என்று "அவாள்"கள் கருதினால், அதில் தவறு இல்லை என்பதே நமது கருத்து.

இந்திய அரசியலில் பார்ப்பனர்கள் மற்றும் 'அவாள்' ஊடகங்களின் கடுமையான வெறுப்புக்குரிய மனிதர் தான் வி.பி.சிங். அவரின் மரணம் கூட ஊடகங்களால் 'இருட்டடிப்பு' செய்யப்பட்டன. தங்களின் வஞ்சகத்தைத் தீர்த்துக் கொண்டார்கள்; அவரது மறைவையொட்டி சிறப்புக் கட்டுரைகள் எதையும் எந்த பார்ப்பன தேசிய ஏடும் வெளியிடவில்லை. பார்ப்பனர்கள் 'கள்ள மவுனத்தால்' வி.பி.சிங்கை அவமதித்தார்கள் என்றால் 'புதிய ஜனநாயகம்' பததிரிகையோ வெளிப்படையாகவே தமது அவமதிப்புகளைப் பதிவு செய்து, அதில் மகிழ்ச்சி அடைகிறது.

காங்கிரஸ் அரசியலில் பொது வாழ்க்கையைத் தொடங்கிய வி.பி.சிங், பிறகு காங்கிரஸ் எதிர்ப்பு அரசியலுக்கு வந்தார் என்பது வரலாறு; தமது சொந்த நிலங்களை 'பூமி தான' இயக்கத்துக்கு வழங்கினார். அமைச்சர் பதவிகளை வகித்தார். ஆனால், வி.பி.சிங்கின் பொது வாழ்க்கை காங்கிரஸ் அரசியலில் முடங்கிக் கிடந்தபோது, காங்கிரஸ் இழைத்த தவறுகளையெல்லாம் பட்டியலிட்டு அதை வி.பி.சிங் மீது சுமத்தி, அவற்றையெல்லாம் எதிர்த்தாரா என்று 'புதிய ஜனநாயகம்' கேள்வி எழுப்புவது - அதன் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துகிறதே தவிர, நேர்மையான சமூகப் பார்வையை அல்ல. காங்கிரஸ் அரசியலில் மூழ்கிக் கொண்டிருக்காமல், அதன் சுயரூபத்தை அறிந்து வெளியேறி - காங்கிரஸ் எதிர்ப்பு அரசியலை தொடங்கியதுதான் வி.பி.சிங்கின் சிறப்பு.

'இரண்டு அரசியலிலும் எங்களுக்கு உடன்பாடில்லை; நாங்கள் மூன்றாவது அரசியல் அணி' என்பது 'புதிய ஜனநாயகத்தின்' கொள்கையாக இருக்கலாம். அந்தக் கொள்கைக்கு வந்து சேராத எவருமே 'கடைந்தெடுத்த அயோக்கியர்கள்' தான் என்ற நிலைப்பாட்டில் எழுதுவதும் - பேசுவதும் கட்சி வாதமாகத்தான் இருக்க முடியும். லட்சியவாதிகள் - கட்சிவாதிகளாக முழுமையாக மாறி நிற்பது மக்களை அணி திரட்டுவதற்கு - ஒரு போதும் பயன்படாது. அவர்களின் சுயதிருப்திக்குத்தான் தீனி போடும்.

வி.பி.சிங் பிறப்பித்த பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டு ஆணையை சில அரசு பதவிகளுக்கான சலுகைகளாக உண்மையான பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையாளர்கள் எவரும் சுருக்கிப் பார்த்து விட முடியாது. மாறாக இந்திய அரசியலில் அதிரடி மாற்றங்களை உருவாக்கிய நடவடிக்கை அது. பார்ப்பன அரசியல் தலைமையைப் புரட்டிப் போட்டு, பார்ப்பனரல்லாத தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை அணி திரட்டலுக்கு வழியமைத்து அவர்கள் தேர்தல் அரசியலை நிர்ணயிக்கும் செல்வாக்கு மிக்க சக்திகளாக்கிய மாற்றத்தை அந்த ஆணை தான் கொண்டு வந்தது.

பார்ப்பனர்களுக்கு வி.பி.சிங் மீது எழுந்த கடும் கோபத்துக்கு இதுவே அடிப்படை. பார்ப்பனர்களுக்கு மட்டுமல்ல, அதுவரை பார்ப்பன மேலாதிக்கம் - சாதியமைப்புகளைக் கவனத்திலே எடுக்காமல், வர்க்கக் கண்ணோட்டத்தில் 'புதிய ஜனநாயக'ப் புரட்சிகளைப் பேசி வந்த பொதுவுடைமை கட்சிகளும், இதனால் நெருக்கடிக்கு உள்ளாயின என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மை. தங்களது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளும் நிர்ப்பந்தத்தை இந்த மனிதன் உருவாக்கி விட்டானே என்ற ஆவேசத்தை - தங்களது அடி உள்ளத்தில் புதைத்து வைத்திருந்தவர்கள்தான் வி.பி.சிங்கை அவர் மறைவிலும் கொச்சைப்படுத்தத் துடிப்பவர்களாக இருக்கிறார்கள். மாறாக, சரியான சமூகப் பார்வைக்கு 'மண்டலாக்கம்' வெளிச்சம் தந்தது என்று கருதுவோர், வி.பி.சிங்கின் பங்களிப்புக்கு ஏற்பு வழங்கி பாராட்டுவார்கள்.

---

***மண்டல் குழு பரிந்துரையை எதிர்த்து நாடு முழுதும் கலவரத்தை உருவாக்கிய பார்ப்பன சக்திகளைக் கண்டித்து, ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கம் நிற்க வேண்டிய 'புதிய ஜனநாயகம்' அதைச் செய்யவில்லை.***

---

'புதிய ஜனநாயகத்தின்' இந்தக் கட்டுரை மண்டலாக்கத்தால் பதறிப் போன பார்ப்பனர்கள் பக்கம் அது நிற்பதையே உணர்த்துகிறது.

1989 இல் வி.பி.சிங் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை கொண்டு வந்த போது, **"அதை நாங்கள் எதிர்க்கவும் இல்லை; ஆதரிக்கவும் இல்லை"** என்று எழுதிய 'புதிய ஜனநாயகம்' "மண்டல் குழு பரிந்துரை **அமலாக்கமும்** எதிர்ப்பும் அரசியல் பயன்களை அடைவதற்காக மேல்சாதிகளுக்கிடையே நடக்கும் மோதல் சண்டை" என்றும் எழுதியது. ('புதிய ஜனநாயகம் - மார்ச், 2003) வி.பி.சிங் நாட்டை சாதிவாரியாகக் கூறு போட்டுவிட்டார் என்று 'அருண்சோரி'களும், 'சோ'க்களும், பார்ப்பனர்களும் ஏதோ, சாதியமைப்பையே வி.பி.சிங் தான் உருவாக்கியது போலக் கூப்பாடு போட்டார்கள். அதே பார்ப்பன குரலைத்தான் 'புதிய ஜனநாயகம்' அன்று இவ்வாறு ஒலித்தது. **"நம்புங்கள்; இன்னமும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பதைத் தவிர, நாடு ஒரு உள்நாட்டுப் போரில் மூழ்கிப் போய்விட்டது, சாதிப்போர், மதப்போர், இனப் போராக."** (புதிய ஜனநாயகம், அக்.16, 1990)

மண்டல் குழு பரிந்துரையை எதிர்த்து நாடு முழுதும் கலவரத்தை உருவாக்கிய பார்ப்பன சக்திகளைக் கண்டித்து, ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கம் நிற்க வேண்டிய 'புதிய ஜனநாயகம்' அதைச் செய்யவில்லை. மாறாக - இடஒதுக்கீட்டை ஆதரிப்பவர்களையும் சேர்த்தே குற்றவாளியாக்கியது.

"இடஒதுக்கீட்டை **ஆதரித்தும்** எதிர்த்தும் சாதி அடிப்படையிலும், அயோத்தி விவகாரத்தில் மத அடிப்படையிலும் நடக்கும் கோரக் கொலைகள், வன்முறை வெறியாட்டங்கள் மனசாட்சியுடைய அனைவரையும் வெறுப்பும், அதிருப்தியும் அடைய வைக்கின்றன" என்று எழுதியதோடு "அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மேல்சாதி மேட்டுக் குடியினரிடையே நடக்கும் சாதிச் சண்டைகளை அம்பலப்படுத்தி முறியடிப் போம்" என்று அறைகூவலும் விடுத்தது.

வி.பி.சிங் ஆட்சியின் உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பார்ப்பன சக்திகள் தொடர்ந்த வழக்கில், பல்வேறு நிபந்தனைகளுடன் 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தபோது, 'புதிய ஜனநாயகம்' இவ்வாறு எழுதியது. "இடஒதுக்கீடு **ஆதரவும்** சரி; எதிர்ப்பும் சரி; தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் உட்பட சகல பிரிவு உழைக்கும் மக்களையும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டும் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்குச் சேவை செய்யும் அரசு எந்திரத்தில் பதவி - இடம் பிடிப்பதற்கான **போட்டா போட்டியும் – நாய்ச் சண்டையும் தான்** இந்த அப்பட்டமான உண்மை இப்போது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று எழுதியது ('புதிய ஜனநாயகம் 1993 - செப். 16-31, அக் 1-15)

ம.க.இ.க.வின் அரசியல் அமைப்பான இந்தியப் பொதுவுடைமை கட்சியின் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) அதிகாரப்பூர்வ ஏடான "புரட்சிப் புயல்", "இடஒக்கீடு கொள்கை மக்கள் சாதிகளாகப் பிரிந்திருப்பதை சாசுவத மாக்குகிறது" என்று எழுதி, பார்ப்பனர்களின் நிலைப்பாட்டையே தனது கொள்கை என்று அறிவித்திருந்தது. ('புரட்சிப் புயல்' - 1985 டிசம்பர்)

"ஒரு அரசியல் தலைவரை - எந்த வர்க்கத்துக்கு சேவை செய்தார் என மதிப்பீடு செய்யாமல், தனி மனிதப் பண்புகளையும், ஒரு சில சீர்திருத்த அறிவிப்புகளையும் மட்டும் வைத்து மதிப்பீடு செய்து, துதிப்பாடி போற்றுவது என்பது இன்னொரு மோசடியே" என்று, எழுதும் 'புதிய ஜனநாயக'த்தைப் பார்த்து, நாம் கேட்க விரும்புவதெல்லாம் இதுதான். அரசியல் தலைவருக்கு பொருந்தக்கூடிய இலக்கணம். அரசியல் கட்சிக்கும் பொருந்தக் கூடியது தானே; அப்படியானால் 'புதிய ஜனநாயகம்' இடஒதுக்கீட்டில் மேற்கொண்ட நிலைப்பாடு எந்த வர்க்கத்துக்கு சேவை செய்வதாகும் என்ற கேள்வியைத்தான் நாம் திருப்பிக் கேட்க விரும்புகிறோம். இடஒதுக்கீட்டில் கண்டிப்பான எதிர் நிலை எடுத்திருந்த புரட்சிகரக் குழுக்களை எல்லாம் வி.பி.சிங்கின் ஆணை நெருக்கடிக்குள்ளாக்கி விட்டதன் சீற்றத்தை 'புதிய ஜனநாயக'த்தின் கட்டுரையிலும் பார்க்கிறோம்.

போபர்சு பீரங்கி ஊழலில் ராஜீவ்காந்தியோடு சமரசம் செய்து கொள்ள மறுத்ததால் காங்கிரசை விட்டு வெளியேறினார் வி.பி.சிங் என்ற உண்மையை 'புதிய ஜனநாயகம்' மறைத்து - "கறைபடாதவர் என போற்றப்படும் இவர் போபோர்சு பீரங்கி விவகாரத்தில் வெளியேறி ஜனமோர்ச்சா எனும் கட்சியை உருவாக்கினார்" என்று எழுதுகிறது. கறைபடாதவராக இருந்த காரணத்தினால் தானே வெளியேறினார்?

போபோர்ஸ் ஊழலை அதிகாரத்தைப் பயன்படுத்தி மூடி மறைக்க முயன்றார் ராஜீவ். வி.பி.சிங் அதிகாரத்துக்கு வந்த பிறகு தான் பல தடைகளைக் கடந்து 'முதல் தகவல் அறிக்கையே' பதிவு செய்யும் நிலை உருவானது என்பதை எல்லாம் மறைத்து, குற்றவாளி ராஜீவ் கும்பலை தண்டிக்கவோ, விசாரிக்கவோ இல்லை என்று எழுதுவது பொறுப்புள்ள விமர்சனமாகுமா? 27 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து, வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக ராமன் ரதயாத்திரையைத் தொடங்கினார் அத்வானி. பீகாரில் யாத்திரை தடை செய்யப்பட்ட நிலையில், வி.பி.சிங் ஆட்சிக்கு பா.ஜ.க. ஆதரவைத் திரும்பப் பெற்ற வரலாறுகளையெல்லாம் மறைக்க, 'புதிய ஜனநாயகம்' ஏன் துடிக்க வேண்டும்? பீகாரில் லாலு, அத்வானி யாத்திரையைத் தடுத்து நிறுத்தியது, வி.பி.சிங், ஒப்புதல் பெற்றுத் தானே?

ஏதோ வி.பி.சிங்கை கேட்காமல் லாலுவே முடிவு எடுத்தது போல் ஏன் திரித்து எழுத வேண்டும்?

ராஜீவ் ஈழத்துக்கு இந்திய ராணுவத்தை அனுப்பினார் என்றால், ராணுவம் திருப்பி அழைக்கப்பட்டது வி.பி.சிங் பிரதமராக இருந்த போதுதான்; 'இன்னும் கேவலமாக தோற்பதைவிட, நாடு திரும்புவதே மேல்' என்ற முடிவின் பேரில் வி.பி.சிங் திருப்பி அழைத்ததாக அதையும் கொச்சைப்படுத்துகிறது 'புதிய ஜனநாயகம்'.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் - வி.பி.சிங் - புரட்சிகர மார்க்சிய லெனினியக் கட்சியின் உறுப்பினர்கள் அல்ல. ம.க.இ.க.வின் தத்துவார்த்தப் பார்வையில் கூற வேண்டுமானால், தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ

(8 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஈரோடு மாவட்ட கழகத்தின் புதிய பொறுப்பாளர்கள்

ஈரோடு மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 1.2.09 ஞாயிறு காலை 11 மணிக்கு கோபியிலுள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டன.

**தீர்மானங்கள்:**

ஈழத் தமிழர்களுக்காக தன் இன்னுயிரை ஈந்த தோழர் முத்துக்குமார் அவர்களுக்கு இக்கூட்டம் தன் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

வருகின்ற 4 ஆம் தேதி நடைபெறவுள்ள முழுக் கடையடைப்புப் போராட்டத்திற்கும், 7 ஆம் தேதி நடைபெறவுள்ள கருப்புக் கொடி ஊர்வலத்திற்கும் பெரும் ஆதரவு அளிப்பதுடன், அந்நிகழ்வில் பெருமளவு தோழர்கள் கலந்து கொள்வது என தீர்மானிக்கப்படுகின்றது.

ஈரோடு மாவட்டக் கழகத்தின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இலக்கு நோக்கி துரிதமாக அமைப்பை நகர்த்தும் ஒரு பெரிய நோக்கத்துடன், செயல் திட்டத்துடன் கீழ்க்கண்டவாறு புதிய பொறுப்பாளர்கள் மாற்றியும், புதியதாக நியமித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**புதிய பொறுப்பாளர்கள்:**

1. ஈரோடு மாவட்டக் கழக செய்தி தொடர்பாளர் - செயராமன்
2. மாவட்ட பொருளாளர் - தாமோதரன்
3. மாவட்ட இணைச் செயலாளர் - எலத்தூர் செல்வக்குமார்
4. மாவட்ட பெரியார் பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் - கோகுல் இராசு
5. கோபி நகர பெரியார் பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் - அ. பொன்ராசு
6. அந்தியூர் ஒன்றிய பெரியார் பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் - மேவாணி சுந்தரம்
7. பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழக துணைத் தலைவர் - புதுரோடு சிதம்பரம்
8. மாவட்ட இளைஞரணி தலைவர் - புதுரோடு இராசேந்திரன்
9. மாவட்ட இளைஞரணி செயலாளர் - அர்ச்சுனன்
10. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் - கு. செந்தில்குமார்
11. மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் - நிவாசு
12. கோபி ஒன்றியத் தலைவர் - திருமுருகன்
13. கோபி ஒன்றிய செயலாளர் - ஆனந்த ராசு
14. கோபி ஒன்றிய அமைப்பாளர் - கொளப்பலூர் பழனிச்சாமி
15. கோபி நகர இளைஞரணி தலைவர் - அ. முருகேசன்
16. கோபி நகர இளைஞரணி செயலாளர் - கிருட்டிணன்
17. கோபி நகர இளைஞரணி அமைப்பாளர் - செ. செகநாதன்
18. நம்பியூர் ஒன்றிய தலைவர் - அருளானந்தம்
19. நம்பியூர் ஒன்றிய செயலாளர் - அ. இரமேசு
20. நம்பியூர் ஒன்றிய அமைப்பாளர் - விசயசங்கர்
21. ‘சத்தி’ நகரச் செயலாளர் - அசோக் குமார்
22. ‘சத்தி’ ஒன்றியச் செயலாளர் - இறையிலன் மூர்த்தி
23. பெருந்துறை ஒன்றிய தலைவர் - கூதாம்பி துரை
24. பெருந்துறை ஒன்றிய செயலாளர் - விசு
25. பெருந்துறை ஒன்றிய அமைப்பாளர் - காமராசு
26. நம்பியூர் நகர தலைவர் - அழகிரி
27. நம்பியூர் நகர செயலாளர் - கலைச்செல்வன்
28. நம்பியூர் நகர அமைப்பாளர் - மா.செல்வன்
29. செங்கோட்டையா நகர் - கிளை தலைவர் - செ.ப.மூர்த்தி
30. செங்கோட்டையா நகர் - கிளை செயலாளர் - கு.வீராசாமி
31. செங்கோட்டையா நகர் - கிளை அமைப்பாளர் - சி.மோகன்

மேற்கண்ட இக்கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், சதுமுகை பழனிச்சாமி (மாவட்ட அமைப்பாளர்), இரநாதன் (மாவட்ட அமைப்பாளர்), எலத்தூர் செல்வக்குமார் (மாவட்ட இணைச் செயலாளர்), செயராமன் (கோபி நகரச் செயலாளர்), குணசேகரன் (கோபி நகர அமைப்பாளர்), நாகப்பன் (நகர தலைவர்), சிதம்பரம் (பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழக துணைத் தலைவர்), நிவாசு (மாவட்ட இளை - இணைச் செயலாளர்) ஆனந்த ராசு, பொன் ராசு, க. ஆனந்த், செ.ப.மூர்த்தி, சி.மோகன், கு. வீராசாமி, அ. முருகேசன், அ. குணசேகரன், கி.மௌலீஸ்வரன், சி.கோவிந்தராசு, கு.செந்தில்குமார், அருளானந்தம், விசயக்குமார், ப.ராசேந்திரன், அ.ரமேசு, அழகிரி, கொ.கி.சுப்ரமணியன், கோ.பொ.ஈசுவரமூர்த்தி, கி.ர.அறிவுமதி, நேதா. ஆசை (மாவட்ட பெரியார் ப.க. செயலாளர்) போன்ற ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 2 வயது ‘ஆதி’யின் சாதனை



ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கொடிவேரி பகுதியைச் சார்ந்த பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழகம், பவானி கூட்டுறவு நூற்பாலை கிளைச் செயலாளர் செயக்குமார்-அம்பிகா தம்பதியினரின் மகன் “ஆதி” அங்குள்ள கொமரசாமி கவுண்டர் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளியில் மொட்டு வகுப்பில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் பள்ளியில் முதல் மாணவனாக வந்துள்ளார். ஒரே நேரத்தில் 20 திருக்குறளை பிழையில்லாமல் கொஞ்சம்கூட தடுமாற்றம் இல்லாமல், தெளிவாக ஒப்புவிக்கின்றார். அவருக்கு வயது 2 தான் ஆகின்றது. சுயமரியாதை திருமணம் செய்து கொண்டு, தந்தை பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக தன் மகனையும், திறமைசாலியாக வளர்த்து கொள்கைக்கு பெருமைசேர்க்கும் தோழர்கள் செயக்குமார்-அம்பிகா- மகன் ஆதி ஆகியோரை மனதார வாழ்த்துவோம்.

**திரிபுவாத திம்மன்கள் – யார்? அடுத்த இதழில்**

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலில் இருந்த ஒருவரே, அந்த அரசியலுக்குள் அதிர்வுகளை நிகழ்த்தியவர் என்பதுதான். அந்த அதிர்வுகளின் தாக்கத்தைக் கவனத்தில் கொள்ளாமல் ஏற்கனவே இருந்த ‘சமூக நிலையைக் குலைத்து விட்டாரே’ என்று புலம்பும் பார்ப்பனியக் குரலோடு தன்னையும் சேர்த்துக் கொண்டு அதன் மூலம் தன் பங்கிற்கான ‘சேற்றை’ பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு வி.பி.சிங் மீது வீசுவது பார்ப்பனிய சார்புப் பார்வை அல்லவா?

‘புதிய ஜனநாயகத்தின்’ கட்டுரை நமக்கு பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. இடஒதுக்கீட்டுக் கொள்கையில் அக் கட்சியின் தெளிவான நிலைப்பாட்டை நாம் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். “இந்து மதத்தின் ஆன்மாவாக இருக்கும் பார்ப்பனியத்தை சாதிய அடுக்குமுறை மற்றும் ஒடுக்குமுறை அமைப்பை எதிர்த்து நமது போராட்டம் இருக்கும்” - என்று 1993-ல் அறிவித்த ம.க.இ.க. (‘புரட்சிப் புயல்’ - பக்.27, 28) 1998-ம் ஆண்டு கட்சித் திட்டத்துக்கான ஆவணத்தில் அத்திட்டம் காணாமல் போனது ஏன் என்பதும் நமக்குப் புரியவில்லை.

“இன்றைய நிலையில் இந்திய மக்கள் மீது மூன்று மலைகள் - அமெரிக்கத் தலைமையிலான மேல்நிலை வல்லரசுகள், தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம், நிலப் பிரவுத்துவம் ஆகியவை அழுந்திக் கொண்டிருக்கின்றன. இம் மூன்றும் தான் முக்கியமாக இந்திய மக்களின் எதிரிகளாகும்” - (ம.க.இ.க.வின் கட்சித் திட்டம்-1998). - என்று 1998 இல் திட்டத்தை வகுத்துவிட்டார்கள்.

இந்திய மக்களின் அடிப்படை எதிரிகளாக பார்ப்பனர், பார்ப்பனியச் சக்திகள் இல்லை என்பதை கட்சித் திட்டமாக வைத்துக் கொண்டு, அதே பார்வையில் வி.பி.சிங் பற்றிய விமர்சனத்தையும் முன் வைத்துக் கொண்டு ம.க.இ.க. செயல்படுவது நமக்கு பல்வேறு சந்தேகங்களை எழுப்பவே செய்கிறது.

‘கவி’யின் இந்த கட்டுரை ‘புதிய ஜனநாயகத்தின்’ பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையை சந்தேகப்பட வைத்துவிட்டது!

**– விடுதலை இராசேந்திரன்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டுள்ளது. ஆனால், பிணையில் வர முடியாத பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி வாதாடினார். வாதத்தை ஏற்றுக் கொண்டு நீதிபதி அனைவரையும் பிணையில் விடுதலை செய்வதாக அறிவித்தார்.

“இந்தப் போராட்டம் பொது நோக்கத்துக்காக நடத்தப்பட்டுள்ளது. பொதுச் சொத்துக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்தும் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். இந்த முக்கியத்துவம் கருதி, ஞாயிற்றுகிழமை விடுமுறை நாளாக இருந்த போதும் பிணை மனுவை நீதிமன்றம் ஏற்கிறது” என்று நீதிபதி, தமது ஆணையில் குறிப்பிட்டிருந்தார்.


வழக்கறிஞர் கருணாநிதி - போராட்டம் தொடங்கியது முதல் பிணையில் விடுதலையாகும் வரை உடனிருந்து வாதாடி, அனைத்து உதவிகளையும் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். விடியற் காலை 4.30 மணியளவில் தோழர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

பங்கேற்றத் தோழர்கள்: திருச்சி மாவட்டக் கழகத் தலைவர் இராசேந்திரன், மதுரை மாவட்ட செயலாளர் மாயாண்டி, பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளர் இலக்குமணன், தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சோலை மாரியப்பன், நாகை மாவட்ட அமைப்ாளர் இணைய ராசா, மாவட்ட செயலாளர் மகேஷ், துணைத் தலைவர் ரஷீத்கான், நகர செயலாளர் அன்பரசன், நகர தலைவர் நாஞ்சில் சங்கர், சீர்காழி நகரத் தலைவர் பெரியார் செல்வம், குடந்தை சிற்பிராசன் மற்றும் த.தே.பொ.க. கி.வெங்கட்ராமன், ஆதித் தமிழர் பேரவை வழக்கறிஞர் இளமதி, குடந்தை தமிழ்க் கழகம் பேகன், தமிழ் தேசிய விடுதலை இயக்க சிவ. காளிதாசன், மதுரை மகளிராயம் மேரி, த.தே.பொ.க. தஞ்சை மாவட்டத் தலைவர் பழ. இராசேந்திரன் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 07th February 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 பிப்ரவரி 12, 2009 புரட்சி 8 முழக்கம் 05 விலை : ரூ.2.50


## இந்திய அரசு வரி அலுவலகங்களை இழுத்து மூடும் போராட்டம்

*தமிழர் வரிப்பணத்தில் - ஈழத் தமிழர் படுகொலைக்கு இந்திய அரசு ஆயுத உதவிகள் வழங்குவதை நிறுத்தக் கோரி 'தமிழர் ஒருங்கிணைப்பு' தமிழகத்தில் வருமான வரி மற்றும் உற்பத்தி வரி உள்ளிட்ட இந்திய அரசு வரி நிறுவனங்களை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளது.*

*'இந்திய அரசின் வரி வாங்கும் நிறுவனங்களை இழுத்து மூடுவோம்' என்ற புது முழக்கத்துடன் இந்த முற்றுகைப் போராட்டம் 20.2.2009 வெள்ளிக்கிழமை அன்று சென்னை, கோவை, சேலம், ஈரோடு, மதுரை, தஞ்சை ஆகிய ஊர்களிலும் புதுவையிலும் நடக்கும்.*

- *இந்திய அரசே! தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள அரசுக்குப் படை உதவி செய்யாதே!*
- *தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரி!*
- *தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கு!*

*என்ற கோரிக்கைகளை முன் வைத்து தமிழகம் தழுவிய பரப்புரை இயக்கத்தை 'தமிழர் ஒருங்கிணைப்பு' நடத்தும் பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் உள்ளிட்ட தமிழ் ஈழ விடுதலை ஆதரவு அமைப்புகள் 'தமிழர் ஒருங்கிணைப்பில்' இடம் பெற்றுள்ளன.*

*உடன்பாடுள்ள தமிழின அமைப்புகள் - தமிழின உணர்வாளர்கள் போராட்டத்தில் பங்கேற்க அழைக்கிறோம் என்று கொளத்தூர் மணி, பெ. மணியரசன், தியாகு கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.*

## தமிழினமே! பார், இந்த வரலாற்றுத் துரோகத்தை!

*அக்டோபர் முதல் வாரத்தில் அதாவது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன் முயற்சியால் அக்.2 ஆம் தேதி அனைத்துக் கட்சியினர் நடத்திய உண்ணாவிரதத்துக்குப் பிறகு மயிலை மாங்கொல்லையில் முதல்வர் கலைஞர் கருணாநிதி தி.மு.க. கூட்டத்தைக் கூட்டி, மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். என்ன கூறினார்? ஈழத்தில் போர் நிறுத்தம் செய்ய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும். இரண்டு வார கெடுவுக்குள் போர் நிறுத்தம் வராவிட்டால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்றார். தொடர்ந்து, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும், தங்கள் பதவி விலகல் கடிதத்தை முன் கூட்டியே கலைஞரிடம் தரத் தொடங்கினர்.*

*மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தி, இதே கோரிக்கை வலியுறுத்தப் பட்டது. அதற்கும் மத்திய அரசு அசையவில்லை. அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார். மீண்டும் போர் நிறுத்தம் வலியுறுத்தப்பட்டது. வெளிநாட்டுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு சென்று போர் நிறுத்தத்தை வலியுறுத்த வற்புறுத்தப்பட்டது. முதல்வரை சந்திக்க சென்னை வந்த பிரணாப் முகர்ஜியிடமும் நேரில் வலியுறுத்தப்பட்டது. பிரணாப் முகர்ஜி இலங்கை போகவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகலுக்கான கெடு முடிந்ததும், அத்திட்டம் கைவிடப்பட்டது. அனைத்துக் கட்சியினரை அழைத்துக் கொண்டு முதல்வர் டெல்லி போய் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து நேரில் வற்புறுத்தினார். எந்தத் துரும்பும் அசையவில்லை. ராணுவத்தின் இனப் படுகொலை தொடர்ந்து கொண்டே இருந்தது; மேலும் மேலும் தீவிரமானது.*

*கிளிநொச்சியை ராணுவம் பிடித்தது. 3 லட்சம் மக்கள் விடுதலைப்புலிகளோடு முல்லைத் தீவுக்கு இடம் பெயர்ந்தனர். முல்லைத் தீவையும் ராணுவம் சுற்றி வளைத்து குண்டுகளை வீசி வருகிறது. ஷெல் தாக்குதலை நடத்தி வருகிறது. உணவு, மருந்து பொருள்கள் இல்லை. 'போரில்லாத பகுதியாக' ராணுவம் அறிவித்தப் பகுதியிலும் குண்டு வீச்சு, ஷெல் வீச்சு தொடருகிறது. புதுக் குடியிருப்பில் உள்ள தற்காலிக மருத்துவமனை மீதே குண்டுகளை வீசி நோயாளிகளை பிணமாக்கியது சிங்கள ராணுவம். எங்கும் தமிழனின் மரண ஓலங்கள்; ரத்தவாடைகள்; பிணக் குவியல்கள்.*

*அய்.நா.வே போரை நிறுத்தக் கோரி தனது தூதுவரை போர் முனைக்கு நேரே அனுப்புகிறது. அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனும், பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் மிலிபேண்ட் என்பவரும் கூட்டாக இணைந்து போரை நிறுத்தக் கோரி அறிக்கை விடுத்தனர். ஜப்பான், நார்வே, ஜெர்மன் நாடுகளும் போரை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தன. உலக நாடுகளின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று, ராஜபக்சேயின் தம்பியும், ராணுவ செயலாளருமான கோத்தபய ராஜபக்சே அறிவித்து விட்டார். தமிழ் மக்களின் ராணுவமான விடுதலைப் புலிகள், தற்காப்பு யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உதவிக்குச் சென்ற சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் வாகனங்கள் மீதும், மருத்துவ மனைகள் மீதும் ராணுவம் குண்டு வீச்சு நடத்துகிறது. அய்.நா.வின் பிரதிநிதிகளே போர்முனைப் பகுதிகளில் குண்டு வீச்சு காயங்களுக்கு உள்ளாகி விட்டனர்.*

*சர்வதேசமுமே கண்டிக்கும் இந்த இனப் படுகொலையைக் கண்டித்து, போரை நிறுத்தச் சொல்லாத நாடு இந்தியா தான். அதுவும் தமிழகத்தின் ஒருமித்த வேண்டுகோள், போராட்டங்களை அலட்சியப்படுத்தி, ஆணவச் சிரிப்பு சிரித்து வருகிறது. இவ்வளவுக்கும் பிறகும் இந்தியாவைக் கண்டித்தால் - ஒவ்வொரு நாளும் நடக்கும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரினால் - சிங்கள இனப்படு கொலைக்கு எதிரான குமுறலை தி.மு.க. ஆட்சிக்கு எதிரான 'அரசியல்' என்கிறது - தி.மு.க. தலைமை!*

*"மத்திய அரசை எதிர்க்கவே கூடாது; தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்" என்று மீண்டும் தோல்வி கண்ட "வலியுறுத்தல்" பாதையிலேயே பயணம் செய்ய கலைஞர் கருணாநிதி அழைக்கிறார். தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி நீடிக்க வேண்டும் என்ற அற்ப அரசியல் லாபத்துக்காக அன்றாடம் நடக்கும் "இனப் படுகொலை"யை எதிர்த்துப் போராடக் கூடாது என்கிறார்கள்.*

*மத்திய அரசு - இனப்படு கொலையை தடுக்க வேண்டும் என்று மனம் திருந்தும் காலம் வரை காத்திருக்க வேண்டும் என்கிறார்கள். தி.மு.க. உருவாக்கியுள்ள 'இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை' நடத்தியுள்ள கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் இவ்வாறு பேசியுள்ளார்:*

*"நம்முடைய குரலை, நம்முடைய வார்த்தையை அவர்கள் மதிப்பார்களா என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் நம்முடைய நன்மைக்காகத் தான் தமிழ் நாட்டில் கலைஞருடைய ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்று கருதுகிறோமோ, அப்படித்தான் டெல்லியிலே சோனியாகாந்தி வழிகாட்டுதலிலேயே மன்மோகன்சிங் அரசு நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறோம்" என்று பேசியுள்ளார் ('முரசொலி' பிப்.10)*

*'தமிழர் நல உரிமைப் பேரவை' என்ற பெயரில் நடைபெறும் கூட்டங்களில் 'தி.மு.க. கூட்டணி நலன்கள்தான்' முன்னிறுத்தப்படுகிறதே தவிர, ஈழத் தமிழர் இனப் படுகொலை பற்றியோ இந்தியாவின் துரோகம் பற்றியோ சிங்கள அரசை கண்டித்தோ, கருத்துகள் முன் வைக்கப்படுவதில்லை.*

**(4 ஆம் பக்கம்)**

## மீண்டும் 'சத்தியமூர்த்தி' காலத்துக்கு திரும்புகிறது, தமிழக காங்கிரஸ்

*தமிழ்நாட்டில் மக்கள் விரோத அமைப்பாக பார்ப்பனர்களுக்கான கட்சியாகவே காங்கிரஸ் இருந்தது. சுயமரியாதை இயக்கம் காங்கிரசின் தமிழின விரோதப் போக்கை மக்கள் மன்றத்தில் தோலுரித்தது. காங்கிரஸ் கட்சியில் சுயமரியாதை இயக்கத்தை 'தரம் தாழ்ந்த' மொழிகளில் பேசி வந்தவர் சத்தியமூர்த்தி எனும், காங்கிரசுப் பார்ப்பனர்; அவரது பெயர் தான் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்துக்கும் சூட்டப்பட்டிருக்கிறது. வர்ணாஸ்ரம வெறியில் ஊறிப் போன சத்தியமூர்த்தி கோயில்களில் பெண்களை தேவதாசிகளாக்கும் கொடுமையை ஒழிக்க சட்டம் வந்த போது அதைக் கடுமையாக எதிர்த்தவர். இது ஒரு உதாரணம் தான். அவ்வளவு மோசமான வைதீக வெறியர். இந்தப் பார்ப்பனரைப் பற்றி குத்தூசி குருசாமி ஒரு முறை 'குடிஅரசு' ஏட்டில் ஒரு நையாண்டி கட்டுரை எழுதினார். அதன் தலைப்பு "அழுகிய முட்டை அரை அணாவுக்கு ஆறு" என்பதாகும். அதில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.*

> *"முட்டையால் அடிப்பதால் மனிதன் செத்துவிட மாட்டான். அதற்காக இயக்கத்தவர்கள் எவரையும் முட்டையால் அடித்துப் பார்க்க வேண்டாம். நல்ல முட்டைகளை வீணாக்கக் கூடாது. அப்படியானால் அழுகிய முட்டையால் அடிக்கலாம் என்று எண்ணி அடித்து விடாதீர்கள். நான் சொன்னால் நீங்கள் கேட்கவா செய்வீர்கள்? நீங்கள் செயல் வீரர்களாச்சே? எப்படி இருந்த போதிலும் சத்தியமூர்த்தியை அடித்து விடாதீர்கள். இயக்க வளர்ச்சியைக் கண்டு பயத்தில் ஏதோ உளறுகிறார்".*

*- என்று எழுதினார், அடுத்த இரண்டு நாட்களிலேயே புதுக்கோட்டையில் சத்தியமூர்த்தி பேசியபோது இயக்கத்தவர்கள் அழுகிய முட்டையால் அடித்தே விட்டார்கள் அய்யரை. செய்தி அறிந்த இளங் குத்தூசி, "அண்ணா முதுகு எப்படி இருக்கிறது" என்று மீண்டும் கிண்டலாக எழுதினார்.*

*குத்தூசி குருசாமியின் வரலாற்று ஆசிரியர் குருவிக்கரம்பை வேலு தனது நூலில் - இதைப் பதிவு செய்துள்ளார்.*

*சத்திய மூர்த்தியின் காலத்துக்கு மீண்டும் தமிழக காங்கிரசார் திரும்பியுள்ளனர். அதே பார்ப்பனக் குரல், காங்கிரஸ் முகாமிலிருந்து ஒலிக்கத் தொடங்கியுள்ளது.*

# ஒரே குரலில் ‘இந்து’ - கலைஞர் கருணாநிதி - வீரமணி

ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசின் ராணுவப் படுகொலையை வெளிப்படையாக ஆதரித்து இலங்கை அரசின் இரண்டாவது தூதரகமாக செயல்பட்டு வரும் ‘இந்து’ நாளேடு அண்மையில் தி.மு.க. செயற்குழு மேற்கொண்ட முடிவுகளை மனம் குளிர பாராட்டி வரவேற்று தலையங்கம் தீட்டியுள்ளது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சியும், மாநிலத்தில் தி.மு.க. ஆட்சியும் இந்தப் பிரச்சினையில் மிகவும் உள்ளத்தைத் தொடக்கூடிய அரசியல் மேன்மை மிக்க செயல்பாடுகளை வெளிப்படுத்தி வருவதாக ‘இந்து’வின் தலையங்கம் கூறுகிறது (பிப்.4). சிறிலங்காவில் நடக்கும் சம்பவங்களை எதிர்கொள்வதில் மிகவும் நிதானத்தோடு அளந்து செயல்படுவதோடு தனது மேதைமையான முதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அந்தத் தலையங்கம் கூறுகிறது.

“Between them, the Dravida Munnetra Kazhagam government in Tamil Nadu and the United Progressive alliance at the Centre have shown impressive political statesmanship and foot-work in responding to the challenge of digesting and responding soberty to what is happening in Sri Lanka.”

மேலும் அத்தலையங்கத்தில், “தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சிகள் போர் நிறுத்தம் கோருகின்றன; விரல்விட்டு எண்ணக்கூடிய குழுக்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றன; தமிழகத்தின் கொந்தளிப்பான இச்சூழ்நிலையில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி, தனது கவலை தமிழ் மக்களைப் பற்றித் தானேயொழிய விடுதலைப் புலிகளைப் பற்றியல்ல என்று திட்ட வட்டமாக சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப் படுத்திவிட்டார். அதுமட்டுமல்ல; கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப்புலிகள் நடத்தி வரும் சகோதர யுத்தத்தையும், முரட்டுத்தனமான கொள்கைகளையும் மிகவும் துல்லியமாக விமர்சித்துள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை தி.மு.க. செயற்குழு நிறைவேற்றிய மூன்று அரசியல் தீர்மானங்கள் இலங்கை இனப்பிரச்சினையில் இதுவரைத் தமிழகம் முன் வைத்த கோரிக்கைகளிலிருந்து மாறுபட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானங்களாகும். தமிழகத்தில் ஆளும் கட்சியான தி.மு.க.வின் எதிர்பார்ப்பையும் முன் வைக்கும் பிரச்சாரத்தையும், தி.மு.க. செயற்குழு தெளிவாக திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது. விடுதலைப் புலிகள் பற்றி எதுவும் குறிப்பிடாமல், அப்பாவி தமிழ் மக்களின் பாதுகாப்பும் நலன்களும் பாதுகாக்கப்பட்டு, சுமூகமான நிலை திரும்ப வேண்டும் என்று தி.மு.க. செயற்குழுவின் தீர்மானம் கூறுகிறது. வடக்கு, கிழக்கு மாநிலங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்து, சுயாட்சி வழங்கும் வகையிலான அரசியல் தீர்வை (ஒன்றுபட்ட இலங்கைக்குள்) இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்று அத் தீர்மானம் கூறுவதோடு, இந்த இலக்கை அடைவதற்கு சிறீலங்கா அரசு **ஒத்துழைக்க வேண்டும்** என்றும் கோரியிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதில் தமிழ்நாடு அரசினை பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய அம்சம் வேகம் பெற்று வரும் ஒரு பிரச்சினையில் - மத்திய அரசோடு தன்னையும் இணைத்துக் கொண்டு எதிர்காலத்துக்கான தீர்வை முன் வைத்துள்ளதுதான்! (A commendable feature of the Tamil Nadu Government’s response is the forward looking way in which it has teamed up with the Central government in responding to a fast-developing situation.) பிரணாப் முகர்ஜியின் அறிவார்ந்த நடுநிலையான அணுகுமுறையைப் பாராட்ட வேண்டும். அவர் கொழும்பு சென்று, ராஜபக்சேயை சந்தித்து, இந்தப் பிரச்சினையை சாதுர்யத்தோடு கையாண்டதே இதற்கு காரணம். இதன் காரணமாகத்தான் **மாநில அரசும், மத்திய அரசும் தங்களை ஓரணியாக்கிக் கொண்டுள்ளன.** விடுதலைப் புலிகளின் கடந்தகால தவறுகள் பற்றி உணர வைத்து, எதிர்கால அமைதித் தீர்வை நோக்கி மத்திய மாநில ஆட்சிகளை திரும்பச் செய்துள்ளது - என்று ‘சிறிலங்கா ரத்னா’ விருதைப் பெற்ற ‘இந்து’ ராம் தனது ஏட்டின் தலையங்கத்தில் பாராட்டு மழையில் தி.மு.க.வை மூழ்க செய்து விட்டார்.

மத்திய காங்கிரஸ் ஆட்சியின் கொள்கையோடு தி.மு.க. தன்னையும் இணைத்துக் கொண்டு விட்டது என்பதே ‘இந்து’வின் மய்யமான கருத்து. பார்ப்பன ‘இந்து’ ஏட்டிடமிருந்து கிடைத்துள்ள இந்த சான்று ஒன்று மட்டுமே தி.மு.க. மேற்கொண்ட துரோகத்தை வெளிப்படுத்துவதற்கு போதுமானதாகும்.

‘இந்து’ ஏடு போற்றிப் பாராட்டும் ஒரு தீர்வு திட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார். ‘இந்து’ ஏடு எதை ஆதரிக்கிறதோ, அதை எதிர்த்து எழுதினாலே போதும் என்று பெரியார், தாம் ‘விடுதலை’ ஆசிரியராகப் பொறுப்பேற்றபோது தனக்கு ஆலோசனை கூறியதாக கி.வீரமணி அடிக்கடி கூறுவார். இப்போது ‘இந்து’ ஏடு பார்ப்பன வெறியோடு முன் வைக்கும் கருத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு ‘கலைஞரின் தூதுவராக’ வீரமணி களமிறங்கியிருப்பதை தமிழின உணர்வாளர்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

தி.மு.க. உருவாக்கியுள்ள ‘இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை’ நடத்தும் பிரச்சாரத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு தீவிரப் பிரச்சார பீரங்கியாக மாறி நிற்கும் கி.வீரமணி, கடந்த காலங்களில் எத்தகைய கருத்துகளை முன் வைத்தார்? துரோக காங்கிரசாரிடம் தி.மு.க. - அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுமே கூட்டு சேரக் கூடாது என்று கூறி, திராவிட கட்சிகள் ஓரணியில் சேர்ந்து போட்டியிட வேண்டும் என்று ‘திராவிட பார்முலாவை’ அன்று முன் வைத்த கி.வீரமணி, இப்போது காங்கிரசின் பச்சை துரோகத்துக்கு நடை பாவாடை விரிக்கும் தி.மு.க.வோடு கைகோர்த்துக் கொண்டு காங்கிரசாரோடு ஒரே மேடையை பகிர்ந்து கொண்டு பேசி வருவதற்குப் பெயர் என்ன? தமிழர்களுக்கு எதிராக காங்கிரசின் பச்சை துரோகத்தை எதிர்த்து, தமிழகமே கொந்தளிக்கும் சூழ்நிலையில் கி.வீரமணியின் காங்கிரசு எதிர்ப்பு முழக்கம் எங்கே போனது? ஏன் வாயடைத்துப் போனது? இதோ, உதாரணத்துக்கு ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டுகிறோம்:

> “திராவிட இயக்கங்களான அரசியல் கட்சிகளுக்கு நமது கனிவான வேண்டுகோள் என்னவென்றால், மீண்டும் காங்கிரசுடன் சேருவது பற்றி சிந்திப்பதை ஒரு புறத்தில் தள்ளி வைத்து, நாடாளு மன்றத்திற்கான 40 இடங்களுக்கும் (புதுவை உட்பட) நீங்கள் ஒரு தொகுதி உடன்பாட்டிற்கு ஏன் முயற்சிக்கக் கூடாது? திராவிட பார்மூலா என்று நாம் முன்பு வற்புறுத்தியதையே மீண்டும் நினைவூட்டுகிறோம்; இதை அசை போட்டுச் சிந்தியுங்கள். அதற்கான வாய்ப்பு உருவாகும் என்று குறிப்பிட்டுள்ளோம். இப்போது அதற்கான வாய்ப்பு வந்துள்ளது.
>
> ஒத்த கருத்துள்ளவர்கள் ஏன் ஓரணிக்கு வரக்கூடாது?
>
> மொழி (இந்தி)ப் பிரச்சினை, மாநில சுயாட்சி, திராவிடப் பண்பாட்டினை காத்தல், காவிரிப் பிரச்சினை, **ஈழத் தமிழர் இனப் படுகொலை தடுப்புப் பிரச்சினை** இவைகளில் உங்களால் ஒத்தக் கருத்து கொள்ள முடிகிறது; அகில இந்திய கட்சிகளால் அப்படி அதனை செரிமானம் செய்து கொள்ள முடியவில்லை. அத்தகையவர்களுக்கு விட்டுக் கொடுத்து அவர்களோடு தொகுதி உடன்பாடு காண முயலும்போது, 25 ஆண்டுகள் நேற்று வரை ஒரே அணியில் இருந்து கோபதாபங்கள் காரணமாகப் பிரிந்த நீங்கள், மிகப் பெரும் பகையாளர்கள் போல் எவ்வளவு காலத்திற்குக் கட்சி நடத்தப் போகிறீர்கள்? (‘விடுதலை’ 10.3.96)

- என்று அன்று கி.வீரமணி எழுதினார். காங்கிரசை தனிமைப்படுத்த அன்று குரல் கொடுத்தவர். இன்று தமிழகத்தின் உணர்வாக அந்தக் கருத்து உருவாகும் போது தி.மு.க.வுடன் சேர்ந்து காங்கிரசுடன் கை குலுக்குவது, தமிழினத் துரோகம் அல்லவா?

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் சர்வாதிகாரி என்றும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை தி.மு.க. ஆதரிக்கவில்லை என்றும் முதல்வர் கலைஞர் கருணாநிதி செயற்குழுவில் பேசியிருக்கிறார். இதைக் கண்டிக்காத வீரமணி, தி.மு.க. அமைத்துள்ள குழுவிலும், இடம் பெற்றுள்ளார். அப்படியானால், பிரபாகரன் சர்வாதிகாரி என்ற முதல்வர் கலைஞர் கருணாநிதி கருத்தை கி.வீரமணி ஆதரிக்கிறாரா? இல்லை என்றால், அதை இதுவரை மறுத்து எழுதாதது ஏன்? தி.மு.க.வின் துரோகப் பாதை தான் தி.க.வின் பாதையா?

1991 இல்விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை இந்தியாவில் அய்க்கிய முன்னணி ஆட்சி நீட்டித்தது. அப்போது தமிழ்நாட்டில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியே நடந்தது. அப்போது இதே கி.வீரமணி என்ன எழுதினார்? விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிக்கக் கூடாது என்று எழுதினார்.

> “ஏனைய போராளிக் குழுக்களில் பலவும் தாராளமாக தமிழ்நாட்டில், இந்தியாவில் நடமாட உரிமைகள் அளித்து விட்டு, விடுதலைப் புலிகள் அமைப்பினை மட்டும் தடை செய்வது ஏன்?”

- என்று கேட்ட வீரமணி, அப்போது தமிழகத்தில் இருந்த கலைஞர் கருணாநிதி அரசும் இதற்கு உடன்பட்டு பழியை சுமக்கக்கூடாது என்று எழுதினார்.

“மத்திய அரசு - அய்க்கிய முன்னணி அரசு முந்தைய அதிகார வர்க்கம் விரித்த வலையில் வீழ்ந்து, அவகீர்த்தியைத் தேடிக் கொள்வதும் தமிழக தி.மு.க ஆட்சி - கலைஞர் அரசு இதில் **பழியைச் சுமப்பதும்** தேவையற்ற ஒன்று என்பது நமது உறுதியான கருத்து. (‘விடுதலை’ 15.6.96)

1996 இல் வெளியிடப்பட்ட **உறுதியான கருத்து**. இப்போது தி.மு.க. தலைமை விடுதலைப் புலிகளையும், அதன் தலைவரையும் இழிவுபடுத்திப் பேசும்போது எங்கே போய் பதுங்கிக் கொண்டது?

மத்திய அரசின் கொள்கையோடு தி.மு.க. தன்னையும் இணைத்துக் கொண்டுவிட்டதாக ‘இந்து’ பார்ப்பன ஏடு கலைஞர் கருணாநிதியை பாராட்டி மகிழ்கிறது.

‘இந்து’ பார்ப்பன ஏட்டின் கருத்துகளை எதிர்ப்பதே பெரியார் கற்றுத் தந்த அணுகுமுறை என்று கூறி வந்த கி.வீரமணி, இப்போது ‘இந்து’வின் பாராட்டைப் பெறும் கலைஞர் கருணாநிதியோடு கரம்பிடிக்க நின்று கொண்டிருப்பதற்கு வெட்கப்பட வேண்டாமா?

திராவிடர் கழகத்தில் இன்னும் மிச்சம் மீதியுள்ள உணர்வுள்ள இளைஞர்களைக் கேட்கிறோம்,

கி. வீரமணியின் இந்த துரோகத்தை இன்னும் ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா? காங்கிரஸ் கட்சித் தொண்டன்கூட இன துரோகத்தை எதிர்த்து, அக்கட்சியைக் கண்டித்து, தீக்குளிக்கும் போது பெரியார் தொண்டர்களே இந்த துரோகத்தைத் தட்டிக் கேட்காமல் வாய் மூடி நிற்கப் போகிறீர்களா? அல்லது ‘உலகத்தின் ஒரே தமிழர் தலைவர் எங்கள் தலைவர்’ என்று மீண்டும் பஜனைப் பாடல்களைப் பாடப் போகிறீர்களா? ●

## வீரச் சாவடைந்த ரவிச்சந்திரனுக்கு கழகம் இறுதி வணக்கம்

ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரசின் துரோகத்தை எதிர்த்து காங்கிரஸ் தொண்டர் ரவிச்சந்திரன் சீர்காழியில் பிப்.7 அன்று தீக்குளித்து வீரச் சாவடைந்தார். அவரது இறுதி ஊர்வல நிகழ்வில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். பிப்.5 ஆம் தேதி சீர்காழியில் விடுதலை இராசேந்திரன், கழகம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் ஆற்றிய உரையை ரவிச்சந்திரன் கேட்டார். அந்த உரையைக் கேட்டு இல்லம் சென்ற ரவிச்சந்திரன் அது பற்றியே பேசிக் கொண்டிருந்தார் என்றும், அடுத்த நாள் இப்படி ஒரு முடிவுக்கு வந்து விட்டார் என்றும் ரவிச்சந்திரன் தாயார் குறிப்பிட்டார்.

சென்னையில் 7 ஆம் தேதி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்திய கருப்புக் கொடிக் கண்டன ஆர்ப் பாட்ட கூட்டத்தில் பேசிய ம.தி.மு.க. பொதுச்செய லாளர் வைகோ. தனது உரையிலும் மறைந்த ரவிச்சந்திரன் தாயார் கூறியதை சுட்டிக் காட்டினார்.

# 47 உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு ரத்து

## தலித்துகளுக்கும் பழங்குடி மக்களுக்கும் மன்மோகன் ஆட்சி இழைக்கும் மற்றொரு துரோகம்

**எஸ்.வி. ராஜதுரை**

மத்திய அரசாங்கத்தின் 'அலுவலர்கள் மற்றும் பயிற்சித் துறை' கொண்டு வந்த, 'அட்டவணை சாதியினருக்கும் அட்டவணைப் பழங்குடியினருக்கும் பணியிடங்களிலும் இட ஒதுக்கீடு மசோதா 2008' கடந்த நாடாளுமன்றத் (மாநிலங்கள் அவை) தொடர் கூட்டத்தின் கடைசி நாளன்று, வழக்கம் போலவே எந்தவிதமான விவாதங்களுமின்றி நிறைவேற்றப் பட்டு விட்டது. 2009 பிப்ரவரி மாதத்தில் நடக்கவிருக்கும் மக்களவைத் தொடர் கூட்டத்திலும் அது 'விவாத'த்திற்கு வைக்கப்பட்டு எந்தவித எதிர்ப்புமின்றி நிறைவேற்றப்படும் சாத்தியப்பாடு உள்ளது.

மேற்சொன்ன சமூகப் பிரிவினருக்குத் தரப்படும் 'இடஒதுக்கீடுகளுக்கு' சட்டரீதியான தகுதியை வழங்கவும் அவர்களது தன்னம்பிக்கையை வலுப் படுத்தவும் இந்த மசோதா கொண்டு வரப்படுவதாக மத்திய அரசாங்கம் கூறுகிறது. ஆனால், அவர்களது தன்னம்பிக்கையைக் குலைப்பதும், ஏற்கனவே அவர்கள் அனுபவித்து வரும் இட ஒதுக்கீட்டை ஒழித்துக் கட்டுவதும், இந்தியாவின் உயர்கல்வி நிலையங்களில் பார்ப்பன - மேல்சாதியினரின் ஆதிக்கத்தை எவ்வித எதிர்ப்புமின்றி நிலை நிறுத்துவதுமே இந்த மசோதாவின் உண்மையான குறிக்கோளாகும். அதாவது 'தேசம் முழுவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்த' உயர் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் பதவிகளில் 'இட ஒதுக்கீட்டின்' வழியாக அட்டவணை சாதியினரையும் அட்டவணைப் பழங்குடி மக்களையும் சார்ந்தவர்களை பணிக்கு அமர்த்துவதை ஒழித்துக் கட்டும் மசோதாதான் இது.

உயர் கல்வி நிலையங்களில் ஆசிரியர் பதவிகளில் அட்டவணை சாதியினர் / பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரைச் சார்ந்தவர்களை 'இட ஒதுக்கீட்டின்' மூலம் பணியில் அமர்த்துவதற்கு மத்திய அரசாங்கத்தின் மனித வள மேம்பாட்டுத் துறை மேற்கொண்டு வந்த முயற்சிகளை, இந்தியாவிலுள்ள ஐஐடி இயக்குநர்கள் விடாப்பிடியாக எதிர்த்து, அந்தத் திட்டம் கைவிடப்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளனர். 'இட ஒதுக்கீட்டின்' மூலம் அந்த நிறுவனங்களினதும் அவற்றில் சேர்ந்து பட்டம் பெறுபவர்களினதும் 'திறமை' பாதிக்கப்படும் என்னும் மனுவாதத்தைத் தொடர்ந்து உயர்த்திப் பிடித்து வரும் இந்த இயக்குநர்களின் கோரிக்கைகளுக்கு (அதாவது இந்த நிறுவனங்கள் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்னும் அவர்கள் பாராட்டிக் கொள்ளும் உரிமைகளுக்கு) ஒப்புதல் தரும் வகையில், சில மாதங்களுக்கு குவஹாத்தி ஐஐடியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் மன்மோகன் சிங் கொடுத்த வாக்குறுதியும் அமைந்திருந்தது. உயர்கல்வி நிறுவனங்களில் 'இடஒதுக்கீடு முறை'யைப் புகுத்துவதால் அவற்றின் திறமை கெட்டுவிடும் என ஐஐடி இயக்குநர்கள் கூறி வந்ததையும் அவர்கள் தெரிவித்து வந்த 'கவலை உணர்வுகளை'யும் மத்திய அரசாங்கம் அனுதாபத்துடன் பரிசீலிக்கும் என மன்மோகன் சிங் அங்கு வாக்குறுதி தந்தார். அந்த வாக்குறுதிதான் மேற்சொன்ன மசோதா வடிவத்தில் வெளிப்பட்டிருக்கிறது.

பார்ப்பனர்களைத் தவிர்த்த, மற்றவர்களுக்கு அட்டவணை சாதியினர்/பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு 'திறமை' இருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழிமுறையாக இருந்து வருவது 'இடஒதுக்கீடு' தான். அந்த இடஒதுக்கீட்டின் வழியாகவே பல்கலைக்கழக மானியத்தின் தலைவராக சுக்தேவ் தோரட்டும், மத்தியத் திட்டக் குழு உறுப்பினராக முங்கேகரும், ராஞ்சி பல்கலைக்கழக (முன்னாள்) துணை வேந்தராக ராம்தயாள் முண்டாவும், அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர்களாக ஆனந்தகிருஷ்ணன் போன்றோரும் இருக்க முடிந்தது. அவர்கள் தத்தம் துறையில் பார்ப்பனர்களுக்கோ, பிற முற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கோ எவ்வகையிலும் திறமை குறைந்தவர்கள் அல்லர் என்பதும், இடஒதுக்கீட்டின் மூலமே வெளிப்பட்டது. இடஒதுக்கீடு என்பது இல்லாமலிருந்தால் இந்தியாவில் பொருளுற்பத்தியில் ஈடுபட்டுள்ள சாதிகளைச் சேர்ந்தவர்களால் 'மூளை உழைப்பிலும்' பெரும் சாதனையைச் செய்ய முடியும் என்பதை வெளிப்படுத்துவதற்கான வேறு எந்த வாய்ப்பும் இருந்திருக்காது.

மேற்சொன்ன மசோதா மக்களவையின் ஒப்புதலையும் பெற்றுவிடுமேயானால், கீழ்க்காணும் 47 உயர் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டின் மூலம் அட்டவணை சாதியினரையும் பழங்குடியினரையும் ஆசிரியர்களாகப் பணியிலமர்த்துவது ஒழித்துக் கட்டப்படும்: இந்தியா முழுவதிலுமுள்ள ஏழு ஐ.ஐ.டி.கள், ஏழு ஐஐஎம்-கள், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம், அலகாபாத் பல்கலைக்கழகம், பத்து தேசியத் தொழில் நுட்ப நிறுவனங்கள், புதுச்சேரியிலுள்ள ஜிப்மர், வாரனாசி இந்துப் பல்கலைக்கழகம், டெல்லிப் பல்கலைக்கழகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான முதுகலைப் பட்டப் படிப்பு நிறுவனம், சந்திகர், மேற்கு வங்காளத்திலுள்ள விசுவ பாரதி, கோல்கொத்தாவிலுள்ள விக்டோரியா நினைவகம், தேசிய நூலகம், இந்திய அருட்காட்சியகம், புதுடெல்லியிலுள்ள இந்திய போர் நினைவகம்.

ஏற்கனவே பல்வேறு ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியது போல 'டி' பிரிவு பணிகளில் மட்டுமே அட்டவணை சாதியினருக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ஆசிரியர் பதவிகளைப் பொறுத்தவரை, உயர் கல்வி நிறுவனங்களில் அவர்கள் பெற்றுள்ள இடங்கள் பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு: டெல்லி பல்கலைக் கழகத்தில் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 6500 ஆகும். அட்டவணை சாதியினருக்கும் பழங்குடி மக்களுக்கும் இதில் 1500 இடங்கள் இருக்க வேண்டும். ஆனால், 2001 இல் இந்தப் பிரிவினரைச் சேர்ந்த ஆசிரியர்கள் 100 பேர் மட்டுமே இருந்தனர். பின்னர் இது 400 ஆக உயர்ந்தது. நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் ஆசிரியர்களாகப் பணியாற்றிய டெல்லி பொருளாதாரப் பள்ளியில் 1999 ஆம் ஆண்டு நிலவரப்படி மேற்சொன்ன பிரிவினரைச் சேர்ந்த ஆசிரியர்கள் 4 பேர் இருந்திருக்க வேண்டும். ஆனால் ஒரே ஒருவர் மட்டுமே அங்கிருந்தார்.

அட்டவணை சாதியினர் / பழங்குடி மக்களுக்கான தேசிய ஆணையத்தின் (இந்த ஆணையம் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் இருந்த காலத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டது) 1999-2000-த்திற்கான அறிக்கை, கீழ்காணும் உயர் கல்வி நிறுவனங்களில் இருந்த மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை, அதில் அட்டவணை சாதியினர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தந்துள்ளது (அடைப்புக் குறிகளுக்குள் இருப்பவை மேற்சொன்ன பிரிவினருக்கு உள்ள இடங்கள்):

**மேல்சாதியினரின் ஆதிக்கத்தை எவ்வித எதிர்ப்புமின்றி நிலை நிறுத்துவதுவே இந்த மசோதாவின் உண்மையான குறிக்கோளாகும்.**

பேராசிரியர் : வாரனாசி இந்து பல்கலைக்கழகம்: 360(1); அலிகார் பல்கலைக்கழகம்: 233(0); ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், டெல்லி: 183(2); டெல்லி பல்கலைக்கழகம் : 332(3); ஜமியா இஸ்லாமியா பல்கலைக்கழகம், டெல்லி : 90(0); விசுவ பாரதி, மேற்கு வங்கம்: 148(1); ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகம்: 72(1).

இணைப் பேராசிரியர் (ரீடர்): வாரனாசி இந்து பல்கலைக்கழகம் : 396(1); அலிகார் பல்கலைக்கழகம் : 385(0); ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம்: 100(3); டெல்லி பல்கலைக்கழகம்:197(2); ஜமியா இஸ்லாமியா பல்கலைக்கழகம், டெல்லி: 128(1); விசுவ பாரதி: 70(1; ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகம் : 187(2).

விரிவுரையாளர்: வாரனாசி இந்து பல்கலைக் கழகம் : 329(1); அலிகார் பல்கலைக்கழகம் : 521(1); ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் : 70(10); டெல்லி பல்கலைக்கழகம்: 140(9); ஜமியா இஸ்லாமியா பல்கலைக்கழகம், டெல்லி: 216(1); விசுவ பாரதி: 188(16); ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகம்: 44(13).

மேற்சொன்ன விவரங்கள் ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முற்பட்டவை. எனினும், தற்போது நிலைமை பெருமளவில் மாறியிருப்பதற்கான ஆதாரங்கள் ஏதுவுமில்லை. பல்கலைக்கழக மானிய ஆணையம் 1959 இல் நிறுவப்பட்டது. ஆனால் 50 ஆண்டுகளுக்குப் பிறகும், இந்தியாவிலுள்ள 250க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களிலும் எண்ணற்ற கல்லூரிகளிலும் அட்டவணை சாதியினருக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ள 75000 ஆசிரியர் பதவிகளில் பாதிகூட இன்னும் நிரப்பப்படவில்லை. பல பணியிடங்கள், தாழ்த்தப்பட்ட வகுப்புகளையும் பழங்குடி மக்களையும் சேர்ந்தவர்கள் எனப் போலிச் சான்றிதழ்கள் கொடுத்துப் பதவி பெற்றவர்களால் நிரப்பப்பட்டுள்ளன.

'திறமை' என்னும் பெயரால், சத்யம் கம்ப்யூட்டர்ஸ் போன்ற மோசடி நிறுவனங்களுக்கு எண்ணற்ற பட்டதாரிகளை வழங்கியுள்ள ஐ.ஐ.டி.கள், ஐஐஎம்-கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் 'தேசத்திற்கு' ஆற்றியுள்ள ஒட்டு மொத்தமான சேவைகளைக் காண்போம்:

மக்களின் வரிப்பணத்திலிருக்கும் உழைக்கும் மக்கள் உருவாக்கும் செல்வத்திலிருந்தும் பன்னூறு கோடி ரூபாய் ஐஐடி போன்ற உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செலவிடப்படுகின்றது. மிக இன்றியமையாத தொடக்கக் கல்வியைக்கூட வெகுமக்கள் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குச் சரிவரக் கிடைப்பதில்லை. ஆனால், ஐ.நா. அவையின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு மேற்கொண்ட ஆய்வு, அமெரிக்காவுக்குப் படிக்கச் செல்லும் மாணவர்களில், படிப்பு முடிந்ததும் அந்த நாட்டிலேயே தங்கிவிட விரும்பும் மாணவர்களில் மற்ற எல்லா நாட்டு மாணவர்களையும்விட மிக அதிக எண்ணிக்கையில் இருப்பவர்கள் இந்திய மாணவர்களே (அதாவது, மொத்த இந்திய மாணவர்களில் 80 சதவீதம்) என்பதை வெளிப்படுத்தியதாக இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'தி எகனாமிஸ்ட்' என்னும் ஏடு 26.9.2002 இல் தெரிவித்தது.

டெல்லியில், ஊடகங்களில் பணிபுரிகின்றவர்களும், களப் பணியாளர்களுமடங்கிய 'ஊடக ஆய்வுகள் குழு' என்னும் அமைப்பு டெல்லியிலுள்ள அனைத்திந்திய மருத்துவ அறிவியல்கள் நிறுவனத்திலிருந்து பட்டப்படிப்பு முடித்துச் சென்ற 42 'பேட்சு'களை சேர்ந்த மாணவர்கள் எங்கு பணிபுரிகிறார்கள் என்பதைக் கண்டறியும் ஆய்வை நடத்தியது. அந்த நிறுவனம் நிறுவப்பட்ட 1956 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரையில் பட்டம் பெற்றுச் சென்றவர்களில் 1477 பேர் மட்டுமே எங்கு இருக்கிறார்கள் என்பது அந்த ஆய்வில் தெரிய வந்தது. அந்த 1477 பேரில் 780 பேர் வெளிநாடுகளில் வேலை செய்கிறார்கள் என்பது கண்டறியப்பட்டது.

அதே போல ஐஐடியில் படித்துப் பட்டம் பெற்றுச் சென்றவர்கள் பற்றிய விவரங்களும் கிடைத்துள்ளன. 'பிரண்ட்லைன்' 1.14.2003 இதழில் காந்தா முரளி என்பவர் எழுதியுள்ள கட்டுரை கீழ்க்காணும் விவரங்களைத் தருகிறது:

1. 2002-2003 ஆம் ஆண்டில் இந்தியாவிலுள்ள ஏழு ஐஐடி நிறுவனங்களுக்கு மத்திய அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய நிதி ரூ.3577 கோடியாகும். அதே ஆண்டில் தொடக்கக் கல்விக்காக அது ஒதுக்கிய நிதி ரூ.564 கோடி மட்டுமே.
2. ஐஐடிகளில் சேர்க்கப்படும் அட்டவணை சாதியினர், அட்டவணைப் பழங்குடியினர், பெண்கள் ஆகியோரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கவில்லை.
3. அட்டவணை சாதியினர் / பழங்குடி மக்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கிட்டத்தட்ட பாதி நிரப்பப்படவே இல்லை;

(4 ஆம் பக்கம்)

# வெள்ளைக்காரன் பெத்துப்போட்ட

### பாடல் – பண் : தலித் சுப்பையா

பல்லவி : வெள்ளைக்காரன் பெத்துப்போட்ட
கள்ளப்பிள்ளை காங்கிரசு
இத்தாலிப் பெண்மணியின்
ஏவல் படையாய் மாறிப்போச்சு.

அ.பல்லவி : ஊருக்கு நாலுபேரு கணக்குங்க – சும்மா
பேருக்கு காங்கிரசு இருக்குங்க. (வெள்ளை)

சரணம் 1 : காமராசர் செல்வாக்குல ஆண்டது – பிறகு
கழுதை தேஞ்சு கட்டெறும்பா ஆனது
குருடனுக்கு ராசபார்வை கிடைக்குமா – கை
தமிழகத்தை ஆளும்கனவு பலிக்குமா (வெள்ளை)

சரணம் 2 : அரசியலில் காங்கிரசு சாக்கடை – இரு
கரைகளாக கழகங்கள் வெளிப்படை
மாறி மாறி பிச்சைவாங்கி செயிக்குது – இதில்
மான ஈனம் ஏதுமின்றி குரைக்குது! (வெள்ளை)

சரணம் 3 : கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தது – நம்
கடல்மக்கள் உரிமைகளை பறிச்சது
சிங்களப்படை மீனவரை கொல்லுது – இதை
தடுத்துநிறுத்த துப்பில்லாமல் மழுப்புது (வெள்ளை)

சரணம் 4 : அழிவுப்படை ஈழத்துக்கு போனது – அங்கு
அடிபட்டு அசிங்கப்பட்டு மீண்டது
எறிந்தபந்து எதிர்த்திசையை தாக்குமே – அதை
தமிழகத்தில் நாமெல்லோரும் பார்த்தோமே. (வெள்ளை)

சரணம் 5 : தமிழ்ஈழ விடுதலையைத் தடுக்குது – அதன்
தலைவரையே கொன்றுவிடத் துடிக்குது
இலங்கைக்கு ஆயுதங்கள் கொடுக்குது – தமிழரை
இளிச்சவாயர் கூட்டமென்று நினைக்குது. (வெள்ளை)

சரணம் 6 : புலிகளை அழித்துவிடத் துடிக்குது – அவர்தம்
தடயமறிய ராடர்களை கொடுக்குது
படையனுப்பி பயிற்சிதந்து அழிக்குது – மூன்று
மலையாளிகள் பொறுப்பில்இது நடக்குது (வெள்ளை)

சரணம் 7 : சட்டமன்றத் தீர்மானத்தை மதிச்சதா – அதை
சலூன்கடை தாள்என்று நினைக்குதா
மனிதச்சங்கிலி லட்சம்பேரு நடத்துனோம் – எந்தப்
பலனுமின்றி தமிழினமே தவிக்கிறோம். (வெள்ளை)

சரணம் 8 : பாகிஸ்தானை பிரித்துதந்தார் தாத்தனார்
பங்களாதேசுக்கு காரணமே மாமியார்
ஈழத்தமிழர் அழிப்பைசெய்தார் கணவரு – அந்த
இரண்டகத்தை சோனியாவும் செய்கிறார். (வெள்ளை)

சரணம் 9 : காங்கிரசை ஒழிக்கச்சொன்னார் பெரியாரு – அந்தக்
கடனடைக்க களமாடுது தமிழ்நாடு
தமிழ்ஈழம் மலரப்போவது நிச்சயம் – துரோகக்
காங்கிரசை ஒழிப்பதே நம் லட்சியம் (வெள்ளை)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இதை பேராசிரியர் அன்பழகனே, தனது உரையில் ஒப்புக் கொண்டு இருக்கிறார்.

"இங்கே பேசிய நண்பர்கள்.... வருங்காலத்திலேகூட தமிழகத்திலே கலைஞருடைய கையைத்தான் வலியுறுத்த வேண்டும். தேர்தலிலே ஏமாந்து விடக் கூடாது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அது ஓரளவுக்கு அரசியல் தான். அந்த அரசியலை கழகம் சார்பாக இன்றைக்கு நான் பேசத் தயாராக இல்லை" ('முரசொலி' பிப்.10)

- என்று பேசியிருப்பதன் மூலம், "இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையின் பரப்புரை எப்படி நடக்கிறது என்பதை அவரே வெளிப்படுத்தியுள்ளார். அப்படிப் பேசிய பேராசிரியர் அன்பழகனோ முடிவில் எதைப்பேச மாட்டேன் என்றாரோ, அதே அரசியலைத்தான் அவரும் வலியுறுத்தியும் உள்ளார்.

- **ஒவ்வொரு நாளும் தமிழர்கள் மீதான இனப் படுகொலைகளைப் பற்றியோ**
- **போரை நிறுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தியோ**
- **வீதியெங்கும் விமான குண்டு வீச்சுக்கு ஷெல் தாக்குதலுக்கும் பலியாகி பிணமாகக் கிடக்கும் தமிழினத்தைப் பற்றியோ**
- **மருத்துவமனைகள் மீதே குண்டுகள் வீசப்படுவது பற்றியோ**

- இவர்கள் மக்களிடம் பேசுவதற்கு தயாராக இல்லை. காங்கிரசுக்காரர்களோடு கைகோர்த்துக் கொண்டு, 'மத்திய அரசுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும்" வரப்போகும் தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் ஆட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என்று பேசி வருகிறார்கள். விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் மீது சேறு வாரி இறைக்கப்படுகிறது. ஆனால் ராணுவக் கொடுமைகள் அடக்கி வாசிக்கப்படுகிறது. இதற்குப் பெயர் இலங்கைத் தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பாம்!

**தமிழின உணர்வாளர்களே! இந்த வரலாற்றுத் துரோகத்தை அடை யாளம் காணத் தவறாதீர்கள்!**

# எந்த சமரசத்துக்கும் இடமின்றி பெரியார் தொழிற்சங்கம் பாடுபடும்

## பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பேச்சு

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகிலுள்ள அரியப்பம்பாளையம், சிறீ கிருஷ்ணா பஞ்சாலை அருகில் கடந்த 11.1.2009 அன்று பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழக தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ப. சிவராஜ் தலைமை வகித்தார். தோழர்கள் ஏ.முத்துக்குமார், க. இராமலிங்கம், பி.சண்முகம், கே. செல்வன், எஸ்.கே.பழனிச்சாமி, ஏ.பரிபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் பெயர் பலகையைத் திறந்து வைத்து உரையாற்றினார்.



பஞ்சாலை வாயில் முன்பு அமைக்கப்பட்டிருந்த கழகக் கொடிக் கம்பத்தில் விண்ணதிரும் முழக்கங்களுடன் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார். அவரது உரையிலிருந்து:

"தொழிலாளர்கள் மீது அக்கறை இருப்பதால் இந்தத் தொழிற்சங்கம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் தொழிலாளர்களின் நலனுக்காக முழுமையாகப் பாடுபடும். இதன் பொறுப்பாளர்கள் அந்தந்தப் பகுதித் தொழிலாளர்களாகவே இருந்து, தலைமையேற்று நடத்த வேண்டும்.

ஏற்கனவே பணி செய்த வரும் தொழிலாளர்களை அனுப்பிவிட்டு ஒரிசா, பீகார் போன்ற வடமாநிலத்தவர்களை இங்கு கொண்டு வந்து புரோக்கர்கள் மூலம் பணியமர்த்தும் நிலை பல ஆலைகளில் இருக்கிறது. இதை எதிர்த்து பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழகம் போராடும். தலை எழுத்து என்று சொல்லி கொடுக்கும் கூலியை நியாயப்படுத்தும் மதவாதி, முதலாளி கூட்டுக் கொள்ளையை எதிர்த்துப் போராட வேண்டும்.

ஆலைகளில் தொழிலாளர்களுக்குப் 'பங்கு' என்பதற்குப் பதிலாக 'தீபாவளி போனஸ்' என்று சுருக்கி, தொழிலாளர் உரிமையைப் பண்டிகைக்குள் அடக்கி விட்டார்கள். தொழிலாளர் கையில் காசு இருக்கக் கூடாது என்பதற்காகவே வாரம் ஒரு விழா, மாதம் ஒரு பண்டிகை என்று கொண்டாட வைத்து தொழிலாளர்களை ஏழையாகவே ஆக்கி வைத்துள்ளார்கள்.

பெரியார் தொழிற்சங்கம் தொழிலாளர்களை போராட வைப்பது மட்டுமல்லாமல், சிந்தனையைத் தூண்டி, அறிவியல் வழி முறையில் வாழ்க்கையை அமைப்பதற்கும் பாடுபடும் சட்டம் நம் பக்கம் இருக்கிறது. ஒற்றுமையாக இருந்து எந்த சமசரத்துக்கும் இடம் கொடுக்காமல் தொழிற்சங்கம் பாடுபட வேண்டும். அதற்கு கழகம் என்றும் துணை நிற்கும்" - இவ்வாறு பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பெ.தி.க. மாவட்டத் துணைத் தலைவர், வேலுச்சாமி, அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி, இளைஞரணி செயலாளர் புதுரோடு சிதம்பரம், இணைச் செயலாளர் எலத்தூர் செல்வக்குமார், கருப்பணன் மற்றும் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். நிறைவாக பி.தனபால் நன்றி கூறினார்.

**தகவல் : நேதா**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிரப்பப்பட்ட இடங்களிலும் ஏறத்தாழ 25 சதவீதம் மாணவர்கள் படிப்பை முடிக்காமல் பாதியிலேயே நின்று விட்டனர்.


4. ஐஐடியில் படிக்கும் மாணவர்கள் என்றால் அவர்கள் பெரும்பாலும் உயர் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆண் மாணவர்களே, பெண்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றனர்.
5. ஏழு ஐஐடிகளில் படிக்கும் மாணவர்களில் (1500 முதல் 200 வரை) ஏறத்தாழ சரிப்பாதிப் பேர், ஒவ்வோராண்டும் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றனர். (பெரும்பான்மையினர் அமெரிக்காவுக்குச் சென்று விடுகின்றனர்) அமெரிக்காவில் மட்டும் ஐஐடியின் பழைய மாணவர்கள் 25000 பேர் இருக்கிறார்கள்.

நிலைமை இப்படியிருக்க, அட்டவணை சாதியினரையும் பழங்குடி மக்களையும் சேர்ந்தவர்களுக்கு உயர்கல்வி நிலையங்களில் ஆசிரியர் பதவிகளில் இடஒதுக்கீட்டை ஒழித்துக் கட்டும் மேற்சொன்ன மசோதா, வருண-சாதி மனுதர்மத்தை வலுப்படுத்தவே செய்யும். இந்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்த இப்போதாவது, தலித், பழங்குடி, பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 13th February 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 பிப்ரவரி 19, 2009 புரட்சி 8 முழக்கம் 06 விலை : ரூ.2.50


## ஆயிரக்கணக்கில் திரண்ட சென்னை கழகக் கூட்டம்

# காங்கிரசை தோற்கடிக்க பிரச்சார இயக்கம்






ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் துரோகம் செய்யும் காங்கிரஸ் கட்சியை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் வீழ்த்துவோம் என்று சென்னையில் பல்லாயிரக்கணக்கில் திரண்ட மக்கள் உறுதி ஏற்றனர். ஈழத் தமிழர்கள் இனப்படுகொலையைக் கண்டித்து தீக்குளித்து வீரமரண மடைந்த முத்துக்குமாருக்கு வீர வணக்கம் செலுத்தும் கூட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பிப். 15 ஆம் தேதி மாலை சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர். தேனிசை செல்லப்பா எழுச்சி இசையைத் தொடர்ந்து, நடைபெற்ற கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழ்த் தேசப் பொதுவுடைமை கட்சி பொதுச்செயலாளர் பெ. மணியரசன், மருத்துவர் எழிலன், வழக்கறிஞர் அமர்நாத், இயக்குநர் சீமான் ஆகியோர் உரையாற்றினர்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்; தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற கருத்தை அனைவரும் வலியுறுத்தினர். இந்திய ராணுவத்தை அனுப்பி ஆயிரக்கணக்கான தமிழர்களை ஈழத்தில் கொன்று குவிப்பதற்கு ராஜீவ் காரணமாக இருந்ததையும், ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்துக்குப் பிறகு கொழும்பு சென்ற ராஜீவ் காந்தியை சிங்கள சிப்பாய் ஒருவன் துப்பாக்கிக் கட்டையால் தாக்கி கொலை செய்ய முயன்றதையும் எடுத்துக் காட்டினர். தமிழர்களின் உரிமைகளைக் காக்கக்கூடிய ஒரு அரசு தமிழ்நாட்டில் இல்லை என்றும், யார் ஆட்சியில் இருந்தாலும் தமிழக சட்டமன்றம் டெல்லிக்கு கொத்தடிமை சேவை செய்யும் அதிகாரமற்ற மன்றமே என்றும் தோழர் மணியரசன் சுட்டிக் காட்டினார்.

தமிழ்நாட்டில் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ்நாட்டின் உணர்வுகளையும் உரிமைகளையும் காப்பதற்குத்தான் டெல்லிக்கு அனுப்பினோமே தவிர, டெல்லியின் துரோகத்தை தமிழ்நாட்டில் நியாயப்படுத்துவதற்கு அல்ல என்றும், காங்கிரசின் துரோகத்தை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்துவதே இனி தமிழின உணர்வாளர்களின் எதிர்கால வேலைத் திட்டம் என்று கூட்டத்தில் தலைவர்கள் அறிவித்தபோது கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் ஆரவாரம், கரவொலி எழுப்பியதோடு காங்கிரசை வீழ்த்துவோம் என்று முழக்கமிட்டனர்.

கொளத்தூர் மணி தனது உரையில் - ராஜீவ்காந்தி ஈழத் தமிழர்களுக்கு செய்த துரோகத்தை பட்டியலிட்டுக் கூறிய போது, கூட்டத்தினர் கைதட்டி வரவேற்றனர். விடுதலை இராசேந்திரன் பேசுகையில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களை ஆதரித்துப் பேசலாம் என்று உச்சநீதிமன்றமே தீர்ப்பு வழங்கியுள்ளதை எடுத்துக் காட்டினார். ஈழப் போராளி அமைப்புகளிடையே மோதல்களை உருவாக்கியது இந்திய உளவு நிறுவனம் தான் என்றும், இதை 1990 ஆம் ஆண்டிலேயே சட்டமன்றத்தில் அறிவித்த முதலமைச்சர் கலைஞர், இப்போது விடுதலைப் புலிகள் சகோதர யுத்தம் நடத்துவதாக குற்றம் சாட்டுவது முரண்பாடு அல்லவா என்று கேட்டார்.

தமிழர் வரிப்பணத்தில் இலங்கைக்கு ஆயுத உதவி செய்யும் இந்திய அரசை எதிர்த்து வரிகொடா இயக்கத்தைத் தொடங்குவோம் என்று பெ. மணியரசன் கேட்டுக் கொண்டார். இயக்குனர் சீமான் தனது உரையில் எத்தனை முறை கைது செய்தாலும் சீமானின் குரலை நசுக்கி விட முடியாது. தமிழர்களின் ஒரே பாதுகாப்பு அரணாக விளங்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக தனது குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும் என்றார். இரு நாட்களுக்கு முன் புதுவையில் இயக்குனர் சீமான் ஆற்றிய உரைக்காக புதுவை காவல் துறை வழக்கு பதிவு செய்த நிலையில், எந்த நேரத்திலும் அவர் செய்யப்படலாம் என்ற பரபரப்புக்கிடையே கூட்டம் நடந்தது.

அதே நாளில் சென்னை மயிலாப்பூரில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்தின் கூட்டமும் நடந்தது. பெரும் பொருட்செலவில் விளம்பரம் செய்து நடத்தப்பட்ட இந்த கூட்டத்தில் திரண்டவர்களைவிட அய்ந்து மடங்கு கூட்டம் பெரியார் திராவிடர் கழகத்தின் கூட்டத்துக்கு திரண்டதாக வின் தொலைக்காட்சி தனது செய்தி ஆய்வில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

– நமது செய்தியாளர்

## மயிலை மாங்கொல்லை அன்றும்; இன்றும்

அன்று - மயிலை மாங்கொல்லையில் அக்டோபர் முதல் வாரத்தில் கலைஞர் ஈழத் தமிழர்கள் படுகொலைக்கு எதிராக சிங்களத்தை எதிர்த்து குரல் கொடுத்தார். அதே மயிலை மாங்கொல்லையில் இப்போது ப. சிதம்பரம் தி.மு.க.வின் கோரிக்கைக்கு ராஜபக்சே சார்பில் பதில் தந்துள்ளார்.

அன்று - கலைஞர் பேச்சை ஆதரித்து மனித சங்கிலி நடத்தியது தி.மு.க.

இன்று - ப.சிதம்பரம் பேச்சை ஆதரித்து மனித சங்கிலக்கு அழைப்பு விடுகிறது தி.மு.க.

இதைத்தான் ப. சிதம்பரமும் தனது உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

“காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. போன்ற பெரிய கட்சிகளுக்கு இந்தியாவின் கொள்கை தெரிகிறது. இலங்கையில் ஆயுதங்களைப் போட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்கு வந்தால்தான் முடியும் என்று மூன்று கட்சிகளுக்கும் தெரிந்திருப்பதால் தமிழகம் அமைதியாக உள்ளது” என்று பேசியிருக்கிறார்.

அன்று தி.மு.கவின் குரல் தனித்து ஒலித்தது.

இன்று - தி.மு.க.வின் குரல் அ.தி.மு.க., காங்கிரசோடும் இணைந்து கொண்டது. இதைத்தான் பார்ப்பன ‘இந்து’ ஏடும் தனது தலையங்கத்தில் படம் பிடித்துக் காட்டி மகிழ்ந்து வரவேற்றது. ப.சி.யும் உறுதிப்படுத்திவிட்டார்.

### வழக்கறிஞர்கள் போராட்டம்

## நீதிமன்றத்துக்குள் சு.சாமி மீது முட்டை வீச்சு

தில்லை நடராசர் கோயில் தீட்சதப் பார்ப்பனர்களுக்காக தன்னையும் வழக்கில் இணைத்துக் கொள்ள பிப். 17 அன்று சென்னை உயர்நீதி மன்றத்துக்கு பார்ப்பன சுப்ரமணியசாமி வந்தபோது, நீதிபதிகள் முன்பே, அவர் வழக்கறிஞர்களால் உதைக்கப் பட்டார். சுப்ரமணியசாமி மீது முட்டைகள் வீசப்பட்டன.

‘முட்டை வீச்சு’ சம்பவத்தால் பதறிப்போன சுப்ரமணிய சாமி, பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார்.

# ப. சிதம்பரத்தின் ‘ராஜபக்சே’ குரல்!

மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், மயிலாப்பூரில் பெரும் பொருட் செலவில் ஒரு பொதுக்கூட்டத்தில் தனது வழக்கறிஞர் தொழில் திறமையைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் உறுதியான ஈழத் தமிழர் ஆதரவு சிந்தனையோட்டத்தை குலைக்கலாமா என்று முயற்சித்திருக்கிறார். நேர்மையற்ற, உண்மையற்ற வாதங்கள் வெற்றி பெற்றுவிட முடியாது. மாறாக இவர்களின் இனத் துரோகம் தான் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. *“இலங்கைத் தமிழர்கள் நம்மவர்கள்; அவர்கள் உணர்வும் நம் உணர்வும் ஒன்று தான்; அவர்கள் உரிமை மறுக்கப்பட்டால் நம் உரிமை மறுக்கப் படுவதுபோல் துடிக்கிறோம்”* என்ற பீடிகையுடன் அவரது உரை தொடருகிறது.

இப்படி துடித்துப் போய் நிற்கும், ப.சிதம்பரத்தின் முழு உரையிலும் ராஜபக்சே ராணுவம் நடத்தி வரும் இனப் படுகொலையைக் கண்டித்து ஒரு வார்த்தைகூட இடம் பெறவில்லை. ப. சிதம்பரத்தின் துடிப்பில் உள்ள நேர்மைக்கு இது மட்டுமே போதும்.

*“பிரபாகரன் ஆயுதத்தைக் கீழே போட வேண்டும்; எந்த ராணுவமும் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாது”* - என்கிறார் ப. சிதம்பரம். சிங்கள ராணுவம் ஏதோ, நாட்டு மக்களைப் பாதுகாக்கும் ராணுவத்தைப் போல ப. சிதம்பரம் பேசுகிறார். அற வழியில் ஜனநாயக முறையில் தங்களின் உரிமைகளுக்காகப் போராடிய தமிழர்களை ஆயுத முனையில் ஒடுக்கிய காரணத்தால்தான் போராளிகள் இயக்கமும் ராணுவத்தை எதிர்கொள்ள ஆயுதம் ஏந்தும் நிலை உருவானது என்பது ப.சிதம்பரத்துக்கு தெரியாதா? தெரியும். ஆனாலும் தனது வழக்கை நிலை நாட்ட இப்படி எல்லாம் பொய்யான வாதங்களை முன் வைக்கிறார். சொந்த நாட்டு மக்களின் மீதே விமானக் குண்டுவீச்சு நடத்திடும் சிங்கள ராணுவம் ஏதோ, தமிழ் மக்களுக்கான ராணுவத்தைப் போல ப.சிதம்பரம் பேசும் வாதத்தின் நியாயத்தை மனசாட்சி உள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள்.

*“எப்படி இந்தியா தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தாதோ, அவ்வாறே இன்னொரு நாட்டைப் பார்த்து போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்து என்று கூறு முடியாது”* என்று பச்சையாக பொய் கூறுகிறார், ப. சிதம்பரம். இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஆயுதம் ஏந்தி தனிநாடு கோரும் இயக்கங்களோடு இதே இந்திய அரசு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறதே; அவர்களோடு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துள்ளதாக நாடாளுமன்றத்திலே அறிவித்தார்களே! நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த (2006-2007 ஆம் ஆண்டு) உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை இதை அறிவித்ததே.

ஆயுதங்களைக் கீழே போடாத இந்த போராளி இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னாள் உள்துறை செயலாளர் பத்மநாபய்யா என்ற அதிகாரிக்கு அதிகாரங்களை வழங்கியிருக்கிறார்களே!

1985 ஆம் ஆண்டில் பூடான் தலைநகரான திம்புவில் இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்ததே அப்போதைய பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி தானே! இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேயின் தம்பி, எச். டபிள்யூ ஜெயவர்த்தனே தலைமையில் இலங்கை அரசுவின் தூதுக் குழு போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியதே. இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று கருதி, ப. சிதம்பரம் கதை விடுகிறாரா?

அப்போது பேச்சு வார்த்தையில் பங்கேற்க வந்த எந்த போராளிக்குழுவிடமும், ‘ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டு வா’ என்று எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லையே. மாறாக பேராளிகள் குழுக்கள் பேச்சு வார்த்தையில் பங்கேற்க நான்கு நிபந்தனைகளை முன் வைத்தார்கள்.

அவை என்ன? 1) ஈழத் தமிழர்கள் - ஒரு தேசிய இனம் 2) ஈழத் தமிழர்கள் தாயகத்தைக் கூறுபோடக் கூடாது 3) ஈழத் தமிழர்கள் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் 4) மலையகத் தோட்டத் தமிழர்களுக்கு முழுமையான குடி உரிமை வழங்கப்பட வேண்டும். இந்த நான்கு நிபந்தனைகளையும் இந்தியாவும், இலங்கை அரசும் அங்கீகரித்த பிறகு தானே அன்று போராளிகள் பேச்சு வார்த்தைக்கு வந்தனர்?

பேச்சு வார்த்தையில் பங்கேற்ற பல்வேறு போராளி குழுக்களும் முன் வைத்த அடிப்படையான நிபந்தனைக்கு எதிராக அரைகுறை அதிகாரங்களை மட்டும் இலங்கை வழங்க முன் வர, அந்த சொற்ப அதிகாரங்களையும் வழங்கக் கூடாது என்று சிங்கள புத்த பிட்சுகளும் எதிர்கட்சியான சுதந்திரக் கட்சியும் கலவரம் தொடங்கியதால் திம்பு பேச்சு வார்த்தையே முறிந்தது. இந்த நிலையில் ராஜீவ்காந்தி, தாம் ஏற்பாடு செய்த பேச்சு வார்த்தையையும் அதற்காக ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனையையும் மீறி செயல்பட்ட சிங்கள அரசை கண்டிக்க முன் வந்திருக்க வேண்டாமா? அதை ராஜீவ் செய்தாரா?

இல்லை; மாறாக, போராளிகள் அமைப்புகளை முற்றாக ஓரம் கட்டி விட்டு ஜெயவர்த்தனாவோடு ராஜீவ் ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு ஒப்பந்தத்தையும் இவர்களே தயாரித்துக் கொண்டு, அதை விடுதலைப் புலிகள் ஏற்க வேண்டும் என்று தனது அதிகாரவர்க்கத்தைக் கொண்டு மிரட்டினார். யாழ்ப்பாணத்திலிருந்து பிரபாகரனை ராணுவ விமானத்தில் ஏற்றி டெல்லிக்கு கொண்டு வந்து அசோகா ஓட்டலில் சிறைப் பிடித்து வைத்து மிரட்டினார்கள்.

## ஜெயவர்த்தனாவிடமும் பல ரகசிய வாக்குறுதிகளை வழங்கி, இரட்டை வேடம் போட்டவர் ராஜீவ்.

*“இன்னொரு நாட்டைப் பார்த்து போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்து என்று சொல்ல முடியாது”* (‘தினத்தந்தி’ பிப்.16) - என்று மயிலாப்பூர் மேடையில் முழங்கும் ப.சிதம்பரத்தைக் கேட்கிறோம்.

திம்பு பேச்சுவார்த்தைக்கு போராளிகளை அழைத்தது உங்கள் ராஜீவ் காந்தி தானே? இன்னொரு நாட்டின் பிரச்சினைக்காக அந்நாட்டு அதிபர் ஜெயவர்த்தனாவுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அதை அந்நாட்டு மக்கள் மீது திணிக்க முயன்றது நீங்கள் தானே! இதற்கெல்லாம் உங்களிடம் பதில் உண்டா?

இறையாண்மையில் தலையிடக் கூடாது என்று கூறும் ப. சிதம்பரம், பாகிஸ்தான் இறையாண்மையில் இந்திரா தலையிட்டு, பங்களாதேஷ் நாட்டை உருவாக்கியதற்கு என்ன பதில் கூறுகிறாராம்?

தமிழ்நாட்டு மீனவர்களை சிங்களக் கப்பல் படையினர் சுட்டு கொல்வதற்குப் பெயர் என்ன? இது இறையாண்மையில் தலையீடு ஆகாதா? தமிழ்நாட்டில் இந்த மீனவர் படுகொலையை எதிர்த்து காங்கிரசார் எந்த ஒரு கண்டனத்தையாவது தெரிவித்தது உண்டா? விடுதலைப்புலிகளை எதிர்ப்பதற்காகவே கூட்டம் போட்டு பேசுகிறவர்கள், சொந்த நாட்டு மீனவனுக்காக பேசினார்களா?

மாறாக, தமிழக மீனவர் சுட்டுக் கொல்லப் படுவது எல்லாம் சிங்களர் கடல் பகுதியில் தானே, என்று, எதிர் கேள்வி கேட்டவர் தானே, பிரதமர் மன்மோகன் சிங்!

சரி; அந்த ராஜீவ் ஒப்பந்தத்தின் கதி என்னவாயிற்று? அந்த ஒப்பந்தத்தை முறித்தது யார்? ப. சிதம்பரம் கூறுகிறார்:

*“அந்த உடன்பாட்டை பிரபாகரனும் அரை மனதாக ஏற்றுக் கொண்டார். அதன் பிறகு ராஜீவ் காந்தி இலங்கைக்குச் சென்று, ஜெயவர்த்தனேவுடன் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டார். அன்றே தனது மரண சாசனத்தில் ராஜீவ் கையெழுத்து போட்டார் என்பது அதன் பிறகே எங்களுக்கு தெரிய வந்தது”* (தினத்தந்தி, பிப்.16) என்கிறார் ப.சிதம்பரம்.

உடன்பாட்டுக்கு கையெழுத்திடச் சென்ற ராஜீவ் காந்திக்கு இலங்கை அரசு தந்த ராணுவ அணிவகுப்பின்போது சிங்கள சிப்பாய், துப்பாக்கிக் கட்டையால் அடித்து, ராஜீவைக் கொலை செய்ய முயன்றானே; அதை மறந்தும்கூட ப.சிதம்பரம் குறிப்பிடாதது ஏன்? உண்மையில், அப்போதே ஒப்பந்தத்தை மரண சாசனமாக்க முயன்றது - சிங்கள வெறி அல்லவா? அதைக் குறிப்பிடாமல் தனது தலைவன் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்தியது சிங்களன் என்பதற்காக மூடி மறைப்பது தான் இவர், ராஜீவ் மீது காட்டும் உண்மையான பற்றுப் பாசமா?

உண்மையில், ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் விடுதலைப்புலிகளுக்கு நம்பிக்கையே இல்லை. விடுதலைப்புலிகள் உள்ளிட்ட போராளிக் குழுக்கள் ஆயுதங்களை ஒப்படைக்க அந்த ஒப்பந்தம் வற்புறுத்தியது. ஆயுதங்களை ஒப்படைக்க விடுதலைப் புலிகள் மறுத்தபோது ராஜீவ் காந்தியே பிரபாகரனை நேரில் அழைத்துப் பேசினார். அது பற்றி யாழ்ப்பாணத்தில் சுதுமலை எனுமிடத்தில் தமிழ் மக்களைத் திரட்டி மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தி, மக்களிடம் பிரபாகரன் விளக்கினார். (அந்த சுதுமலைக் கூட்டத்துக்கு இந்திய ராணுவமே தமிழகத்திலிருந்து பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்றது. அந்தக் குழுவில் விடுதலை இராசேந்திரன் உடன் சென்றார்)

பிரபாகரன் தனது உரையில் இதுபற்றி குறிப்பிட்டது என்ன?

*“எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்சினை பற்றியும், அதற்கான உத்திரவாதங்கள் பற்றியும் அவரிடம் (ராஜீவ் காந்தியிடம்) பேசினேன். பாரதப் பிரதமர், எமக்கு சில வாக்குறுதிகளை அளித்தார். எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தார். பாரதப் பிரதமரின் நேர்மையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன அழிப்பு நடவடிக்கைகளில் இறங்க இந்தியா அனுமதிக்கக் கூடாது என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில் சமாதானப் படையிடம் (இந்திய ராணுவம்) ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்தோம்.*

*நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து (நேரத்திலிருந்து) எமது மக்களுக்கான பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம்”* - என்று அறிவித்தார்.

இப்படி, இந்தியாவை நம்பி ராஜீவ் காந்தியை நம்பி ஆயுதங்களை ஒப்படைத்தப் பிறகு, இந்தியா எப்படி நடந்து கொண்டது? ஒப்பந்தங்களை முறியடிக்கும் முயற்சிகளில் ஜெயவர்த்தனே இறங்கியபோது அதை ராஜீவ் கண்டித்தாரா? பிரபாகரனிடம் தனிப்பட்ட முறையில் சில வாக்குறுதிகளைத் தந்ததுபோல், ஜெயவர்த்தனாவிடமும் பல ரகசிய வாக்குறுதிகளை வழங்கி, இரட்டை வேடம் போட்டார் ராஜீவ்.

ஜெயவர்த்தனாவுக்கு வழங்கிய ரகசிய உறுதிமொழிகளை அமுல்படுத்தவே ராஜீவ் முயன்றார்.

இன்று ப. சிதம்பரம் கூறும் அதே அறிவுரையைத்தான் அன்று ராஜீவ் காந்தி செயல்படுத்த முயன்றார். விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒரு பக்கம் இந்திய அமைதிப்படையிடம் ஒப்படைத்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு பக்கத்தில் “அமைதிப்படை” தனது ஆதரவுக் குழுவான ‘ஈ.பி.ஆர்.எல்.எப்.’ என்ற அமைப்புக்கு ஆயுதங்களை வழங்கும் துரோகத்தைச் செய்தது. இந்த உண்மையை அம்பலப்படுத்தியது, ஏதோ சாதாரண மனிதர் அல்ல; இந்திய ‘அமைதிப் படை’க்கு தலைமை தாங்கிச் சென்றிருந்த தளபதி ஹர்சிரத்சிங்கே - இந்த உண்மைகளை அம்பலப் படுத்தியிருக்கிறார். அவர் எழுதுகிறார்:

“Vehicle after vehicle the LTTE came, piled up the whole area with ammunition, guns. Later on, all ran into trouble.

**(3 ஆம் பக்கம்)**

# போர் நிறுத்தத்தை சீர்குலைத்தது இந்தியாவே!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

Because they did not stop arming the E.P.R.L.F. (Ealam peoples Revolutionary Liberation Front). 'RAW' was doing it, ministry of foreign affairs knew about it, Dixit knew about it, but they could't stop it. With the result that handing over arms by 21st of August came to a virtual stand still. And the whole thing took an ugly turn. They started anti - I.P.K.F. demonstrations."

"விடுதலைப் புலிகள் வாகனங்கள் அணிவகுத்து வந்து தங்களின் வெடிமருந்துகள், துப்பாக்கிகளை ஒப்படைத்தன. பிறகு, அவர்களே தொல்லைக்கு உள்ளானார்கள்.

காரணம், உளவு நிறுவனமான 'ரா', 'ஈ.பி.ஆர். எல்.எப்.' என்ற குழுவுக்கு ஆயுதங்களை வழங்குவதை நிறுத்தாமல் தொடர்ந்து கொண்டிருந்தது. இதைச் செய்தது இந்திய உளவு நிறுவனமான 'ரா'. இந்திய வெளிநாட்டுத் துறை அமைச்சகத்துக்கும் இது தெரியும். தீட்சத்துக்கும் (இலங்கைக்கான இந்திய தூதர்) இது தெரியும். ஆனால் அவர்கள் அதைத் தடுத்து நிறுத்தவில்லை. இதன் காரணமாக ஆகஸ்ட் 21 ஆம் தேதியோடு ஆயுத ஒப்படைப்பு (புலிகளால்) நிறுத்தப்பட்டது. எல்லாம் மோசமான நிலைக்கு திரும்பியது. 'அமைதிப்படைக்கு' எதிராக அவர்கள் (புலிகள்) ஆர்ப்பாட்டங்களைத் தொடங்கினர்" என்று எழுதுகிறார் ஹர்சிரத் சிங்!

மற்றொரு அதிர்ச்சியான தகவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

"1987 ஆம் ஆண்டு 14/15ஆம் தேதி நள்ளிரவு எனக்கு தீட்சத்திடமிருந்து ஒரு தொலைபேசி வந்தது. பிரபாகரன் சந்திக்க வரும்போது அவரை கைது செய்யுங்கள் அல்லது சுட்டு விடுங்கள்" என்று கூறினார். மீண்டும் நான் தொடர்பு கொள்கிறேன் என்று அவரிடம் கூறிவிட்டு, தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் தீபிந்தர் சிங்கிடம் இதைத் தெரிவித்தேன். அதற்கு அவர், "நமது ராணுவம் மரபுகளைக் கொண்டது. வெள்ளைக் கொடியின் கீழ் நம்மிடம் பேச வருவோரை, நாம் முதுகில் சுட முடியாது. இதை தீட்சத்திடம் தெரிவித்து விடுங்கள்" என்று என்னிடம் கூறினார். நான் தீட்சத்திடம் தொடர்பு கொண்டு உங்களது ஆணையை என்னால் நிறைவேற்ற முடியாது என்று கூறி விட்டேன். உடன்பாட்டை அமுல்படுத்துவது தொடர்பாக விவாதிக்கவே புலிகள் தலைவரை அழைத்துள்ளோம் என்று கூறினோம்.

அதற்கு தீட்சத், "எனக்கு ராஜீவ்காந்திதான் இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளார். ராணுவம் தனது கடமையிலிருந்து ஒதுங்கிக் கொள்ளக் கூடாது; படைத் தளபதி என்ற முறையில் நீங்கள் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றார்" - என்று ஹர்சிரத்சிங் தனது "Intenvention in Srilanka" நூலில் பக்.57 இல் குறிப்பிடுகிறார்.

"In September 1987, a political dialogue between the LTTE and an Indian delegation took place at Palaly and a peaceful solution seemed to be in sight. The creation of the IAC was to be thrashed out. The date set for the meeting to be held at my headquarters at Palaly and chaired by .N. Dixit, the Indian High Commissioner, was 16-17 September 1987.

On the night of 14/15 September 1987, I received a telephone call from Dixit, directing me to arrest or shoot Pirabharan when he came for the meeting. Telling Dixit that I would get back to him I placed a call to the OFC. lt. Gen. Depinder Singh directed me to tell Dixit that we, as an orthodox Army, did not shoot people in the back when they were coming for a meeting under the white flag. I then spoke to Dixit in Colombo and conveyed the message emphasising that I would not obey his directive. I pointed out that the LTTE supremo had been invited by the IPKF in order to find a solution to the problems in the implementation of the Accord. Dixit replied, 'He (Rajiv Gandhi) has given these instructions to me and the Army should not drag its feet, and you as the GOC, IPKF will be responsible for it.'

நியாயவான்களைப்போல் புனித வேடம் போடும் ப. சிதம்பரம் அவர்களே!



இந்தியாவின் நேர்மையான அதிகாரி அமைதிப்படைத் தளபதியின் இந்த கருத்துக்கு, நீங்கள் தரும் பதில் என்ன? இந்தியாவை நம்பி, இராஜீவ் உறுதியை நம்பி, ஆயுதங்களை ஒப்படைத்து, வெள்ளைக் கொடியின் கீழ் சமாதானம் பேச வந்த ஒரு தலைவனை சுடச் சொன்ன ராஜீவின் யோக்கியதைக்கு என்ன பதில் கூறுவீர்கள்?

விடுதலைப்புலிகளிடம் ஆயுதத்தைப் பெற்றுக் கொண்டு, மற்றொரு குழுவிடம் ஆயுதங்களை வழங்கிய இந்திய அரசின் துரோகத்திற்கு உங்களிடம் என்ன பதில் இருக்கிறது? அதே துரோகக் குரலை இப்போது மயிலாப்பூர் பொதுக் கூட்ட மேடையில் நின்று கொண்டு புலிகளிடம் ஆயுதத்தை ஒப்படைக்குமாறு கூற, உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

புலிகள் ஆயுதம் ஒன்று தானே தமிழர்களின் பாதுகாப்பு! ஆயுதம் ஏந்தி ராணுவத்தின் ஆக்கிரமிப்பையும் இனப் படுகொலையையும் எதிர்த்தினால் தானே சிங்களம் சமாதானம் பேசவே முன் வந்தது! போராளிகள் ஆயுதம் ஏந்தாத காலத்தில் தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்க மறுத்து இலங்கையில் ஒற்றையாட்சி முறையை சட்ட மாக்கியவர்கள் தானே சிங்களர்கள்?

1957 இல் தந்தை செல்வா பண்டார நாயகாவுடன் செய்த ஒப்பந்தம் என்னவானது?

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்தில் தமிழர்கள் தமிழைப் பயன்படுத்தலாம் என்றும், தமிழில் நுழைவுத் தேர்வுகளை எழுதலாம் என்றும் கொண்டு வரப்பட்ட சட்டம், கிடப்பில் போடப் பட்டதே! இப்படி செல்வாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்காகவே 1959 இல் அதிபர் பண்டார நாயகாவை சிங்கள புத்த பிக்கு ஒருவன் சுட்டுக் கொன்றானே! ஆயுதம் ஏற்காத காலத்தில் நடந்த இந்த அடக்குமுறை வரலாறுகள் ப. சிதம்பரங்களுக்குத் தெரியாதவையா?

ஒப்பந்தத்துக்குப் பிறகு இவ்வளவு துரோகங் களையும் செய்துவிட்டு, பிரபாகரனையே தீர்த்துக் கட்ட திட்டமிட்ட அதே காங்கிரஸ் கட்சியின் சிதம்பரம்தான் - இப்போது, "பிரபாகரன் சம்மதத்தோடு போடப்பட்ட ஒப்பந்தம் அது. அது நிறைவேறியிருந்தால் கடந்த 22 ஆண்டுகாலமாக தமிழ் மாநிலம் உருவாகியிருக்கும். தமிழன் ஒருவர் முதல்வராகியிருப்பார்" என்று காதில் பூ சுற்றுகிறார்.

வடக்கு- கிழக்கு மாநிலத்தில் ஒரு மாகாண சபையை துப்பாக்கி முனையில் இந்திய ராணுவம் உருவாக்கி, அதற்கு வரதராஜப் பெருமாள் என்ற தமிழனையும் பொம்மை முதல்வராக இந்திய ராணுவம் உடகார வைத்ததே; அந்த வரதராஜப் பெருமாள் என்ன ஆனார்? இந்திய ராணுவம் இந்தியாவுக்கு திரும்பி வரும் போதே தனது ராணுவ விமானத்தில் அந்த வரதராஜப் பெருமாளையும், அவரது குழுவினரையும் இந்தியாவுக்கு அழைத்து வந்துவிட்டது. இன்று வரை அவர் இந்தியாவின் பாதுகாப்போடு பதுங்கிக் கொண்டிருக்கிறார். இதற்கெல்லாம் என்ன காரணம்? ஈழத் தமிழ் மக்கள் உணர்வுகளுக்கு எதிராக ராஜீவ் ஆட்சி, துப்பாக்கி முனையில் எதையும் சாதிக்க முடியும் என்று ஆணவத்தோடு செயல்பட்டது தானே!

பிரபாகரனை அப்போதே தீர்த்துக்கட்ட உத்தரவு போட்ட காங்கிரஸ் தான், ராஜீவ் மரணத்தையே மீண்டும் மீண்டும் பேசுகிறது. இந்திய ராணுவம் ஆயிரக்கணக்கான தமிழர்களை பிணமாக்கி, பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி, தமிழ் ஈழத்தையே பிணக்காடாக்கிய ராஜீவ் காந்தியின் செயல்கள் நியாயமானவை தானா?

ஜாலியன்வாலாபாக் படுகொலையை நடத்தி முடித்த பிரிட்டிஷ் அதற்குக் காரணமான ராணுவத் தளபதி டயரை அதற்கு பல ஆண்டுகளுக்குப் பிறகு லண்டனுக்குப் போய் சுட்டுக் கொன்று பழி தீர்த்த உணர்வுள்ள சீக்கியனை உக்கம்சிங்கை தியாகியாக போற்றுகிறவர்கள் - அதே தண்டனை ராஜீவ் காந்திக்கு கிடைக்கும் போது மட்டும் பதறுவது ஏன்? ராஜீவ் காந்தி மரணத்துக்காக ஈழத் தமிழினத்தையே பழி வாங்கத் துடிப்பதுதான் மனிதப் பண்பாடா?

"போரை நிறுத்துங்கள் என்று இலங்கை அரசிடம் கூறுகிறோம்; புலிகளிடம் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு பேச்சு வார்த்தைக்கு வாருங்கள் என்கிறோம்" என்று ஏதோ நடுநிலையாளர் போல் நாடகமாடுகிறார் சிதம்பரம். தமிழர்களுக்கு எதிரான போரை நடத்துவதே சோனியா காந்தி தான். பிரணாப் முகர்ஜி, கொழும்புக்கு போய் திரும்பிய பிறகு, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் விடுத்த அறிக்கை போர் நிறுத்தத்தைப் பற்றி எதையும் குறிப்பிட வில்லையே.

மாறாக இலங்கையின் ராணுவ நடவடிக்கை வெற்றி பெற்று, 23 ஆண்டுகாலப் போராட்டம் முடிவுக்கு வந்தது" என்று இலங்கை இராணுவத்தின் நடவடிக்கையைக் கொண்டாடி மகிழ்ந்தது இந்திய அரசின் அறிக்கை. ப.சிதம்பரத்தால் இதை மறுக்க முடியுமா?

"தனிமனிதன் கையில் அதிகாரம் கொடுப்பதா தீர்வு?" என்று கேட்கிறார், ப.சிதம்பரம். பிரபாகரன் தனி மனிதன் அல்ல. அவர் தமிழ் ஈழத்தின் பிரதிநிதி. இந்த உண்மை சிறீலங்கா ஆட்சிக்கே தெரியும். நார்வே நாடு சமரச முயற்சியில் ஈடுபட்டபோது, அதன் காரணமாகத்தான் சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகளோடு போர் நிறுத்த உடன்பாடு செய்து பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தது. போர் நிறுத்த உடன்பாடு உருவாகி, விடுதலைப்புலிகள் மக்கள் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்டதைப் பொறுக்க முடியாத இந்தியப் பார்ப்பன ஆட்சி, தனது நயவஞ்சகத்தால் போர்நிறுத்த ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் அத்தனை முயற்சிகளிலும் இறங்கியது. கருணா குழுவை உருவாக்கியதில் ரணில் ஆட்சிக்கு உதவியதே இந்திய உளவுத் துறை தானே!

போர் நிறுத்த ஒப்பந்தம் உருவான பிறகு, அரசியல் தீர்வுக்காக தன்னாட்சி சபைத் திட்டத்தை சர்வதேச சட்ட வல்லுனர்களோடு கலந்து பேசி உருவாக்கி, விடுதலைப்புலிகள் முன் வைத்த போது அதை குலைப்பதற்கு பின்புலமாக செயல்பட்டது இந்திய உளவு நிறுவனம்தானே!

அப்போது அதிபராக இருந்த சந்திரிகா, தீர்வுத் திட்டத்தை எதிர்த்து ரணில் ஆட்சியைக் கவிழ்க்கும் நிலையை உருவாக்கியபோது - தீர்வு திட்டத்தை ஏன் குலைக்க வேண்டும் என்று இந்தியா தட்டிக் கேட்டதா? அடுத்து பதவிக்கு வந்த ராஜபக்சே, சமரச உடன்பாட்டை தூக்கி எறிந்து புலிகளை ராணுவத்தால் சந்திப்பேன் என்று சிங்களர்களிடம் தேர்தல் வாக்குறுதி அளித்து தானே பதவிக்கு வந்தார் என்பதை ப. சிதம்பரம் மறுக்க முடியுமா?

விடுதலை புலிகளை பழிவாங்குவதையும் சமரச முயற்சிகளைக் குலைப்பதையும் சிங்கள அரசுக்கு முண்டு கொடுப்பதையும் வஞ்சகமாக ராணுவ உதவிகளை வழங்குவதையும் ராஜீவ் காலத்திலிருந்து தொடங்கி, செயல்படுத்தி வரும் துரோக சக்திகள், இப்போது நீலிக் கண்ணீர் வடித்து, 'நியாயவான்' வேடம் தரிப்பதை தமிழர்கள் ஒரு போதும் நம்ப மாட்டார்கள்.

***'ராஜபக்சே எதைப் பேசுகிறாரோ, அதையே தான் நாங்களும் பேசுவோம்' என்று ப.சிதம்பரங்கள் நாட்டுக்கு தெளிவுபடுத்தி விட்டார்கள்.***

***இந்த தமிழ்நாட்டு 'ராஜபக்சேக்கள்' வாக்கு கேட்க வரும் காலம் நெருங்கி வருகிறது.***

***துப்பாக்கித் தோட்டாக்களைவிட வலிமையான வாக்கு வேட்டுகளால் இவர்களை தமிழக மண்ணிலிருந்து தூக்கி துரத்தி அடிக்க, தமிழக வாக்காளர்களே தயாராவீர்! தயாராவீர்!***

**– இராசேந்திரன்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 19.02.2009**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ‘ப.சி.’ கருத்தை தி.மு.க. ஆதரிக்கிறதா?

*“இலங்கைத் தமிழர்களுக்காக உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டுமென்று மத்திய அரசின் சார்பில் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் கூறியதைத் தொடர்ந்து இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையினை வரவேற்கின்ற அதே நேரத்தில், மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் 15.2.2009 அன்று மாலையில் சென்னையில் பேசியபோது குறிப்பிட்டதைப் போல, இரு சாராரும், அதாவது இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் போரை நிறுத்தினால்தான் உண்மையான போர் நிறுத்தத்திற்கு அர்த்தம் இருக்க முடியும்.” - மு.க. ஸ்டாலின் அறிக்கை (முரசொலி, 17.12.2009)*

தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் மனிதச் சங்கிலியின் நோக்கத்தை மேற்குறிப்பிட்டவாறு விளக்கியுள்ளார் மு.க. ஸ்டாலின்.

கொட்டும் மழையில் கலைஞர் அழைப்பை ஏற்று சென்னையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மனிதச் சங்கிலியாக கைகோர்த்து, போர் நிறுத்தம் கோரி முழக்கமிட்டதை நாடு மறந்துவிடவில்லை. அது இலங்கையின் இனப் படுகொலையை நிறுத்தக் கோரும் மனிதச் சங்கிலி!

இப்போது நடக்கப்போகும் மனிதச் சங்கிலி எதற்காக? இது விடுதலைப் புலிகள் ஆயுதத்தைப் போட்டு சரணடைய வேண்டும் என்ற ‘போர் நிறத்தத்தைக்’ கோரும் பேரணி.

போர் நிறுத்தத்துக்கு தயார் என்று ஏற்கனவே விடுதலைப்புலிகள் அறிவித்து விட்டனரே. நார்வே உருவாக்கிய சமரச உடன்பாட்டை இப்போதும் விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றும், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் நடேசன் தெளிவுபடுத்திவிட்டாரே. இப்போது போரை இந்தியாவின் முழு ஆதரவோடு நடத்துவதே சிங்களம்தான். அய்.நா. சபையே தலையிட்டால்கூட போரை நிறுத்த மாட்டோம் என்று ராஜபக்சே கூறிவிட்டார். ஏற்கனவே அமெரிக்கா - பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் விடுத்த போர் நிறுத்த கோரிக்கையை ஏற்க இயலாது என்று இலங்கையின் ராணுவ செயலாளரும், ராஜபக்சேயின் சகோதரருமான கோத்தபய ராஜபக்சே புறந்தள்ளி விட்டார். போர் நிறுத்தத்துக்கு தயார் என்று விடுதலைப்புலிகள் அறிவித்த பிறகும் போரை நிறுத்த முடியாது என்று இலங்கை ஒவ்வொரு நாளும் ‘தமிழின அழிப்பை’ நடத்திக் கொண்டிருக்கும்போது - குற்றக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியது இலங்கை அரசைத் தானே? அப்படி சிங்களம் நடத்தும் இனப்படுகொலையைக் கண்டிக்காமல், ஏதோ விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை ஏற்க மறுப்பதுபோல் பொய்மையாக ஒரு குற்றத்தை சுமத்தி இரு தரப்பினரும் போரை நிறுத்த வேண்டும் என்று கூறி, மக்களை ஏன் திசை திருப்ப வேண்டும்? இதன் மூலம் சிங்களம் நடத்தும் இனப் படுகொலையை நியாயப்படுத்த முயற்சிக்கிறார்களா?

ப. சிதம்பரம் கூறும் ‘போர் நிறுத்தம் என்பது என்ன?

*“ஆயுதங்களை கீழே போடுவதாக விடுதலைப்புலிகள் அறிவித்தால், போரை நிறுத்துமாறு, இலங்கை அரசை வற்புறுத்தலாம்”* (ப. சிதம்பரம் பேச்சு ‘தினத்தந்தி’ பிப்.16)

இதன் பொருள் என்ன? இலங்கை ராணுவத்திடம் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என்பதுதான்!

சிதம்பரம் கூறும் இந்த “போர் நிறுத்தத்தை” தி.மு.க. ஆதரிக்கிறது என்கிறது, மு.க.ஸ்டாலினின் அறிக்கை! விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்பதை நேரடியாகக் கூறாமல், ப. சிதம்பரத்தின் வழியாக கூற முற்படுகிறது தி.மு.க.

தி.மு.க.வும், ப.சிதம்பரமும் முன் வைக்கும் இந்த கோரிக்கையைத்தான் ராஜபக்சேயும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். பார்ப்பன ஜெயலலிதாவும் இதே கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார். ‘இந்து’ ராம், ‘துக்ளக்’ சோ, சுப்ரமணியசாமி, ‘தினமலர்’ உள்ளிட்ட பார்ப்பனக் கும்பல்களும் இதே கருத்தைத்தான் வற்புறுத்தி வருகின்றன. “இதோ நாங்களும் உங்களோடு சேர்ந்து கொள்கிறோம்” என்று தி.மு.க.வும் ஓடிப் போய் இடம் பிடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த லட்சணத்தில் குடியரசுத் தலைவரை சோனியாகாந்தியை சந்தித்து இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை மனு தரப் போகிறதாம். சோனியாகாந்தியிடமும் நேரில் வற்புறுத்தப் போகிறதாம்! இந்தக் குழுவில், “தமிழர் தலைவர்” கி.வீரமணியும் போகிறாராம். இலங்கையிலுள்ள நிலவரங்கள் குறித்து அது பற்றி விவரமாக அவர்களிடம் எடுத்துக் கூறப் போகிறார்களாம். போரையே நடத்திக் கொண்டிருப்பதே சோனியாவும் அவரது ஆணைப்படி செயல்படும் அதிகாரவர்க்கமும் தான். அவரிடமே இவர்கள் இலங்கை நிலவரத்தை விளக்குவார்களாம்! அதுவும்கூட, மிகவும் எச்சரிக்கையாக ‘இலங்கை நிலவரம்’ என்ற சொல்லையே பயன்படுத்துகிறது. அந்த அறிக்கை. கொல்லப்படும் இனப் படுகொலைக்கு உள்ளாகும் தமிழர்கள் பற்றிக் கூறுவோம் என்று கூறுவதற்குகூட இந்த ‘உரிமைக்குழு’ தயாராக இல்லை.

பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று ஒவ்வொரு நாளும் வேகம் வேகமாக படுகொலைகளை நடத்தி, இன அழிப்பை துரிதப்படுத்தி வருகிறது, சிங்கள ராணுவம். போரில்லாத பகுதிக்கு பாதுகாப்புத் தேடி வந்த தமிழ்ப் பெண்களை கட்டாயக் கருத்தடைக்கும், பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கி வருவதோடு, நூற்றுக் கணக்கான தமிழர்களை சித்திரவதை செய்து, படுகொலை செய்து, மண்ணில் புதைத்து வருகிறது. இதைப் பற்றியெல்லாம் இலங்கைத் தமிழர் நல உரிமைக்குழு கண்டிக்காமல் தடுத்து நிறுத்த வலியுறுத்தாமல், அரசியல் தீர்வுத் திட்டத்தை நோக்கி ‘பாய்ச்சல்’ நடத்தி நிகழ்வுப் போக்குகளை திசை திருப்பி விடுகிறது!

ப. சிதம்பரத்தின் கருத்தை வழிமொழிந்து விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே போட்டு இலங்கை ராணுவத்திடம் சரணாகதி அடைந்து, தமிழர்கள் சிங்களர்களிடம் அடிமை முறிச்சிட்டு எழுதித் தரவேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்ட தி.மு.க. இதே கருத்தையே வலியுறுத்தி வரும் சோனியாவிடமும் பிரணாப் முகர்ஜியிடமும் நேரில் வலியுறுத்த என்ன இருக்கிறது?

இனி, இப்படிகூட மனு தருவார்கள், “வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வைவெற்றி பெறச் செய்ய கடும் நடவடிக்கைகளை எடுப்பதோடு, ஜெயலலிதாவின் மக்கள் விரோதப்போக்கை அம்பலப்படுத்தி, பிரச்சாரம் செய்ய வேண்டும்” என்று, கலைஞரிடம் மனு தரப்போவதாக துரைமுருகன் தலைமையிலுள்ள குழு புறப்பட்டாலும், வியப்பதற்கு இல்லை.

தமிழர்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## வெற்றி முளைக்கும்

### தமிழேந்தி

*தில்லியே தில்லியே செந்தமி ழர்க்குநீ*
*கொள்ளியே! கொள்ளியே! கும்பி எரியுதே!*
*நஞ்சினும் கொடிய வஞ்சகம் நிறைந்த*
*நெஞ்சுனக் கென்பது கொஞ்சும் பொய்யோ?*

*வீழ்நாள் வரைஎம் வேர்அ றுக்கவே*
*வாழ்நாட் பகையாய் வந்துவாய்த் தாயோ?*
*காழ்த்து முற்றிய கயமைத் தனத்துடன்*
*சூழ்ச்சிக் குழிகள் தோண்டி வைத்தாயோ?*

*கொத்துக் கொத்தான கொலைகளை நிறுத்தென*
*மொத்தமாய்த் தமிழகப் பேரவை முன்னம்*
*வயிறெரிந்து வடித்த தீர்மா னத்தை*
*மயிரள வேனும் மதித்தா யாநீ?*

*தள்ளாத வயதிலும் எங்கள் தலைவர்கள்*
*உள்ளம் பதற ஓடிவந்து ரைத்தும்*
*இன்ன வரைக்கும் எம்மக் கட்கே*
*என்னநீ கிழித்தாய் எருமை மாடே!*

*இரக்கமே உனக்குக் கொஞ்சமும் இல்லையோ?*
*இன்னும்உன் கல்மனம் கரைய வில்லையோ?*
*பிரணாப் அங்குப்போய் பீற்றிய தென்ன?*
*சொரணை கெட்ட உலக்கையே சொல்நீ!*

*பதவிக்கு உன்முன் பல்இளிப் பவர்கள்*
*பச்சைத் தமிழரைக் காட்டிக் கொடுப்பர்*
*‘உதவிக்கு வருவாய் நீ’ என் றுரைத்தே*
*ஊரை ஏய்த்துக் கண்ணீர் வடிப்பர்*

*ஓநாய் அங்குள்ள இராசபக் சேஎனில்*
*வாயால் பிணந்தின்னும் வஞ்சகப் பேய்நீ*
*டாட்டா பிரல்லா எச்சிலைக்கு வாலை*
*ஆட்டிக் கால்நக்கும் அடிமை நாய்நீ*

*பாழும் பாடையில்,நீ பயணப்பட் டால்தான்*
*வாழும் தேசிய இனங்கள் பிழைக்கும்!*
*ஆழக் குழியில் உனை அடக்கம்செய் தால்தான்*
*ஈழ விடுதலை வெற்றி முளைக்கும்!*

## வரப்பெற்றோம்

*த. அமலா எழுதிய ‘பேராசிரியர் ஏ.டி. கோவூர்’ வரலாற்று நூலை அறிவுச் சுடர் வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது. நூலின் விலை ரூ.15. கிடைக்குமிடம்: 7ஆ, திருகுறும்பீசுவரர் நகர், மலைக் கோயில், திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி-620013. அலைபேசி : 9443380139*

## வளர்ச்சி நிதி

*ஈரோடு, பழைய பாளையம், வாட்க்காரர் தோட்டம் மகமது கவுஸ் மகளும், மேட்டூர் ஆர்.எஸ். கழகத் தோழர் பாபு (எ) முகமது அலி அக்காவின் மகளுமான செல்வி ம. மெஹதாஜ் பர்வீன் (துபாய் நாட்டில் செவிலியராக பணியாற்றும்) ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ2000 வழங்கியுள்ளார். (ஆர்)*

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

## ஜெயலலிதாவின் கபட நாடகம்

***நக்கீரன் வெளியிட்டு வரும் ‘அதிரடி – எதிரடி’ பகுதியில் ஜெயலலிதா கருத்துக்கு பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பதிலை பெற்று வெளியிட்டுள்ளது.***

*இலங்கை தமிழர் பிரச்சினைக்காக இந்த வருடம் என் பிறந்த நாளை கொண்டாடப் போவதில்லை – ஜெயலலிதா.*


*விடுதலை இராசேந்திரன்* – ஈழத் தமிழர்களுக்காக பிறந்த நாளை கொண்டாடப் போவதில்லை என்று ஜெயலலிதா சொல்வது அப்பட்டமான நாடகம். தமிழகத்தில் இன்றைக்கு எழுந்துள்ள ஈழ ஆதரவு எழுச்சியில், தனக்கும் பங்குண்டு என்பதை காட்டிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. அதற்காகத்தான் இந்த நாடகம். ஈழத் தமிழர்கள் மீது அவருக்கு உண்மையாகவே கவலை இருக்குமேயானால் இன அழிப்புக்கு துணை போகும் இந்திய அரசை வலிமையாக ஜெயலலிதா கண்டித்திருக்க வேண்டும். மாறாக, இந்திய அரசின் நடவடிக்கையை ஆதரிப்பதாக கூறுகிறார். போர் என்று வந்துவிட்டால் மக்கள் சாகத்தானே வேண்டும் என்று சொன்னவர் தானே ஜெயலலிதா. ஈழப் பிரச்சினையில் ஜெயலலிதாவின் நிலைப்பாடு என்பது ‘இந்து’ ராம், ‘துக்ளக்’ சோ, சுப்பிரமணியசாமி போன்றவர்களின் குரல்களுக்கு ஆதரவாக இருப்பது தானே தவிர வேறெதுவும் இருக்க முடியாது.

**– நன்றி: ‘நக்கீரன்’ பிப்.18, 2009**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th February 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 பிப்ரவரி 26, 2009 புரட்சி 8 முழக்கம் 07 விலை : ரூ.2.50


### சிங்களனுக்கு ஆயுதம் வழங்க – தமிழன் பணமா?

## வருமான வரி அலுவலகங்களை இழுத்து மூடு!






தமிழர்களைக் கொன்று குவிக்க ஆயுத உதவி வழங்கும் டில்லி ஆட்சிக்கு வரி தர மறுக்கும் போராட்டத்தை 'தமிழர் ஒருங்கிணைப்பு' வருமானவரித் துறை அலுவலகங்கள் முன் கடந்த பிப்.20 ஆம் தேதி நடத்தியது. பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து 'தமிழர் ஒருங்கிணைப்பு' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும்; தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளோடு தொடங்கப்பட்டுள்ள தமிழர் ஒருங்கிணைப்பின் முதல் போராட்டம் இது.

வருமான வரித் துறை அலுவலகத்தை இழுத்து மூடும் போராட்டம் பிப்.20 ஆம் தேதி காலை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித் துறை அலுவலகம் முன் நடந்தது. பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி பொறுப்பாளர் கி.வெங்கட்ராமன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு முன்னிலையில் நடந்த இந்தப் போராட்டத்தில், 70 தோழர்கள் பங்கேற்றனர். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கக் கோரியும், இலங்கைக்கு ஆயுதம் வழங்கும் இந்திய அரசுக்கு வரி தர மாட்டோம் என்ற முழக்கங்களோடு வருமானவரித் துறையை நோக்கி ஊர்வலமாக புறப்பட்டனர். அலுவலகம் அருகே காவல் துறை தடுத்து அனைவரையும் கைது செய்தது. நுங்கம்பாக்கத்திலுள்ள திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டனர். மாலை 4 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

### கோவையில்

கோவை ரேஸ்கோர்ஸ் அருகே உள்ள வருமான வரித்துறை அலுவலகம் முன்பு இழுத்து மூடும் போராட்டம் கழக செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி தலைமையில் நடந்தது. நூற்றுக்கும் அதிகமான தோழர்கள் கைது செய்யப்பட்டனர். திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் துரைசாமி, ரமேஷ், கோவை மாநகர செயலாளர் கோபால், கதிரவன், ஆனைமலை ஒன்றியத்திலிருந்து கா.சு. நாகராசன் மற்றும் தோழர்கள் உள்ளிட்ட 100 பேர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு

தமிழர் ஒருங்கிணைப்பு சார்பில் இந்திய அரசின் வரி அலுவலகங்களை இழுத்து மூடும் போராட்டம் 20.2.2009 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் ஈரோடு வருமான வரி அலுவலகம் முன்பு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கழக மாவட்டச் செயலாளர் இராம.இளங்கோவன் தலைமை வகித்தார். தமிழ் தேசிய விடுதலை இயக்கம் வேலிறையன், தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சி ச.அர. மணிபாரதி, ஈரோடு ப. இரத்தினசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக பன்னீர்செல்வம் பூங்காவிலுள்ள தந்தை பெரியார் சிலை முன்பிருந்து தோழர்கள் ஊர்வலமாக புறப்பட்டனர்.

ஊர்வலம் வருமான வரி அலுவலகம் அருகில் சென்றதும் காவல்துறையினர் அனைவரையும் கைது செய்து, ஆரிய வைஸ்ய திருமண மண்டபத்தில் அடைத்தனர். மாலை 6 மணிக்கு விடுதலை செய்தனர். 113 தோழர்கள் கைதாகினர். இந்த ஊர்வலம் தொடங்கும் முன்பு போராட்டத்தை வாழ்த்தி கீழ்க்கண்ட தோழர்கள் உரையாற்றினர்.

ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் கணேசமூர்த்தி, பா.ம.க. மாவட்ட செயலாளர் எம்.பி.வெங்கடாச்சலம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெங்கடாச்சலம், பி.ஜே.பி. மாநில பிரச்சார அணித் தலைவர் ஆ.சரவணன், ஈரோடு ப. இரத்தினசாமி, தமிழ்தேசிய பொதுவுடைமைக் கட்சி பொதுக்குழு உறுப்பினர் ச.அர. மணிபாரதி, தமிழ் தேசிய விடுதலை இயக்கம் வேலிறையன், கழக மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர். இப்போராட்டம் எழுச்சியாக நடந்தேறியது.

***மேலும், போராட்டச் செய்திகள் அடுத்த இதழில்.***

## ரசாயனக்குண்டுகளும் அழுகிய முட்டைகளும்

*பார்ப்பான் கொலை செய்தால் – அவன் முடியை வெட்டினால் போதும்; சூத்திரன் கொலை செய்தால் – அவன் தலையை வெட்ட வேண்டும் என்று கூறுகிறது 'மனு நீதி'. அந்த மனுநீதி இப்போதும் உயிருடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு சுப்ரமணிய சாமி சம்பவமே சான்று.*

*சில அழுகிய முட்டைகள் நீதிமன்றத்தில் அந்தப் பார்ப்பனர் மீது வீசப்பட்டதால் நாடே அலறுகிறது. பூகம்பம் நிகழ்ந்து விட்டதைப் போல் பார்ப்பன ஏடுகள் பதறுகின்றன. 'இந்து' பார்ப்பன ஏடு ஆசிரியருக்கு கடிதங்களையும், முன்னாள் நீதிபதி கருத்துகளையும், பார்ப்பன சங்க கருத்தையும் கேட்டுப் பெற்று, 2 பக்கங்களை ஒரு தனி மனிதனுக்காக அவன் பார்ப்பான் என்பதற்காக ஒதுக்கி செய்திகளை வெளியிடுகிறது.*

*மிரண்டு போன தமிழக அரசு, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அனுமதி பெறாமலே நீதிமன்றத்துக்குள் காவல்துறையை முறைகேடாக நுழைத்து, வழக்கறிஞர்கள், நீதிபதிகள் மண்டையை உடைக்கிறது. வழக்கறிஞர்கள் கார்களை காவல்துறையே உடைத்து நொறுக்குகிறது. இவ்வளவுக்கும் காரணம் சுப்பிரமணிய சாமி என்ற பார்ப்பான் மீது விழுந்த நான்கு அழுகிய முட்டைகள் தான்.*

*தில்லை நடராசன் கோயிலை தீட்சதப் பார்ப்பனர்களின் சொத்தாகவே நீடிக்க வேண்டும் என்பதற்காக தீட்சதப் பார்ப்பனர்களுக்காக தமிழக அரசை எதிர்த்து, வழக்கில் தன்னை இணைத்துக் கொள்ள வந்தவர்தான் சுப்ரமணியசாமி. ஆனாலும் பார்ப்பன அதிகார மய்யத்தைக் கண்டு ஆடுகிறது, தி.மு.க. அரசு.*

*4 முட்டைகள் பார்ப்பான் மீது விழுந்தால் நூறு 'சூத்திர' வழக்கறிஞர்கள் மண்டை உடைக்கப்படும் என்ற 'மனுநீதி'யை கி.வீரமணி கூறும் "பெரியார் ஆட்சி" நிலைநிறுத்தியிருக்கிறது.*

*ஒவ்வொரு நாளும் முல்லைத் தீவில் போர் நிறுத்தப் பகுதியில் ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் சிங்கள ராணுவத்தின் ரசாயனக் குண்டுவீச்சால் பிணமாகி வரும் செய்திகள் வரும்போது இத்தகைய தீவிரமான நடவடிக்கைகள் எதுவுமில்லை; அரசு பதறவில்லை; பார்ப்பன ஏடுகள் கொதிக்கவில்லை. கேவலம், நான்கு முட்டைகளின் சக்திக்கு முன் ரசயனக் குண்டுகள்கூட வலிமையிழந்து போய்விடுகின்றன.*

*காரணம், முட்டை விழுந்தது – ஒரு பார்ப்பான் மீது; அந்தப் பார்ப்பானுக்கு தமிழ்நாட்டில் அமைப்பு கிடையாது; ஆதரவு கிடையாது. ஆனால், அதிகாரம் – பார்ப்பன அதிகார மய்யம் சூழ்ந்து நிற்கிறது. இதுதான், இந்தியா! இதுதான் தமிழ்நாடு!*

# சர்வதேச சமூகத்திற்கு விடுதலைப் புலிகளின் கோரிக்கை!

போரை நிறுத்தி ஈழத்தமிழினம் தொடர்ந்து தாக்கப்படுவதை தடுத்து நிறுத்த முன் வருமாறு விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் நடேசன் எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் எழுப்பியுள்ள அர்த்தமுள்ள – நியாயமான கருத்துகளை சர்வதேச சமூகம் செவிமடுக்க வேண்டும். அக்கடிதம் முன்வைத்துள்ள முக்கிய கருத்துகளை இவ்வாறு பட்டியலிடலாம்:

1) வடக்கு-கிழக்கு மாநிலங்களை தங்களது பாரம்பரியத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் அவர்களுக்கான தாயகத்தை தேசிய சுயநிர்ணய உரிமையின் கீழ் அமைத்துக் கொள்ள உள்ள உரிமையை 50 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசு ராணுவத்தால் அடக்கி, மைனாரிட்டி மக்களான தமிழர்களை இனப் படுகொலை செய்து வருகிறது. இது அரசு பயங்கரவாதம்.

2) அமைதி வழியில் உரிமைக்குப் போராடிய தமிழர்களுக்கு எதிராக சிங்களக் குடியேற்றங்களைத் திணித்து, தமிழர்களின் கல்வி, வேலை வாய்ப்புகளைப் பறித்து, ராணுவத்தைக் கொண்டு ஒடுக்கியபோதுதான் விடுதலைப் புலிகள் இயக்கம் வரலாற்று ரீதியாக பிறப்பெடுத்தது.

3) வடக்கு கிழக்கு மாநிலங்களில் தமிழர்கள் தாயகத்தை நிறுவும் அரசியல் ரீதியான முடிவுக்கு 1977 இல் தமிழ் மக்கள் தங்களின் அரசியல் கட்சி வழியாக ஏற்பு வழங்கினர். அந்த ஜனநாயக உரிமையை நிறைவேற்றும் தேசியக் கடமையை யாற்றவே விடுதலைப்புலிகள் முன் வந்தனர்.

4) அதனடிப்படையில் கடந்த 30 ஆண்டுகாலமாக விடுதலைப்புலிகளின் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தங்கள் மகத்தான தியாகத்தால் தங்களது ராணுவ நடவடிக்கையால் உலகத்தின் பாராட்டுகளைப் பெற்று கவனத்தை ஈர்த்தனர்.

5) எப்போதெல்லாம் விடுதலைப்புலிகள் ராணுவ ரீதியாக பலமாக விளங்கினார்களோ, அப்போதெல்லாம் அரசியல் தீர்வுக்கு முன் வருவதாகக் கூறி, இலங்கை நாடகமாடி, தனது படை பலத்தை வலிமையாக்கி வந்துள்ளது. 1985 திம்புவில் தொடங்கி, 2002 இல் நார்வே நாட்டின் தலையீட்டால் போர் நிறுத்த ஒப்பந்தம் உருவாகும் வரை இந்த தந்திரத்தையே பின்பற்றினார்கள்.

6) நார்வே மற்றும் நிதி உதவி செய்யும் நாடுகளின் ஆதரவோடு விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே மூன்று ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டன. 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம், சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவும் கட்டமைப்பு, போரில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு உடனடி புனர் வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றும் செயலகங்கள் அமைப்பு என்ற இந்த மூன்று ஒப்பந்தங்களையும் செயல்பட முடியாமல், சீர்குலையச் செய்ததே இலங்கை அரசுதான்.

7) போரை கைவிட்டு, அமைதி பேச்சுவார்த்தை வழியாக தீர்வு காண முன்வருமாறு சர்வதேச நாடுகள் விடுத்த கோரிக்கைகளை முழுமையாக நிராகரித்தது - சிறீலங்கா தான். இது சர்வதேச நாடுகளுக்கே தெரியும். ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும்தான் இலங்கை அரசு - ராணுவ தீர்வை மட்டுமே நம்பியிருப்பதை தொடர்ந்து மிகவும் சரியாக அம்பலப்படுத்தி வந்தது.

8) பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் சிறிலங்கா அரசியல் தீர்வு முயற்சிகளை கைவிட்டு, ராணுவத் தீர்வையே முன்னிறுத்தியது. “பாதுகாப்பு காரணங்களுக்காக” என்று கூறிக் கொண்டு, மக்களுக்கு சேவை செய்த தொண்டு நிறுவனங்களையும், பத்திரிகையாளர்களையும் வெளியேற்றிய சிறீலங்கா அரசு, ராணுவத்தின் மனித உரிமை மீறல்களை துணிவோடு கண்டித்த தொண்டு நிறுவனத்தினரையும் பத்திரிகையாளர்களையும் ‘வெள்ளைப் புலிகள்’ என்று பழி போட்டது.

9) சிறீலங்கா அரசின் எல்லை மீறிய இந்த வன்முறைகளை பொறுமையுடன், சர்வதேச நாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், சிறீலங்காவுக்கு ‘அரசு’ என்ற அங்கீகாரம் இருப்பதால்தான். விடுதலைப் புலிகளின் நேர்மையான - நீதியான போராட்டத்தை சர்வதேசம் நிராகரிப்பதற்குக் காரணம் - ‘அரசு’ என்ற அங்கீகாரம் இல்லாமையே. ஹிட்லர் அரசு முதல் குவாண்டா அரசிலிருந்து சூடான் அரசு வரை, ஆட்சிகள்தான் இனப்படுகொலைகளை நடத்தின. 1956 இல் தொடங்கிய இந்த இனப் படுகொலை வரலாறு - இப்போது மேலும் விரிவடைந்து நிற்கிறது. 200,000-த்துக்கும் அதிகமான மக்கள் 1956 முதல் இனப்படு கொலைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

10) தமிழர்களின் நியாயமான, தனித் தாயக உணர்வை ஆதரிக்கத் தயங்கும் சர்வதேச சமூகம், தனது நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்; தமிழ் - சிங்கள மோதலுக்கு ஒரே நிலையான தீர்வு, தமிழர்களின் தாயகம் உருவாவதுதான். சிங்களப் படை மற்றும் சிங்கள அரசால் நீண்டகாலமாக படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு வரும் தமிழர்கள், விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டு விட்டார்கள். தங்கள் உடைமைகளை இழந்து சொல்ல முடியாத துயர நினைவுகளையும் சுமந்து நிற்கும் தமிழர்கள், அந்த நினைவுகளிலிருந்து விடுபடவே முடியாது. இத்துயரம் தோய்ந்த நினைவுகளோடு, தமிழர்கள் சிங்களர்களோடு ஒன்றுபட்ட இலங்கையில் சமமாக வாழவே முடியாது. இதுவே இன அரசியல் ரீதியான உண்மை.

11) பல்குழல் பீரங்கி, ஏவுகணைகள் போன்ற அழிவு ஆயுதங்களால் நாள்தோறும் அப்பாவித் தமிழர்கள் -அவர்கள் இடம் பெயர்ந்த முகாம்களிலேயே, நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டு வருகிறார்கள். ஏற்கனவே 2000 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். 5000க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். 21-ம் நூற்றாண்டின் மிக மோசமான இனப்படுகொலையை தமிழ் ஈழம் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

12) இந்த நிலையில் சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை ஏற்று, போர் நிறுத்தத்துக்கு உண்மையான நோக்கத்தோடு தயாராகவே உள்ளது. மனித அவலங்களை முடிவுக்கு கொண்டுவர விரும்பு கிறது இந்த போர் நிறுத்தம் - சமரசப் பேச்சு வார்த்தையை நோக்கி முன்னேறவே விரும்புகிறோம்.

13) விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்ற கோரிக்கை - பிரச் சினையின் தீர்வுக்கு உதவாது என்பதை உலகம் கவனத்தில் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் ஆயுதம் தான் தமிழர்களின் பாதுகாப்பு கவசம். அதுவே தமிழர்கள் அரசியல் விடுதலைக்கான கருவி என்பதே அரசியல் எதார்த்தம். தமிழ் மக்களின் பாதுகாப்பு - விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைச் சார்ந்தே உள்ளது. சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று உருவாகும்போது, விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்துவதற்கான அவசியமே நேராது. தமிழ் மக்கள் கொடூரமான இனப் படு கொலைகளை சந்தித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அரசியல் தீர்வு எதுவும் இல்லாத நிலையில் ஆயுதங்களைக் கீழே போடுவது சாத்தியமில்லாதது. அதே நேரத்தில் அரசு நடத்தி வரும் இனப் படுகொலை யுத்தத்தை பாராட்டும் செயலாகவும் அது அமைந்து விடும்.

14) எனவே சர்வதேச சமூகம் இனப்படுகொலையை தடுத்திட போர்நிறுத்தம் செய்யுமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டுகிறோம். இதற்கான அழுத்தத்தை சர்வதேச நாடுகள் உருவாக்கி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உணவு, மருந்து போன்ற அத்யாவசியப் பொருட்களை கிடைத்திடச் செய்ய வேண்டுகிறோம்.

உடனடி போர் நிறுத்தம் கொண்டு வரும் சர்வதேச சமூகத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைத்து, இணைந்து பணியாற்றிடவும், அந்த போர் நிறுத்தம் அரசியல் தீர்வை நோக்கி முன்னேறவும் ஒத்துழைக்க தயாராக உள்ளோம் - என்று விடுதலைப்புலிகள் இயக்கம் சர்வதேச சமூகத்துக்கு வேண்டுகோள் விடுத் துள்ளது.

இந்தியாவின் காதுகளில் இந்த நியாயங்களின் குரல் கேட்கமா? ●

# ‘டெசோ’ கூட்டங்களில் கலைஞர் பேசியது என்ன?

## வரலாற்றிலிருந்து...

ஈழத்தில் – சிங்கள ராணுவம்தான் இந்தியாவின் பேருதவியோடு போரை நடத்துகிறது. விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு தயார் என்று அறிவித்து விட்டார்கள். போரை நிறுத்த மாட்டோம் என்கிறது சிங்களம். புலிகள் ராணுவத்தைக் கலைத்துவிட வேண்டும் என்று சிங்களர் விதிக்கும் நிபந்தனையை தமிழ்நாட்டில் ஆட்சியிலுள்ள தி.மு.க.வும் ஏற்று ‘இருதரப்பு போர் நிறுத்தம்’ என்ற கருத்தை முன் வைத்து மனித சங்கிலியை நடத்தியுள்ளது. மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளதாலும் காங்கிரஸ் கூட்டணியில் இருப்பதாலும் ஈழத் தமிழின உரிமைப் போராட்டத்தை நசுக்கிடும் இந்திய அரசை எதிர்க்காமல் சமரசம் செய்து கொள்ளத் துடிக்கிறது. ஈழப் பிரச்சினையை முன் வைத்து தமிழக ஆட்சியைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்று முதல்வர் அறிக்கைகளை விடுகிறார். இதே கலைஞர் 1985 ஆம் ஆண்டுகளில், ‘ஈழத் தமிழர் விடுதலை அமைப்பு’ (டெசோ) ஒன்றை உருவாக்கி நாடு முழுதும் தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவான பிரச்சார இயக்கத்தை நடத்தியவர்தான். அப்போது ஆட்சியில் இருந்த முதல்வர் எம்.ஜி.ஆர். மீது ஈழத் தமிழர்களுக்காக மத்திய அரசை வலியுறுத்த வில்லை என்று கலைஞர் குற்றம் சாட்டினார். தாங்கள், இப்பிரச்சினையை வைத்து அரசியல் நடத்தவில்லை என்றார். தமிழனுக்கு என்று நாடு வேண்டும் என்றார். தமிழக இளைஞர்களும் ஆயுதம் ஏந்திப் போராடும் காலம் வரும் என்றார். அதே கருத்தினை இப்போது சீமான் பேசினால், மற்றவர்கள் பேசினால், ஒருமைபாட்டுக்கு எதிராக பேசியதாக வழக்குப் போட்டு அதே கலைஞர் சிறையில் தள்ளுகிறார். ஆனால், அன்று எம்.ஜி.ஆர். ஆட்சியோ, இத்தகைய நடவடிக்கைகளை கலைஞர் எடுத்ததில்லை என்பதே உண்மை. கடந்த காலங்களில் கலைஞர் எதிர்கட்சியாக இருந்தபோது மக்களிடம் பேசிய கருத்துகளையே இப்போது தமிழின உணர்வாளர்கள் பேசினால் – கலைஞர் ஆட்சியில் சட்டம் பாய்கிறது. இப்போது மூன்றாவது முறையாக இயக்குனர் சீமான் கைது செய்யப்பட்டு, புதுவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அன்று கலைஞர் பேசிய “வீர முழக்கத்தில்” கால்பங்கைக் கூட பேசிடாத சீமான் – இப்போது சிறையில்!

இளம் தலைமுறையினருக்கு கலைஞரின் அந்த உரைகளை நாம் நினைவுபடுத்த விரும்புகிறோம். ஈழத் தமிழர்களுக்காக தமது கடந்தகால தியாகங்களை கலைஞர் பட்டியலிடும்போது நாம் அவரது கடந்த கால உரைகளையும் இளம் தலைமுறையினருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

1985 அக்டோபர் 3, 4, 5, 6, 7 ஆகிய தேதிகளில் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் கலைஞர் ஆற்றிய உரையைத் தொகுத்து தி.மு.க. தலைமையகமே ஒரு நூலை 1985 ஆம் ஆண்டில் வெளியிட்டது. ‘தமிழனுக்கு ஒரு நாடு தமிழ் ஈழ நாடு’ எனும் தலைப்பில் தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் மறைந்த சி.டி.தண்டபாடி முன்னுரையோடு வெளியிடப்பட்ட அந்த சிறு வெளியீட்டிலிருந்து கலைஞர் உரையின் சில பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம்:

தமிழனாகப் பிறந்ததைத் தவிர வேறு குற்றமென்ன?

(4 ஆம் பக்கம்)

# ‘தமிழீழம் கிடைச்சுட்டா, நம்மளவா கதி என்னாகுமோ’

தமிழ்நாட்டு மக்கள் மீது சோனியா எல்லை மீறிய கோபம் கொண்டிருப்பதாக ஏடுகள் எழுதுகின்றன. விடுதலைப் புலிகளை முற்றாக ஒழிக்க ‘வெஞ்சினம்’ பூண்டு செயல்படும் சோனியாவுக்கு தமிழ்நாட்டில் எழும் உணர்வுகளை சகிக்க முடியவில்லை போலிருக்கிறது. ‘ஜூனியர் விகடன்’ ஏடு இதை வெளிப்படுத்தியிருப்பதோடு தம்மை சந்திக்க வந்த மருத்துவர் இராமதாசிடமும் இதை சோனியா வெளிப்படுத்தியிருப்பதாக எழுதி யுள்ளது. அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழகத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக மிக மோசமாக பார்ப்பன வெறியுடன் செயல்பட்ட போது மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணி இடஒதுக்கீட்டில் உறுதியாக நின்றார். அதுபோல பொதுவிடங்களில் புகை பிடிக்க தடை சட்டம் கொண்டு வருவதிலும் உறுதியாக செயல்பட்டார். மேற்குறிப்பிட்ட இரண்டு நிகழ்வுகளுமே, மத்திய அரசுக்கு தர்ம சங்கடம் ஏற்படுத்தியவை என்று மருத்துவரிடம் கூறிய சோனியா, அப்போதெல்லாம் அன்புமணி பக்கம், மத்திய அரசு நின்றது என்று கூறி, அதேபோல் இலங்கைப் பிரச்சினையில் எங்களை நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது என்று, எச்சரித்ததாக அந்த ஏடு கூறுகிறது.

மத்திய பார்ப்பன அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் திமிர் பிடித்த அறிக்கையைக் கண்டித்து, பா.ம.க., ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவையிலிருந்து வெளிநடப்பு செய்தபோது - சோனியா, அவர்களைக் கடுமையாக முறைத்துப் பார்த்திருக்கிறார்.

“சோனியாவின் முகமூடி இப்போது கிழிந்து விட்டது. எங்களை முறைத்துப் பார்த்தபோது அவருடைய சுயமுகம் நன்றாகத் தெரிந்தது” என்று தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியதாக அந்த ஏடு எழுதியுள்ளது. உயர்நீதிமன்றத்தில் போலீசார் தடியடிக்குப் பிறகு - தமிழக முதல்வரிடம் தொடர்பு கொண்டு பேசிய சோனியா, தொடக்கத்திலேயே மாநில அரசு வழக்கறிஞருக்கு எதிராக கடுமையாக செயல்பட்டிருந்தால் இதைத் தடுத்திருக்க முடியும் என்று கண்டிப்பாகவே தொலைபேசியில் கூறியதாக - ‘ஜுனியர் விகடன்’ குறிப்பிட்டுள்ளது. மற்றொரு அதிர்ச்சியான தகவலையும் ‘சூசகமாக’ வெளியிட்டிருக்கிறது. அதிகாரபூர்வமற்ற முறையில் ரகசியமாக ஈழத்தில் தமிழர்களுக்கு எதிரான போரில் இந்தியா தன்னை இணைத்துக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்திய தோடு, தேவைப்பட்டால், வெளிப்படையாகவும் களம் இறங்கத் தயார் என்று சோனியா சிங்களத்துக்கு தகவல் தெரிவித்துள்ளாராம். சோனியாவே - வெளிநாட்டுத் தலைவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு - ஈழத் தமிழர்களுக்கு உதவிட வேண்டாம் என்று பேசி வருவதால்தான், உலகம் மவுனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும் அந்த செய்தி கூறுகிறது.

## தன்மானமுள்ள தமிழருவி மணியன்

காங்கிரசின் துரோகத்தை எதிர்த்து சீர்காழியில் இரவிச்சந்திரன் என்ற காங்கிரசுத் தமிழன் தீக்குளித்தான். உணர்வுள்ள காமராசர் வழி வந்த காங்கிரசுத் தமிழர்களால் இந்த பார்ப்பனிய துரோகங்களை சகிக்க முடியவில்லை என்பதற்கு மற்றொரு சான்றாகத் திகழ்கிறவர், தமிழருவி மணியன். காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநில பொதுச் செயலாளரான அவர் மதுரையில் செய்தியாளர் களிடம் தனது தமிழின உள்ளத்தைத் திறந்து காட்டிவிட்டார்.

“இராசபக்சேவின் பாஸ்பரஸ் வெடிகுண்டு களால் நாள்தோறும் கொத்துக்கொத்தாய் தமிழினம் அழிந்துக் கொண்டிருக்கும் சூழலில், சோனியாகாந்தி ஈழத் தமிழரின் நிலை குறித்து இன்று வரை வாய் திறக்கவில்லை. இவருடைய தலைமையில் இயங்கும் காகித நியமன காங்கிரசில், என் மொழி, இன அடையாளங்களை அடகு வைக்க என் இதயம் இடம் தரவில்லை. எனவே நான் இன்று முதல், அகில இந்திய காங்கிரஸ் குழு உறுப்பினர், மாநிலப் பொதுச்செயலாளர் அடிப்படை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளிலிருந்து விடுபடுகிறேன்” - என்று அறிவித்துள்ளார். கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். அப்போது, “பெரியார் 1925 இல் காங்கிரசை ஒழித்தே தீர வேண்டும் என்று கூறிய கருத்தின் நியாயத்தை - 40 ஆண்டுகால காங்கிரஸ் கட்சியின் அனுபவத்துக்குப் பிறகு உணருகிறேன். இனி எந்த அரசியல் கட்சியிலும் நான் சேரப் போவதில்லை. நாம், ஒரே தளத்தில் செயல்படக் கூடிய வாய்ப்புகள் எதிர்காலத்தில் இருக்கின்றன” என்று உணர்ச்சி பூர்வமாகக் குறிப்பிட்டார். தன்மானமுள்ள அந்தத் தமிழனின் எழுத்தும் பேச்சும் தமிழின உரிமைப் போருக்கு வலிமை சேர்க்க வாழ்த்துவோம்.

## சோ – சு.சாமி

சு. சாமிக்கு முட்டை அடி கிடைத்தவுடன், அவரது இல்லம் நோக்கி, ஓடோடி ஆறுதல் கூறச் சென்றவர் துக்ளக் சோ பார்ப்பனர். ‘நேரா முகத்தை நோக்கி முட்டையை வீசுகிறான் பாருங்கோ; பெரியார் காலத்துல கூட பேசிண்டுதான் இருந்தா; இப்போதுதான், இப்படி எல்லாம் நடக்குது; இப்பவே இந்த நிலையின்னா, ‘தமிழ் ஈழம்’ கிடைச் சுட்டதுன்னா நம்மளவா கதி என்னவாகுமோ” என்று சோவும், சுப்ரமணிய சாமியும் தங்கள் உணர்வு களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். ‘நக்கீரன்’ ஏடு - இந்த உரையாடலைப் பதிவு செய்துள்ளது. சு.சாமியால் பெரியார் திராவிடர் கழகத்தை மட்டும் மறக்க முடியவில்லை. “என் மீது தாக்குதல் நடத்தியவர்கள் எல்லாம் பெரியார் திராவிடர் கழகம், நக்சலைட், விடுதலை சிறுத்தைகள் ஆட்கள் தான்” என்று ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ ஏட்டுக்கு அளித்த பேட்டியில் புலம்பியுள்ளார்.

## நமது பார்வையில்

## ‘முரசொலி’யும் அரசுடைமையும்

தமிழ்நாட்டில் இதுவரை - 95 சிந்தனை யாளர்கள் - தமிழறிஞர்கள் நூல்கள் அரசுடைமை யாக்கப்பட்டுள்ளன. இதில் தி.மு.க. நடப்பு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள 28 அறிஞர்கள் நூல் களோடு 87 தமிழறிஞர்கள் நூல்களை அரசுடைமை யாக்கியுள்ளது. 2006 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு 65 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப் பட்டு, மரபு உரிமையாளர்களுக்கான பரிவுத் தொகையாக ரூ.4 கோடியே 86 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பிப்.17 ஆம் தேதி சட்டப்பேரவையில் நிதியமைச்சர் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையில், கவிஞர் கண்ணதாசன், சுந்தர ராமசாமி ஆகியோர் நூல்களை அரசுடைமையாக்கும் அறிவிப்புக்கு அவர்களின் குடும்பத்தாரிடமிருந்து எதிர்ப்பு வந்து விட்டது. கண்ணதாசன் மீது தான் கொண்டிருந்த அளவற்ற பற்றின் காரணமாகவே இந்த முடிவை எடுத்ததாக கலைஞர் - கண்ணதாசன் மகன் காந்தி கண்ணதாசனுக்கு கடிதம் எழுதியுள்ளார். அவரது குடும்பத்தைக் கலந்து ஆலோசிக்காமலே கண்ணதாசன் நூல்களை அரசுடைமையாக்குவதில் அவ்வளவு பற்றுக் காட்டும் கலைஞர், பெரியார் நூல்களை அரசுடைமையாக்காதது ஏன்? பெரியார் மீது அவருக்கு பற்று கிடையாதா?” என்று கழகத் தோழர் நெமிலி திலீபன் உடனே தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார். நல்ல கேள்விதான். பெரியார் மீது உள்ள பற்றைவிட இப்போது வீரமணி மீது கூடுதல் பற்று இருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் கலைஞர் இருக்கிறார், போலும்!

பெரியாரிய சிந்தனையாளர் தோழர் எஸ்.வி.ராஜ துரை, பெரியார் நூல்களை மட்டும் நாட்டுடைமை யாக்காமல், கலைஞரும் - வீரமணியும் முட்டுக் கட்டைப் போடுவது ஏன் என்ற நியாயமான கேள்வியை எழுப்பியிருக்கிறார். இது தொடர்பாக ‘முரசொலி’யில் சின்னக் குத்தூசி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். பெரியார் நூல்களை அரசுடைமை யாக்க வேண்டுமா என்பது பற்றிய வழக்கு ஒன்று விசாரணையில் இருப்பதால், அது பற்றி எதுவும் சொல்வதற்கு இல்லை என்கிறார் சின்ன குத்தூசி. ‘குடிஅரசு’ ஏட்டில் பெரியாரின் எழுத்துப் பேச்சுகளை ஆண்டுவாரியாக தொகுத்து பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டபோதுதான் கி.வீரமணி அதற்கு தடை கோரும் வழக்கினை தொடர்ந்தார். இந்த வழக்கு தொடரப்பட்டது 6 மாத காலத்துக்கு முன்புதான். 2006 ஆம் ஆண்டிலிருந்து அரசு பொறுப்பேற்று 65 தமிழறிஞர் நூல்களை நாட்டுடைமையாக்கிய தமிழக அரசுக்கு பெரியார் நினைவுக்கே வராமல் போய்விட்டதா என்பதை மிகச் சிறந்த நினைவாற்றல் உள்ள சின்னக்குத்தூசி அவர்கள் தான் விளக்க வேண்டும். உ.வே.சா. நூல்களை அவரது அறக்கட்டளைதான் வெளியிட வேண்டும் என்று கூறுவதுபோல் பெரியார் நூல்களை அவர் தொடங்கிய அறக்கட்டளை வெளியிட்டு வருவதாக “பெரியார் கண்ட திராவிடர் கழகத்தினர்” கூறுவதால் தமிழக அரசு நாட்டுடைமையாக்கவில்லை என்று சமாதானம் கூறுகிறார், சின்னக் குத்தூசி.

நூல்கள் நாட்டுடைமையாக்குவதற்கான காரணங்களை விளக்கும் சின்னக் குத்தூசி - “மறைமலையடிகள், திரு.வி.க. போன்றோரின் நூல்கள் வெகுகாலத்துக்குப் பிறகும் மறுபதிப்புச் செய்யப்படாமல் நூலகங்களில் மட்டுமே காணக் கூடியவைகளாக இருந்த நிலையை மாற்றி - இந்தப் புதிய தலைமுறையினர் அனைவரது கரங்களிலும் திகழச் செய்ய வேண்டும் என்பது ஒரு காரணம்” என்கிறார். ‘கல்கி’யின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்ட பிறகுதான், இன்றும் புத்தகச் சந்தைகளில் ‘கல்கி’ நூல்கள் பல்லாயிரக்கணக்கில் விற்பனையாகி சாதனை படைத்துக் கொண் டிருப்பதை பூரிப்போடு எடுத்துக் காட்டுகிறார். இப்படி இளம் தலைமுறையினரிடம் கொண்டு செல்லவும் - பல்லாயிரக்கணக்கில் புத்தக சந்தைகளில் விற்கப்படுவதற்குமான தேவையும் - அவசியமும், பெரியார் சிந்தனைகளுக்கு இல்லையா என்பதே நமது கேள்வி! சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிட்டு வரும் பெரியார் நூல்கள் அப்படி புத்தக சந்தைகள் முழுதும் விற்கப்படவில்லை என்பதோடு, ஒரு குறிப்பிட்ட ‘வட்டத்துக்குள்’ முடங்கிப் போய் நிற்பது சின்னக்குத்தூசிக்குத் தெரியாதா?

பெரியார் கருத்துகளை - வீரமணி தவிர, வேறு யாரேனும் வெளியிட்டுவிட்டால் திரித்து விடு வார்கள் என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது.

பெரியாருடைய தனித்துவம் வாய்ந்த பேச்சும் - எழுத்தும் எவருமே திருத்தி - திரிபுவாதம் செய்ய முடியாமல் ‘வெட்டு ஒன்று - துண்டு இரண்டாக’ இருப்பது தானே! ‘நெளிவு சுளிவுகளுக்கு’ திரிபு வாதங்களுக்கு இடம் தராமல் இன்று வரை ‘பார்ப்பன’ சக்திகள் தங்களுக்கு சாதகமாக கையில் எடுத்துக் கொள்ளாத ‘நெருப்புத் துண்டமாக’ விளங்கும் பெரியார் கருத்துகளை எவராலும் திரித்து விட முடியாது. அத்தகைய பேச்சு எழுத்துகளை வெளிவராமல் இருட்டடிப்புக்கு உள்ளாக்குவதுதான் - ஆபத்து. தங்களது திரிபுவாதங்களுக்கு ஏற்ப பெரியார் அறக்கட்டளையின் உரிமையாளர் கி.வீரமணி தான், இத்தகைய இருட்டடிப்புகளை செய்து கொண்டிருக்கிறார். காலவரிசைப்படி பெரியார் எழுத்து பேச்சுகளைத் தொகுக்காமல், தலைப்புகளின் கீழ் பெரியார் கருத்துகளை வெட்டியும் சுருக்கியும் வெளியிடுவது, பெரியார் பற்றிய முழுமையான பரிமாணத்தை மறைக்கும் இருட்டடிப்புதானே! அதைத் தானே வீரமணி செய்து வருகிறார்! பெரியார் சிந்தனையாளராக திராவிடர் இயக்க எழுத்தாளராக அடையாளப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சின்னக் குத்தூசி அவர்கள் அழுத்தமாகக் குரல் கொடுக்க வேண்டிய கடமையிலிருந்து விலகி, இதிலும் தி.மு.க.வின் - வீரமணியின் வழக்கறிஞராகவே தன்னுடைய அடையாளத்தைப் பதிவு செய்யலாமா, என்பதே நமது கேள்வி.

**– இரா**

## ஒரு மாதமாக சிறையில் வாடும் கோவை தோழர்கள்

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்திய முழு அடைப்பையொட்டி கைது செய்யப்பட்ட கோவை கழகத் தோழர்கள் கடந்த ஒரு மாதகாலமாக கோவை சிறையில் உள்ளனர். வழக்கறிஞர் வேலை நிறுத்தம் காரணமாக அவர்கள் பிணை மனு விசாரணைக்கு வரவில்லை. திருமலைராயன் பாளையம் ராமலிங்கம், சித்தாபுதூர் தமிழரசன், ஆவாரம்பாளையம் இளங்கோ, கணேஷ் ஆகியோர் சிறையில் வாடும் தோழர்கள் ஆவர். அவர்களுக்காக தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மார்ச் 4 ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# வரலாறு காணாத இனப்படுகொலைக்கு சிங்களம் தயாராகிறது?

பல்வேறு மதப் பிரிவைச் சார்ந்த தமிழர்களும், கடவுள் மத மறுப்பாளர்களான பெரியாரியல்வாதிகளும், மாணவர்களும், மாணவிகளும் அரசியலுக்கு அப்பாற்பட்ட பெண்களும் ஒன்றாக இணைந்து ஈழத்தில் நடக்கும் இன அழித்தலுக்கு எதிரான பேரணியை சென்னையில் கடந்த பிப்.22 ஞாயிறு மாலை நடத்தினர். பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்ட அந்த பேரணி அமைதிப் பேரணி என்று அறிவிக்கப்பட்டாலும் உணர்வுகள் வெடித்து முழக்கப் பேரணியாகியது. சென்னை 'போர்வீரர்கள்' நினைவகத்திலிருந்து பெரியார் சிலை வரை 'இன அழித்தலுக்கு எதிரான இந்தியர்கள் அமைதிப் பேரணி' என்ற பெயரில் நடந்த அந்தப் பேரணியை அருட்திரு ஜெகத்கஸ்பார், மருத்துவர் எழிலன் ஆகியோர் உணர்வுள்ள இளம் செயல் வீரர்களோடு இணைந்து ஒருங்கிணைத்திருந்தனர்.




பேரணியைத் தொடங்கி வைத்துப் பேசிய அருட்திரு. ஜெகத் கஸ்பார் அடுத்த சில வாரங்களில் பல லட்சம் தமிழர்களை முல்லைத்தீவில் கொன்று ஒழிக்கும் இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் இனப் படுகொலையை நடத்தி முடித்திட சிங்களம் முடிவெடுத்து விட்டதை நம்பகத்தன்மை மிக்க மனித உரிமை அமைப்புகளின் தகவல்களிலிருந்து எடுத்துக்காட்டினார். அந்த செய்தி அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்தது. தமிழினப் படுகொலைக்கு துணை நின்று தமிழர்களின் நியாயமான உணர்வுகளை இருட்டடித்து, ஒரு சார்பாக செயல்படும் ஆங்கில ஊடகங்களை மருத்துவர் எழிலன் எச்சரித்தார். சமூக நீதி தளத்திலிருந்து வளர்ந்து வரும் தமிழகத்தின் இளைய தலைமுறை இந்த ஆங்கில ஊடகங்களின் துரோகத்தை கண் காணித்து வருகிறது என்று பேரணியின் இறுதியில் எச்சரிக்கை விடப்பட்டது. பேரணியின் இறுதியில் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த மக்களின் கரவொலிகளுக்கிடையே கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாணவர் சமூகத்தின் சார்பில் செந்தில் தீர்மானங்களை படித்தார். தீர்மானங்களின் விவரம்:

- ஸ்ரீலங்கா ராஜபக்சே அரசு தமிழ் மக்கள் மீது நடத்தும் இன அழித்தல் யுத்தத்தை தடுத்து நிறுத்தும் உடனடி முயற்சிகள் எடுத்திட இந்திய அரசை வேண்டுகிறோம்.
- இந்திய அரசே, தமிழ் மக்களின் தியாகங்கள் நிறைந்த நீண்ட போராட்ட வரலாற்றினை கருத்திற் கொண்டு, அவர்தம் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் நிரந்தர அரசியல் தீர்வு பேச்சு வார்த்தைகள் தொடங்க ஸ்ரீலங்கா அரசை வலியுறுத்து.
- முல்லைத் தீவு பகுதியில்220000 தமிழர்கள் உணவு, மருந்துப் பொருட்களின்றியும், விமான, எறிகணை குண்டு வீச்சுகளாலும் புழுப்பூச்சிகள் போல் செத்து மடிகின்றனர். சமீப நாட்களாக அங்கு வெறும் 70000 மக்கள் மட்டுமே இருப்பதாய் ஸ்ரீலங்கா அரசு கூறத் தொடங்கியுள்ளது. இது வரும் வாரங்களில் லட்சத்திற்கும் மேலான தமிழர்களை ஈவிரக்கமின்றி படு கொலை செய்யும் சதியோ என அஞ்சுகிறோம். இந்த நூற்றாண்டின் மிகக் கொடூரமான படுகொலையாக முடியப்போகும் இப் பேரழிவினை உடனடியாகத் தடுத்து நிறுத்த இந்திய அரசையும் உலக நாடுகளையும் வேண்டுகிறோம்.
- ஸ்ரீலங்கா அரசு 30 ஆண்டுகளாய் தமிழ் மக்களுக்கெதிராகப் புரிந்த மனித உரிமை மீறல்கள், அனைத்தையும் விசாரித்து, பதிவு செய்து நீதி வழங்க அனைத்துலக போர்க்குற்ற நீதியமையம் அமைக்க ஐ.நா. பாதுகாப்பு அவை தீர்மானம் கொணர இந்தியா முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். கடந்த பல ஆண்டுகளாய் இந்தியாவின் வெளியுறவு வளங்கள் ஸ்ரீலங்காவின் தமிழர் அழிப்பு போரை நியாயப் படுத்தவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த அணுகுமுறையில் உறுதியான மாற்றத்தை இந்திய அரசிடம் வேண்டுகிறோம்.
- இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், சீனா நாடுகளின் சுயநல அபிலாஷைகள் ஈழத் தமிழ் மக்களின் துன்பங்களுக்கு முக்கியமானதோர் காரணம். இந்நாடுகள் ஆறரை கோடி இந்திய தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து போர் நிறுத்தம் கொணரவும், ஸ்ரீலங்கா மீது போர்க் குற்ற நீதி மையம் அமைக்கவும் ஐ.நா. பாதுகாப்பு அவை தீர்மானம் கொணர்ந்திட வேண்டுகிறோம்.
- ஈழத் தமிழ் மக்கள் பேரழிவின் விளிம்பில் நிற்கும் இக்காலத்தில் தமிழக அரசியற் கட்சிகள் தேர்தல் அரசியலின் சிக்கல்களின்று மேலெழுந்து ஒரே குரலாய் ஒலிக்க வேண்டுமெனவும் மன்றாடுகிறோம்.
- இன அழித்தலுக்கெதிரான இந்தியர்கள் அமைப்புடன் இணைந்து செயற்பட மனிதநேயம் கொண்ட அனைவரையும் அழைக்கிறோம். ●

# கலைஞர் பேசியதை சீமான் பேசினால் குற்றமா?

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

மொராக்கோ நாட்டில் நடைபெறும் கொரில்லாப் போராட்டத்திற்கு இந்திய அரசு அங்கீகாரம் அளித்திருக்கிறது. இதனால் மொராக்கோ கோபம் கொண்டு இந்திய அரசுடன் தனது உறவுகளை துண்டித்துக் கொண்டது.

அதேபோல பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இந்திய அரசு அங்கீகாரம் அளித்திருக்கிறது. பாலஸ்தீன இயக்கத்தின் விடுதலை முகாமை இஸ்ரேல் விமானங்கள் டுனீஷியா நாட்டில் தாக்கின; அராபத்தைக் கொல்ல முயன்றது - நல்லவேளை அராபத் காப்பாற்றப்பட்டு விட்டார் - அந்த விடுதலை முகாம் அழிக்கப் பட்டது.

உடனடியாக இந்திய அரசு "இது மனித நாகரிக வளர்ச்சிக்கு விடப்பட்ட சவால். இதை இந்தியா கண்டிக்கிறது" என்று அழுத்தம் திருத்தமாக - ஆவேசமாக தன்னுடைய மனப்பாதிப்பை வெளியிடுகிறது.

நான் கேட்பதெல்லாம், மொராக்கோவில் போராடுகின்ற கொரில்லாக்களுக்கு தரப்படுகின்ற அங்கீகாரத்தை - பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு தரப்படுகின்ற அங்கீகாரத்தை - இலங்கையிலே போராடுகின்ற தமிழர்களுக்கு ஏன் தரவில்லை? நாங்கள் தமிழனாகப் பிறந்ததைத் தவிர வேறு என்ன குற்றம் செய்தோம்?

**தமிழனாகப் பிறந்தது குற்றமா? கேவலமா? அப்படியென்றால் தமிழ் நாட்டை இணைத்து ஆள்வது உங்களுக்குக் கேவலமல்லவா? அனுப்பி விடுங்களேன். வெளியே எங்களை என்று கேட்க மாட்டோமா? இப்படிக் கேட்பதால் கருணாநிதி பிரிவினைவாதம் பேசுகிறார் என்று காங்கிரஸ் நண்பர்கள் சொல்வார்களேயானால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.**

இன்றைக்கு பிரிவினைக் கொடியை - பிரிவினை கீதத்தை காஷ்மீரில் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

காஷ்மீர் ஆளுநர் ஜக்மோகன் மத்தியிலே உள்ள உள்துறை அமைச்சகத்திற்கு ஒரு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தில் "காஷ்மீரில் நடைபெறுகின்ற ஷா அரசு (காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் துணையோடு நடைபெறுகின்ற அரசு) பிரிவினை வாதத்திற்கு துணை போகிறது; உதாரணம் தேவை என்றால், ஆகஸ்டு 14 ஆம் நாள் பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்த நாள்!

ஆகஸ்டு 14 ஆம் நாள் காஷ்மீர் மாநிலத்தில் 50 இடங்களில் பாகிஸ்தான் கொடி ஏற்றப்பட்டது. பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்ததை காஷ்மீரில் உள்ளவர்கள் கொண்டாடினார்கள். இது மாநிலத்தில் உள்ள ஷா அரசுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்று எழுதியுள்ளார். அப்படிப்பட்ட அரசை அங்கே முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்தி பரூக் அப்துல்லாவுக்கு எதிராக அதை உருவாக்கியவர்கள் யார்?"

**காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும் மத்தியிலே உள்ள இந்திரா காங்கிரஸ் தலைமையும்தான்.**

**இவர்களுக்கு பிரிவினையைப் பற்றிப் பேச என்ன தகுதியிருக்கிறது? என்ன யோக்கியதை இருக்கிறது?**

காஷ்மீரில் பாகிஸ்தான் கொடி ஏற்றுவதைத் தடுக்க வகையில்லை, வக்கு இல்லை; தெம்பில்லை; திராணியில்லை. முன்கூட்டி தெரிந்திருந்தும் யார் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதுபற்றி கவர்னர் மத்திய அரசுக்கு எழுதியிருந்தும் இன்னும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தயங்கிக் கொண்டிருக்கிறது. எனவேதான் இவர்களுடைய தேசியம், வேறு யார் எதிர்த்தாலும் அங்கெல்லாம் விசுவரூபம் எடுக்காது.

**இந்தப் பாவப்பட்ட தமிழன் இருக்கிறானே – தமிழன் என்று சொன்னால் – தமிழ் இனம் என்று சொன்னால் – தமிழனுடைய உரிமை என்று சொன்னால் – அங்கே தான் அந்த தேசியம் வேகமாக வந்து பாய்ந்து குதறும். தமிழனுடைய உரிமையை நிலைநாட்ட பக்கத்து நாட்டிலே அழிந்து கொண்டிருக்கின்ற தமிழினத்தை காப்பாற்று என்று சொல்வது தேசியத்திற்கு விரோதம் என்று காங்கிரஸ் நண்பர்கள் சொல்வார்களேயானால், இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற நானோ பேராசிரியரோ, வீரமணியோ, நெடுமாறனோ, அய்யணன் அம்பலமோ ஆதீனகர்த்தரோ மற்றவர்களோ, பாடுபடுவது ராஜ துரோகம் என்று சொன்னால், நாங்கள் அந்தக் குற்றத்தை செய்து கொண்டேயிருக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.**

**நாங்கள் மாத்திரம் அல்ல – தமிழ்ச் சமுதாயமே தயாராயிருக்கிறது என்பதை தெரிவிக்கத்தான் நாம் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.**

*- இப்படி அன்று ஒருமைப்பாட்டுக்கு தேசியத்துக்கு சவால்விட்ட கலைஞர், அதே உணர்வை இப்போது வெளிப்படுத்தும் சீமான்களை சிறையில் அடைப்பது ஏன்?*

**(கலைஞர் போர் முழக்கம் தொடரும்)**

**அடுத்த இதழில்**
**ராஜீவ் கொலையில்**
**சு.சாமியின் தொடர்புகள்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th February 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.